# தமிழரசு



16-12-1987 ரு. 1



பல்வேறு சமூக சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களது கோரிக்கைகளைக் கேட்டறிந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 7.12.87 அன்று நரிக்குறவர் சங்கத்தின் சார்பில் கலந்து கொண்ட கணவன்-மனைவிக்கு வேட்டி-சேலை வழங்கினார்.



# சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமருக்கு தமிழகத்தின் தலைநகரில் திருவுருவச் சிலை



## பண்டித ஜவஹர்லால் நேரு-தீரர் சத்தியமூர்த்தி சிலை திறப்பு விழாச் சிறப்பிதழ்

சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு. இந்திய விடுதலை வரலாற்றில் அவருக்குச் சிறப்பிடம் உண்டு.

மனித குல மாணிக்கம், நவபாரதச் சிற்பி, ஆசியாவின் ஜோதி, உலக சமாதானத்துக்காகப் போராடிய மாவீரர் என்று அனைவராலும் பாராட்டப்பட்ட அந்த உத்தமரைப் போற்றும் வகையில், அவரது திருவுருவச் சிலை சென்னையில் திறக்கப்படவுள்ளது.

"ஆலைகளும் தொழிற்சாலைகளுமே இந்தியாவின் ஆலயங்கள்" என்று பெருமைப்படுத்திக் கூறியவர் நேரு. அவரது உருவச் சிலை தொழிற்பேட்டை அமைந்துள்ள கிண்டிக்கு அருகில் உள்ள கத்திப்பாரா சந்திப்பில் நிறுவப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள்தான் இந்தச் சிலையைத் திறக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் விருப்பம் தெரிவித்தார்.

அந்த விருப்பத்தை நிறைவேற்றும் வகையில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவாகள் 21.12.87 திங்கட்கிழமை அன்று நேரு சிலையைத் திறந்து வைக்கிறார்.

முதல் தரமான வெண்கலத்தினால் உருவாக்கப்பட்டுள்ள அந்தச் சிலையின் உயரம் 10 அடி ஆகும். பீடத்தின் உயரம் 20 அடி ஆகும்.

சிலையின் சிற்ப வேலைப்பாடுகளுக்கு ரூ. 7 இலட்சத்து 10 ஆயிரம், கான்கிரீட் வேலைகள் மற்றும் சுற்றுப்புற மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ. 3 இலட்சத்து 40 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது. பீடம் கட்டுவதற்கு ரூ.86,500 அனுமதிக்கப்பட்டுள்ளது.

கல் சிற்ப வேலைப்பாடுகள் மாமல்லபுரம் அரசு சிற்பக் கலைக் கல்லூரி முதல்வர் திரு கணபதி ஸ்தபதியின் பொறுப்பிலும், ஏனைய பணிகள், பீடம் கட்டுதல் ஆகியவை பொதுப்பணித்துறையின் பொறுப்பிலும் விடப்பட்டன.

சிலை உருவாக்கும் பணி சிற்பி மணி நாகப்பா அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அதற்காக அவருக்கு வழங்கப்படும் தொகை ரூ.89 ஆயிரம். ஏற்கெனவே செய்யப்பட்டுள்ள களிமண் வார்ப்பிற்குச் செலவான தொகை ரூ. 25 ஆயிரம். மொத்தம் சிலைக்குச் செலவாகியுள்ள தொகை ரூ. 12 லட்சத்து 50 ஆயிரத்து 500 ஆகும்.

சிற்பி மணி நாகப்பா பரம்பரைச் சிற்பி ஆவார். இவரது தாத்தா கிரானைட் சிற்பங்கள், மரச்சிற்பங்கள் ஆகியவற்றை உருவாக்குவதில் வல்லவர். நாகப்பாவின் தந்தை எம். எஸ். நாகப்பா சலவைக் கல் சிற்பங்கள், வெண்கலச் சிற்பங்கள் அமைப்பதில் தென்னிந்தியாவிலேயே புகழ் பெற்றவர் ஆவார்.

தந்தை ஆற்றி வந்த பணியை மகன் கடந்த 40 ஆண்டுகளாக மிகச் சிறப்பாக ஆற்றி வருகிறார்.

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2018

பிரபவ - மார்கழி 1

மலர் : 18 16-12-1987 இதழ் : 12

# புதுக்கோட்டையில் தீரர் சத்தியமூர்த்தி திருவுருவச் சிலை



தீரர் சத்தியமூர்த்தியின் நூற்றாண்டு விழாத் தொடர்பாக புதுக்கோட்டையில் அவரது திருவுருவச் சிலை ஒன்றினைத் தமிழக அரசு நிறுவுகிறது.

மாண்புமிகு பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்கள் இந்தச் சிலையைப் புதுக்கோட்டையில் 21.12.87 அன்று திறந்து வைக்கிறார்கள்.

தரமான வெண்கலத்தினால் ஆன இந்த உருவச் சிலை உருவாவதற்கு ஆகிய செலவு ரூ. 37 ஆயிரம். இந்தச் சிலையை வடித்துத் தரும் பொறுப்பு சிற்பி ஆர்.ஜெகந்நாதன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



## சோவியத் கலாச்சார விழா

சென்னையில் 14.12.87 அன்று நடைபெற்ற சோவியத் கலாச்சார விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், கலாச்சாரக் குழுவின் தலைவர் திரு மொய்சியேவ் அவர்களுக்கு மாலை அணிவித்தார்கள்.



அமெரிக்க அதிபர் ரீகன்



ரஷ்யத் தலைவர் கோர்பசேவ்

அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டன் நகரில் அணு ஆயுத ஒழிப்பு ஒப்பந்தத்தில், ரஷ்யத்தலைவர் திரு கோர்பசேவும் அமெரிக்க அதிபர் திரு ரீகன் அவர்களும் கையெழுத்திட்டனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஒப்பந்தம் இந்திய நேரப்படி 8.12.87 அன்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12.34 மணிக்குக் கையெழுத்தாகியது. அப்போது அமெரிக்காவில் செவ்வாய் பகல் 1 மணி.

சிறப்புமிக்க இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதை வரவேற்று உலகத் தலைவர்கள் பலர் வாழ்த்துச் செய்தி அனுப்பி உள்ளனர்.

# அமெரிக்கா-ரஷ்யா அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம்:

## மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்த்துச் செய்தி



"உலக மக்களின் ஒருமித்த எண்ணத்தைப் பிரதிபலிக்கும் வகையில் இன்று (8.12.87) அமெரிக்க அதிபர் ரீகன் அவர்களும், ரஷ்யத் தலைவர் கோர்பசேவ் அவர்களும் வாஷிங்டன் நகரில் அணுஆயுதக் குறைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

"இந்த ஒப்பந்தம் அமைதி விரும்பும் உலக மக்கள் அனைவராலும் வரவேற்கப்படக்கூடிய ஒன்றாகும். மனித இனத்தின் அமைதியான வாழ்க்கை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, மற்ற கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி வைத்து இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்தியதன் மூலம் இவ்விரு தலைவர்களும் வரலாற்றில் அழிக்க முடியாத இடத்தைப் பெறுகின்றனர்.

"உலக அழிவிற்கு வழிவகுக்கும் அணு ஆயுதங்களை ஒழிக்க வேண்டுமென்றும், உலக அமைதிக்கும் வழிகோல வேண்டுமென்றும் வல்லரசுகளை இந்தியா பல ஆண்டுகளாக வேண்டி வந்துள்ளது. அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யக்கூடாது, இருக்கும் அணு ஆயுதங்களை ஒழிக்க வேண்டுமென்ற ஒருமித்த கருத்தை உலக நாடுகள் மத்தியில் உருவாக்க பண்டித நேரு முதல் அன்னை இந்திரா வரை நம் தலைவர்கள் அரும்பாடுபட்டனர். நமது பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட நாள் முதலே உலகச் சமாதானத்திற்கும், அணு ஆயுத ஒழிப்பிற்கும் பெருமுயற்சி மேற்கொண்டு உலகத் தலைவர்கள் அனைவரையும் சந்தித்து வலியுறுத்தி வந்துள்ளார்.

"அணி சேரா நாடுகள் கூட்டமைப்பு, தெற்காசிய நாடுகள் அமைப்பு ஆகியவற்றின் கூட்டங்களை இந்தியாவில் கூட்டி, அணு ஆயுத ஒழிப்பிற்கு உலக மக்களின் ஒருமித்த குரலை ஒலிக்கச் செய்தவர் நமது பிரதமர் அவர்கள். உலக நாடுகள் சபையிலும், காமன்வெல்த் மாநாட்டிலும் பலமுறை இதுபற்றி வலியுறுத்தி வல்லரசுகளின் கவனத்தை ஈர்த்தவர் அவர்.

"அமெரிக்க அதிபர் ரீகன் அவர்களையும், ரஷ்யத் தலைவர் கோர்பசேவ் அவர்களையும் சந்தித்து இவர்களுக்குள் ஒருமித்த உடன்பாடு வருவதற்கு ஆக்கப்பூர்வமான முயற்சிகளை அவர் மேற்கொண்டது உலகறியும். இன்று கையெழுத்தான இந்த அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம், நமது பிரதமர் அவர்களின் முயற்சிக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி. அந்த வகையில் நமது பிரதமர் அவர்களை இந்த நேரத்தில் நான் மனதாரப் பாராட்டுகின்றேன்."





# முன்னாள் படைவீரர் முன்னேற்றத்துக்கு முன்னோடியாக விளங்கும் தமிழ்நாடு

மாண்புமிகு நிதியமைச்சர்
டாக்டர் நாவலர்
**இரா. நெடுஞ்செழியன்**

**டிசம்பர் - 7 கொடிநாள்**

விரிந்து காணப்படும் வான்வெளியிலும், பரந்து கிடக்கும் கடல் பரப்பிலும், நீண்டு உயர்ந்து விளங்கும் மலை முகடுகளிலும், வளைந்து நெளிந்து அகன்று நிலவும் நிலப் பகுதிகளிலும், அலைந்து, திரிந்து, நாட்டினைப் பகைவரின் படையெடுப்புகளினின்றும், கண்ணினைக் காக்கும் இமைகள்போல் காத்து வரும், அரும் பெரும் பணியை அயராது செய்து வருபவர் முப்படைப் போர்வீரர்கள் ஆவர்.

நாட்டையும், நாட்டுமக்களையும் காக்க தம் இன்னுயிரையும் பணயம் வைத்து போர்ப் படைகளில் பணிபுரிந்து வரும் போர்வீரர்களைப் போற்றிப் பாராட்டி, புகழ்ந்து மகிழ்தல், வீரத்தை நிலைநாட்டிப் போர்க்களங்களிலே வீழ்ந்த போர்வீரர்க்கு வீர வணக்கம் செலுத்துதல், அத்தகைய வீரர்களை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினரின் வாட்டம் போக்கிட உதவிபுரிதல், உடலுறுப்புக்களை இழந்து அவதியுறும் வீரர்க்கு உறுதுணையாக இருத்தல், நலிந்த ஓய்வு பெற்ற போர்ப் படை வீரர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினர்க்கும் வாழ்வளித்தல் போன்ற கடமைகளைச் செய்யும் நாளாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட நாள்தான், 'கொடி நாள்'! ஆண்டு தோறும் டிசம்பர் திங்களில் கொண்டாடப் பெறும் இந்தக் கொடிநாள், இவ்வாண்டும், டிசம்பர் திங்கள் 7ஆம் நாளன்று நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட இருக்கிறது.

நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்கும் பெரும்பணி மட்டுமின்றி, இயற்கையின் சீற்றங்களால், மக்கள் பெரும் தொல்லைகளுக்கு ஆட்படும்போது, அவர்தம் துயர்துடைக்கும் சீரிய பணிகளிலும் முப்படை வீரர்கள் பெரும் பங்கு கொள்கின்றனர். உள்நாட்டில் பெரும் பெரும் கலவரங்களும், குழப்பங்களும் தூண்டி விடப்படும்போதும் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், அமைதி ஒழுங்கை நிலைநாட்டவும் முப்படைவீரர்கள் பெரும் பணியாற்றி வருகின்றனர்.

இந்தியப் போர்ப்படைகள் வீரத்திலும், தீரத்திலும், போர்த்திறனிலும், புகழிலும் உலகோர் போற்றுவதற்குரிய சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றன. உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவை, 78 கோடி மக்கள் கொண்ட இந்தியாவை, பல்வேறு சமயங்கள், சாதிகள், மொழிகள், நாகரிகங்கள், கலையுணர்வுகள், பழக்கவழக்கங்கள், அரசியல் கட்சிகள் கொண்ட இந்தியாவை, 40 ஆண்டுக்காலச் சுதந்திர இந்தியாவைப் பேணிக் காத்து வரும் பெரும் பொறுப்பை, இந்தியப் போர்ப்படையினர் தாம் கடமையுணர்ச்சியோடும், பொறுப் புணர்ச்சியோடும் கொண்டிருக்கின்றனர்.

இந்தியப் போர்ப்படைகளில் மட்டும் 11½ இலட்சம் போர் வீரர்கள் இருக்கிறார்கள். உலகிலேயே அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக நான்காவது நாடாக, மிகப்பெரிய போர்ப்படையினைக் கொண்ட நாடாக விளங்குகிறது இந்தியா.

இந்தியா எந்த ஒரு நாட்டையும் வென்று அடிமைப்படுத்த எண்ணுவதில்லை, வேறு

எந்த ஒரு நாடும் இந்தியாவின் எந்த ஒரு பகுதியையுங்கூட வென்று அடிமை கொள்ள இடம் அளிக்காது. இந்தியா வங்காளதேஷ் போரில் ஈடுபட வேண்டிய இன்றியமையாத நிலை ஏற்பட்டபோது, அதனைப் பாக்கிஸ்தானிடமிருந்து வென்றது. ஆனால், அதனை இந்தியாவிற்கு அடிமைப்படுத்த எண்ணவில்லை. அந்தப் பகுதி ஒரு சுதந்திர நாடாகத் திகழவே பேருதவி செய்தது.



இலங்கைவாழ் தமிழர்கள் முழுவாழ்வுரிமை பெற்று, மாநிலம்- மொழி-கலை-பண்பாடு-நாகரிகம் ஆகியவற்றில் உரிமை- வாக்குரிமை - வேலை செய்யும் உரிமை - தொழிலுரிமை போன்றவற்றைப் பெற்று அமைதியாக வாழ்வதற்கான வழிவகைகளையெல்லாம், இந்தியா-இலங்கை உடன்படிக்கை, முறைப்படி பெற்றுத்தர, இந்தியப் போர்ப்படையினர், பெருத்த இன்னல்களையும், இழப்புகளையும் தாங்கிக் கொண்டு, இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில், அமைதிப்படையினராக இருந்து அரும்பணி ஆற்றி வருகின்றனர். தங்கள் முயற்சியில் பெரும் வெற்றிபெற்று, அங்கு வாழும் தமிழ்ப்பெருங்குடி மக்களுக்கு நாளுக்கு நாள் கூடுதலாக நல்வாழ்வு அளித்து வருகின்றனர்.

இவ்வாறு பல்வேறு பணிகளில் ஈடுபட்டு களத்திலே வீழ்ந்த வீரர்களின் குடும்பங்களுக்கும், விழுப்புண்பெற்று வீடு திரும்பிய வீரர்களுக்கும், வீரர்களின் குடும்பங்களைச் சேர்ந்த விதவையர்களுக்கும், வீரர்களின் குடும்பங்களைச் சார்ந்த நலிந்தவர்க்கும் நல்வாழ்வு அளித்திட வேண்டியது நமது கடமையாகின்றன. கொடிநாளில் பொதுமக்களிடம் கொடிகளை வழங்கிப் பெறப்படும் நன்கொடைத் தொகை, இத்தகையோர்க்குப் பல்வேறு வகைகளில் பயன்படுத்தப்படுகிறது.

கொடிநாளில் தமிழகப் பொதுமக்கள் அளித்த நன்கொடை 1981-இல் ரூ.17 இலட்சமாகவும், 1982இல் ரூ. 21 இலட்சமாகவும், 1983இல் ரூ.31 இலட்சமாகவும், 1984இல் ரூ. 49 இலட்சமாகவும், 1985இல் ரூ. 66 இலட்சமாகவும், 1986இல் ரூ. 79 இலட்சமாகவும் இருந்தன. ஆண்டுக்கு ஆண்டு நன்கொடைகளை வாரிவாரி மிகவாக வழங்கும் பண்பு தமிழக மக்களிடையே வளர்ந்து கொண்டு வருவது நன்றியுணர்வோடு போற்றுவதற்குரியதாகும். இந்த ஆண்டு சென்ற ஆண்டைவிடக் கூடுதலாக வாரி வழங்கி, நன்கொடைத் தொகையை மேலும் பெருக்கிக் காட்ட வேண்டியதை ஒவ்வொருவரும் தம் நீங்காப் பொறுப்பாகவும், கடமையாகவும் கருதவேண்டும்.

1985ஆம் ஆண்டில் கொடிநாளில், இந்தியாவிலேயே, அதிக அளவு நன்கொடை பெற்றுத்தந்த மாநிலம் 'தமிழ்நாடு' தான் என்பதற்காக, பெரிய வெள்ளிக் கோப்பை இந்தியப் பிரதமர் மாண்புமிகு திரு இராஜீவ் காந்தி அவர்களால், டெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியின்போது, என்னிடம் வழங்கப்பட்டது. 1986ஆம் ஆண்டில் அதிக அளவு நன்கொடை பெற்றுத் தந்ததற்காக மீண்டும் அந்தப் பெரிய வெள்ளிக்கோப்பையும், மக்கள் தொகை-வருவாய்க் கணக்குப்படியும் தமிழ்நாடு முதலிடம் பெறுகிறது என்பதற்காக, மற்றொரு பெரிய வெள்ளிக் கோப்பையும், மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் மாண்புமிகு திரு.கே.சி.பந்த் அவர்களால், டெல்லி விழா ஒன்றில், என்னிடம் வழங்கப்பட்டன. இந்த நிலைமை குறித்துத் தமிழக அரசுத்துறை அலுவலாளர்களும் பெருமக்களும் பெருமகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்ளலாம்.

இறந்துபட்ட முன்னாள் போர்ப்படை வீரரின மனைவியரான நலிந்த நிலையிலுள்ள விதவையர்க்குத் திங்கள்தோறும் ரூ. 50 வீதம், தொகுப்பு நிதியிலிருந்து 1400 விதவைகளுக்கு, ஓய்வூதியம் அளிக்கப்பட்டு வருகிறது. 2 குழந்தைகள் வரை ரூ.10 வீதமும் தொகுப்பு நிதியிலிருந்து உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த ஏற்பாட்டை, இந்தியாவிலேயே முதன்முதலில் செய்தது, தமிழ்நாடே ஆகும்.

முன்னாள் படைவீரர்களில் ஆதரவற்று விளங்கும் முதியோர்க்கான ஓய்வு இல்லம் ஒன்றினை, முதன்முதலில், வடஆர்க்காடு மாவட்டம் வேலூரில் அமைத்த பெருமையும் தமிழ்நாட்டையே சாரும்.

முன்னாள் படைவீரர்கள் சிறுதொழிற்சாலைகள் அமைக்க, நிதியுதவியும், கடனுதவியும் அளிக்கவும், தொழிற்சாலைகளை அமைத்து, வேலைவாய்ப்பினை உருவாக்க வழிவகை காணவும், ''தமிழ்நாடு முன்னாள் படைவீரர் வாணிபக் கழகம்'' ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்த வகையிலும், தமிழ்நாடு தான், பிற மாநிலங்களுக்கு முன்னோடியான எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

முன்னாள் படைவீரர்கள், சொந்தத் தொழில்களைத் துவங்க வங்கிகளிடமிருந்து பெறும் கடன்களுக்கு, வட்டி உதவித் தொகை வழங்கி ஊக்குவிக்கும் திட்டத்தினை, முதன்முதல், இந்தியாவில், செயற்படுத்திய மாநிலம், தமிழ்நாடேயாகும்.

முன்னாள் படைவீரர்க்கும், அவர்களைச் சார்ந்தோர்க்கும் மத்திய அரசும், மாநில அரசும் பல ஒதுக்கீடுகளைத் தனிச்சலுகைகளாகச் செய்திருந்தபோதிலும், அவற்றின் பயன்பாட்டினைக் கண்காணிப்பதற்காக, ஓர் உயர் மட்ட அதிகாரிகள்குழுவினை முதலில் ஏற்படுத்தியதும் தமிழ்நாடே ஆகும்.

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்திட பொறுப்பை மேற்கொண்ட முன்னாள் போர்ப் படை வீரர்களைப் போற்றிப்பாராட்டி மதிக்

கும் விதத்தில், ஆண்டுதோறும், கொடிநாள் அன்று, மேதகு தமிழக ஆளுநர் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும், முன்னாள் படைவீரர்க்குத் தேநீர் விருந்து அளித்துப் போற்றும் திட்டத்தை, முதன் முதல் நடைமுறைப்படுத்தியதும் தமிழ்நாடேயாகும்.

சிறுநீரகச் சிகிச்சை மற்றும் இருதயச் சிகிச்சைபெறும் முன்னாள் படைவீரர்க்கு, நிதி உதவி அளித்துக் காப்பாற்றும் திட்டத்தைத் தமிழ்நாடு தான் முதன்முதல் இந்தியாவிலேயே செயற்பாட்டிற்குக் கொண்டுவந்தது.

இப்படியாகப் பல்வேறு முன்னோடித் திட்டங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. அவற்றையெல்லாம் விரிக்கின் பெருகும் என்பதால், காலத்தின் அருமை கருதி விடுக்கிறேன்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த போர்வீரர்களில், அசோகச்சக்கரம் விருது பெற்றவருக்கு ரூ.10,000-மும், கீர்த்திச் சக்கரம் விருது பெற்றவருக்கு ரூ. 5,000-மும் சௌர்ய சக்கரம் விருது பெற்றவருக்கு ரூ. 3,000-மும் பரிசுத் தொகைகளாக வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களில், 8 பேர் மகா வீரச் சக்கர விருதுகளையும், 30 பேர் வீரச்சக்கர விருதுகளையும் பெற்றுள்ளார்கள்.

தேர்தல் பாதுகாப்புப் பணி, இரவு சுற்றுக் காவல் பணி, கார் நிறுத்துமிடங்களில் காவற் பணி போன்றவற்றை முன்னாள் படை வீரர்கள் திறம்படச் செய்துவருகின்றனர்.

இவ்வாண்டு மட்டும் நலநிதியிலிருந்தும், தொகுப்பு நிதியிலிருந்தும் 10,450 பேர்கள் பயனடையும்படி, ரூ. 33 இலட்சத்து 52 ஆயிரம் உதவி நிதிகளாக வழங்கப்பட்டிருக்கின்றன.

நமக்காக, நம் நாட்டைக்காக்க, தம் உயிரையும், உடலையும் பொருட்படுத்தாது, வீரத்தோடும், அஞ்சாநெஞ்சத்தோடும், அயராமல் பாடுபட்ட போர்ப்படை வீரர்களின் வீட்டைக்காக்க வேண்டியது நாட்டு மக்களின் நீங்காக் கடமையாகும். அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்குரிய நாள்தான் கொடி நாள் ஆகும்! நன்றி உணர்வை வெளிப்படுத்துவதற்குரிய வழி, நன்கொடை வழங்கல் ஆகும். நாட்டின்தாயின் மணிக்கொடி ஓங்கி உயர்ந்த மரத்தில் பட்டொளி வீசிப் பறந்திட, கொடி நாளில் எல்லோரும் பறந்தோடி வாரீர்!

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் வெள்ளிப்பணம் அருளீர்
நிதி வற்றியவர் காசுகள் கொடுப்பீர்!

கொடிகளைப் பெறுவீர்! போர்ப்படையினரைப் போற்றுவீர்!

(கொடி நாள் பற்றி, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 7.12.87 அன்று வானொலி மற்றும் தொலைக்காட்சியில் ஆற்றிய உரை)

# மூதறிஞர் இராஜாஜி பொன்மொழிகள்



★ நம்முடைய தேகமும், உள்ளமும் ஆண்டவனுடைய கோயில். அதைச் சுத்தமாக வைத்துக் காப்பது நம் கடமை.

★ எவ்வளவு கல்வியும் செல்வமும் இருந்தாலும், அடக்கம் இல்லாவிடில் பண்பாடென்பது இல்லை.

★ தீண்டாமை என்பது நமது சமூகத்தில் ஒரு மாசு. தீண்டாமை ஒரு விஷப் பாம்பு. அதைக் கொன்றாக வேண்டும்.

★ பள்ளிக்கூடங்கள் தேசத்தில் எத்தனை இருந்தாலும், பண்பாட்டுக்குப் பள்ளிக்கூடம் வீடேயாகும்.

★ வாழ்க்கையில் தைரியமாக இருப்பதைவிட மகிழ்ச்சி அளிக்கக் கூடிய விஷயம் வேறு என்ன இருக்க முடியும்!

★ ஞானமும், பக்தியும் அனைவருக்கும் உரித்தான பெருஞ் செல்வம்.

★ கோபம் கூடாது. அது முகத்தின் அழகைக் கெடுத்து விடுகிறது. சாந்தமே முகத்திற்கு அழகு தருகிறது.

★ ஒழுக்கத்துடனும், நாணயத்துடனும் ஒவ்வொருவரும் நடந்து கொண்டால், எல்லோருக்கும் நன்மை விளையும்.

★ நம்முடைய சமூகம், சுதந்திர வாழ்க்கை அடைந்து விட்டது. சுதந்திரத்துடன் சுகமும் பெற வேண்டுமானால், மக்கள் அறவழியில் நிற்கவேண்டும்.

# டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம்

பேராசிரியர் டாக்டர் லலிதா காமேஸ்வரன்
தனி அலுவலர்
டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம்

**டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்தை மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் *திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள்* 24-12-87 அன்று திறந்து வைப்பதையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.**

இந்தியா விடுதலை அடைந்த போது உள்ள பெரிய மாநிலங்களில், ஒன்று அல்லது இரண்டு பல்கலைக்கழகங்களே இயங்கி வந்தன. ஆந்திரம் உள்ளிட்ட கூட்டுப் பெரு மாநிலமாக சென்னை விளங்கியபோது, ஆந்திரப் பல்கலைக் கழகமும், சென்னை மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களும் இருந்தன. தமிழகத்தில் இருந்த அனைத்துக் கல்லூரிகளும், கலை அறிவியல், பொறியியல் மற்றும் மருத்துவச் சார்புடையனவாக இருந்தபோதும், சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைந்தே இருந்தன. ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையில் எழுந்த உயர்கல்வி, தொழிற்கல்வி ஆகியவற்றின் வளர்ச்சி, கல்லூரிகளின் எண்ணிக்கையைப் பன்மடங்காகப் பெருக்கியது.

கல்லூரிகளையும், கல்வித் தரத்தையும் கவனிப்பதற்கேற்ற முறையிலும், பெருகிவரும் கல்லூரிகளின் எண்ணிக்கைக்கு இசைந்தவாறும் புதிய பல்கலைக் கழகங்களும் தோன்றத் தொடங்கின.

அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும், கலை, அறிவியல் பயிலும் மாணவர்களின் பெருக்கமே பல்லாயிரமாய் விளங்குதலால், தொழில் மற்றும் மருத்துவப் படிப்பு சார்புடைய பாடத் திட்டங்களில் புதுமைக்கு வழி வகுக்கவும், முன்னேற்ற முறையில் வெற்றிகளைப் படைக்கவும், சிறப்பான ஆய்வுகளைத் தரும் வகையில், திட்டமிட்டு வளர்ந்தோங்கச் செய்யும் நிலைமை இல்லாமல் தடைபடும் சூழல் உருவானது. மருத்துவப் படிப்பிற்கும், தொழிற் படிப்பிற்கும் கல்லூரிகள் மட்டுமே தனித் தனியே இருந்தனவேயன்றி பல்கலைக் கழக வளாகத்தில், ஆராய்ச்சித் துறைகளை விரிவுபடுத்துதல் முடியவில்லை.

தற்போதும்கூட, இம்மாநிலத்திலும் பிற மாநிலங்களிலும் உள்ள பெரும்பாலான மருத்துவக் கல்லூரிகள் ஆங்காங்குள்ள பல்கலைக் கழகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. பொறியியல் மற்றும் மருத்துவம் சார்ந்த



மேல் கல்வியில், புத்தம் புதிய மாறறங்கள் அவ்வப்போது வெகு விரைவாக நிகழ்கின்றன. எல்லாப் பிரிவுகளிலும் கல்விக் கொள்கையினை, மககள் அன்றாட வாழக்கையுடன் தொடர்புபடுத்தும் வகையில் மாறறி அமைக்க வேண்டும் என்ற உணர்வு மிகுந்து வருகிறது.

வேளாண்மை நாடான நம் இந்தியா, சுதந்திரத்திற்குப்பின் தொழில் துறையிலும் வளர்ந்து வருகிறது. சமப காலத்துல், வேளாணமைத் துறையில் பெருத்த முனனேற்றம் ஏறபட்டுள்ளது. முதலிரு ஐந்தாணடுத் திட்டக் காலங்களில், வேளாணமைக்குப் பெருங் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் விளைவாக, அமெரிக்காவிலுள்ள, தனிப் பல்தலைக் கழகங்கள் போன்றே, நம்நாட்டின் பல். வேறு பகுதிகளிலும் வேளாண்மைப பலகலைக் கழகங்கள் நிறுவப்பட்டுப் போதிய விரிவாக்கத் திட்டங்களும், ஆராய்ச்சித் திட்டங்களும் வேளாண்மைத் துறையில் கொணரப்பட்டன. வேளாண்மைத்துறை போலவே, பொறியியல் துறையிலும், கணிசமான முன்னேற்றம் அரும்பத் தொடங்கியது. இந்தியத் தொழில் நுட்ப நிறுவனங்களை நிறுவி, தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சியில், மிகச் சிறப்பான முன்னேற்றம், நம் நாடு கண்டுள்ளது. இந்நிறுவனங்களின் மூலம் , தொழிற் கல்வியில் இந்தியா முன்னேற்றம் அடைந்துள்ளதற்கும், இவற்றின் கல்வித் தரம் உலக

அரங்கில், உயர்ந்த நிலையில் இருப்பதற்கும் காரணம், அவை களுக்குத் தன்னாட்சி வழங்கப் பட்டுச் செயல்படுவதாலேயாகும் என்று கல்வித் துறை அறிஞர்கள் பலரும் கருதுகின்றனர்.

இம்முறையில்தான், இங்கு தனியாக மருத்துவப் பல்கலைக் கழகம் நிறுவப்படவேண்டியதன் தேவை, பத்து ஆண்டுகளுக்கும் மேலாகப் பெரிதும் உணரப்பட்டு வந்திருக்கிறது. இருப்பினும், தனியே, மருத்துவப் பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டு மென்ற கருத்து, சிலரால் எதிர்க் கப்பட்டு வந்தது மட்டுமல்லாமல், கல்வியாளர்களிடமிருந்தும், மேல் நிலைக் கல்விக் கொள்கை வகுப்போரிடமிருந்தும், போதிய ஆதரவும் ஏனோ கிட்டவில்லை.

தனி மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழகத்தில் தோன்ற வேண்டுமென்ற கருத்துரு, 1980ஆம் ஆண்டிலிருந்தே, தமிழக அரசின் ஆழ்ந்த ஆய்வில் இருந்து வந்தது. தமிழகத்தில், தனித்ததோர் மருத்துவப் பல் கலைக்கழகம் உருவாக்குவது தொடர்பான எல்லாக் கருத்துக் களையும் நன்கு ஆய்ந்தபின், இப் பல்கலைக்கழகம் அமைப்பதில் எழக்கூடிய நிலைமைகளையும், ஆராய்ந்து, ஓர் அறிக்கையினை அரசுக்குப் பணிந்தனுப்பு வதற்காக, டாக்டர் வேணு கோபால் தலைமையில் தனிக்குழு ஒன்று அமைக்க, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மிகத் தெளிவோடும், எதிர்நோக்குத் திறப்பாடோடும் ஆணையிட் டார்கள்.

இக்குழுவிடம், கீழ்க்கண்ட பொருள்பற்றிப் பரிசீலிக்க அறி வுறுத்தப்பட்டது.

1) மருத்துவப் பல்கலைக் கழகத் திற்குக் கட்டடம் கட்டுவதற் குப் பொருத்தமான இடத் தைத் தேர்வு செய்வது:
2) மருத்துவப் பல்கலைக் கழகம் நிறுவுவதால் ஏற்படும் நிதிச் செலவினை விரிவாக ஆராய் வது:
3) மற்ற பல்கலைக் கழகங்களுட னும், இந்திய மருத்துவக் கழ கத்துடனும் கலந்து வரைவுச் சட்டம் உருவாக்குதல்;
4) இப்பல்கலைக் கழகம் உரு வாக்குவதற்கும், இதற்கு வழங்கப்படவிருக்கும் நிதி உதவி குறித்தும், பல்கலைக் கழக மானியக் குழுவிடம் கலந்து ஆராய்வது;
5) மருத்துவப் பல்கலைக் கழகம் உருவாக்குவதால் எழக்கூடிய மற்ற நிலைமைகள் பற்றி ஆராய்வது;

இந்திய மருத்துவ முறை களான, சித்த மருத்துவம், ஆயுர் வேத மருத்துவம், யுனானி மருத் துவத்திற்கும் ஆராய்ச்சி மற்றும் இதர பிரிவுகளிலும் முன்னேற் றம் காணவேண்டுமென்பது, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்தாகையால், டாக்டர் வேணுகோபால் குழுவிடம், மருத் துவப் பல்கலைக் கழகம் நிறுவு வது குறித்து, அரசுக்குப் பரிந் துரை செய்யும்போது, இதனை யும் கருத்தில் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

டாக்டர் வேணுகோபால் குழு வின் அறிக்கையை விரிவான முறையில் நுணுக்கமாக நன்கு ஆய்வு செய்தபின், தமிழ்நாடு அரசு, தமிழகத்தில் தனி மருத்து வப் பல்கலைக் கழகம் நிறுவ முடி வெடுத்தது. இப்பல்கலைக் கழ கம், விரைவில் மலர அரசு மேற் கொண்ட செயற்பாடு சிறப்பான தாகும். தற்போது, தொழி லார்ந்த கல்வியின் மிகுவளர்ச்சி, கல்வித்தரம் உயர்வு அடையவும், குறிப்பிட்ட தொழிற்பணி மேம் பாடு அடையவும் வழி பிறந்தது டன், உலகளாவிய நிலையில் பாராட்டுப் பெறும் அளவிற்கு ஆராய்ச்சித் திறனில் மாபெரும் வெற்றி ஏற்பட்டுள்ளதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். பாடத் திட்டத்தை அன்றன்று வரை பயிலகங்களை அறிந்துண ரச் செய்யவும், நவீனமாக்கு வதற்கும், எல்லாக் கல்லூரிகளி லும், ஒரே சீரான கல்வித் தரத்தை நிலைப்படுத்துவதற்கும், தனி மருத்துவப் பல்கலைக் கழ கம் இங்கு அமைதல் உணரப்பட் டது. எனவே, இவ்வாண்டுத் தொடக்கத்தில், தனித்த, மருத் துவப்பல்கலைக்கழகம்உருவாக்கு வதற்கான சட்டமுன்வடிவு சட்ட மன்றத்தில் வைக்கப்பட்டது. இச்சட்ட முன்வடிவு, சட்டமன் றப் பேரவையில் நிறைவேற்றப் பட்டு, இந்தியக் குடியரசுத் தலை வரின் ஒப்புதலும் பெறப்பட்டது. இச்சட்டம், 1987-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24-ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந் தது.

இப்பல்கலைக் கழகத்திற்கு, **டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம்** என்று பொருத்த முறப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஏனெனில், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், ஏழையர் துயரையும், வறியவர் தேவையையும், நோயுற் றார் அவதியையும், மிகுந்த நெருக்கமுடன் ஆர்வமுடன் எப் போதும் எண்ணத்தில் கொள் பவராவார்கள்.

இம்மாநிலத்திலுள்ள, எட்டு, அரசுத் துறை மற்றும் மூன்று தனியார் மருத்துவக் கல்லூரி களும், நான்கு அரசு மற்றும் இரண்டு இந்திய மருத்துவ முறைக் கல்லூரிகளும், ஓர் அரசு பல் மருத்துவக் கல்லூரி, இரண்டு அரசு மற்றும் மூன்று தனியார் மருந்தாளுநர் பயிற்சிக் கல்லூரி கள், ஓர் அரசு மற்றும் ஒரு தனி யார் செவிலியர் கல்லூரி, ஓர் அரசு இயற்கைமுறை மருத்துவக் கல்லூரி, ஓர் அரசு இயற்கை மருத்துவப் பயிற்சி நிலையம் மற் றும் மேற்படிப்புப்பட்டம் மற் றும் பட்டப்படிப்பு நடைபெற்று வரும் ஐந்து தனியார் நிறுவனங் களும், இப்பல்கலைக் கழகத்து டன் இணைக்கப்பட்டுள்ள கல்வி நிறுவனங்களாகும்.

பல்கலைக் கழக வளாகத்திற் குள்ளேயே, அதன் உறுப்பாக இயங்கும் வகையில், தரமணி அடிப்படை மருத்துவ அறிவியல் நிறுவனத்தை ஏற்றுக் கொள்வ தற்கும் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. பின்னர், இதனுடன் இணைந்து கூட்டு ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு வகை செய்வதற்கும், தனியாக அதே வளாகத்தில் ஒரு மருத்துவ மனையை உருவாக்கவும் வாய்ப் பிருக்கிறது.

இப்பல்கலைக் கழகத்தில், நம் சமுதாயத் தேவையை உணர்ந்து ஒவ்வொரு துறையிலும் பட்டப் படிப்பு நிலையிலும், மேற்பட்டப் படிப்பு நிலையிலும் பாடத்திட் டங்களை உருவாக்குவதற்கென தனியே மையமும், தமிழ்நாட் டில் உள்ள அனைத்து மருத்துவக் கல்லூரிகளிலும் ஆராய்ச்சி நிறு வனங்களிலும் பணியாற்றுவோர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற் கேற்றவகையில்,மருத்துவ நூல கத்தையும் உருவாக்குவதற்கும் திட்டங்கள் உள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஏழைகள் உயர்வடைய காணும் கனவுகளை நனவாக்கி, கல்வித் தரத்தினிலே பேருயர்வு, மக்கள் தேவைக்கேற்ற சிறந்த கல்வி முறை - சீர்மிகு கல்வியி னால் மக்களுக்குப் பெரும்பயன், மருத்துவப் பணியில் அருஞ்சிறப்பு- ஆராய்ச்சியில் விரைவான முன் னேற்றம், செந்தமிழ்நாட்டின் தொடர்ந்துவரும் பழம்பெரும் தமிழ்ப் பாரம்பரிய மருத்துவ முறைகளோடு ஒருங்கிணைந்த, ஒப்பாய்வு நிறைந்த ஆராய்ச்சித் திட்டங்கள் என்று படிப்படியாக மருத்துவக் கல்வியால், மக்களின் நல்வாழ்வு மேம்பாடு அடை வதற்கு **டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம்** காலமெல்லாம் வழி வகுக்கும் - சிறந்தோங்கும்.



# உழைப்பால் உயர்ந்த உத்தமர் டாக்டர் அம்பேத்கார்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் எனும் எழில் கொண்ட மாளிகையை உருவாக்கிய இணையற்ற சிற்பிகளில் மகத்தானவர் டாக்டர் மாமேதை அம்பேத்கார் ஆவார்.

"ஆதிதிராவிடர் இனத்தில் தோன்றி, சமூக நீதிகளுக்காகப் போராடி அந்த இனத்திற்கு விடிவைத் தேடித் தந்த விடிவெள்ளி ஆவார்.

"கெட்ட பொருளைத் தொடக்கூடாது. குப்பைக்கூளம், துர்நாற்றப் பொருள் ஆகியவற்றை நிச்சயமாகத் தீண்டாமை அனுஷ்டிக்கத் தான் வேண்டும். அக்கினித் திராவகம், வெடிகுண்டு, விஷம், சீறும் நாகம், கொட்டும் தேள் இன்னும் பலப்பல உண்டு, ஆபத்து தருபவை. அவைகளைத் தீண்டாதிருக்க வேண்டும். நியாயம் அது. ஆனால் பல கோடி மக்களை, தாய் நாட்டவரை, மூதாதையர் காலந்தொட்டு வாழ்ந்து வருபவரைத் தீண்ட மாட்டோம் என்றால், அது அர்த்தமற்றது, விபரீதமானது, விஷமத்தனமானது. "தீண்டாமையால் என்ன நன்மை வந்தது" என்று யாராலும் கூற முடியாது. ஆனால் ஆயிரம் ஆயிரம் கேடுகள் விளைவதை அடுக்கடுக்காய் என்னால் சுட்டிக்காட்டிட முடியும்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தீண்டாமையின் தீ நாக்குகளால் சுடப்பட்டு, சுடச்சுட ஒளிரும் பொன்னைப்போல பிரகாசிக்கிறார் அண்ணல் அம்பேத்கார் அவர்கள்.

தந்தை பெரியார் அவர்களும், அண்ணல் அம்பேத்கார் மீது அளவற்ற அன்பும் பாசமும் கொண்டிருந்தார். முகம்மது அலி ஜின்னாவைப் பார்க்க தந்தை பெரியார் பம்பாய் சென்றிருந்தபோது, பெரியார், அம்பேத்கார் அவர்களையும் சந்தித்து அளவளாவி மகிழ்ந்தார் என்பது வரலாற்று நிகழ்ச்சியாகும். தாழ்த்தப்பட்டவர்கள் தலைநிமிர்ந்து நிற்க வேண்டுமானால் அவர்கள் கல்வி பெறுவது கட்டாயத் தேவை என்பதை உணர்ந்த டாக்டர் அம்பேத்கார், 1928-இல் இரண்டு இலவச மாணவர் இல்லங்களைத் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிடர்களுக்காக மட்டும் தொடங்கி வைத்தார். அண்ணல் அம்பேத்கார் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி டாக்டர் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் அரசு ஆதிதிராவிட மாணவர்களுக்காக இலவச உணவு, உடை வழங்கி, மாவட்டந்தோறும் மாணவ, மாணவி விடுதிகளைத் தொடங்கி வருகிறது. தமிழகத்தில் 758 ஆதி திராவிடர் மாணவமாணவியர் விடுதிகள் இயங்கி வருகின்றன. இவைகளில் 50 ஆயிரம் மாணவ, மாணவிகள் தங்கி, இலவச உணவு, உடையுடன் பயின்று வருகிறார்கள்.

ஆதிதிராவிடர்களின் முன்னேற்றம் கல்வியில்தான் உள்ளது என்பதை உணர்ந்து, இந்த அரசு தனியாக அவர்களுக்காக 1,114 பள்ளிகளை ஏற்படுத்தி, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள் சத்துணவும், பாடப் புத்தகமும், சீருடையும் தந்து, ஆதிதிராவிட மக்களைச் சீரடையச் செய்கிறார். அது மட்டுமல்ல. எலிக்கும் வளையுண்டு. எறும்புக்கும் புற்றுண்டு. ஆனால் ஆண்டாண்டுக் காலமாக அமுக்கப்பட்டுவந்த ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியின மக்கள் வாழ வேண்டும், சுகாதாரமாக வாழ வேண்டும் என்ற அடிப்படையில், தமிழக அரசு அவர்களுக்கு இலவச மனைப்பட்டாக்கள் வழங்கி வருகிறது. பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் அவர்களின் ஆணைப்படி, இதில் இப்பொழுது போர்க்கால நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

---

**மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்**

**திரு அ. அருணாசலம்**

---

1977இல் இருந்து 1987 வரை 13,188 ஏக்கர் நிலம் ஆஜிதம் செய்யப்பட்டு, 1 இலட்சத்து 86 ஆயிரம் மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், வழங்கப்பட்ட மனைப்பட்டாவில் இலவசமாக வீடுகள் தாட்கோ மூலமும், திட்டங்கள் மூலமும் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இன்றைக்கு ஆயிரம் ஆயிரம் ஆதி திராவிடர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாகவும், பொறியியல், மருத்துவ வல்லுநர்களாகவும் இருக்கின்றார்கள் என்றால், அது அண்ணல் அம்பேத்கார் அவர்களின் பெரும் முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகும்.

சிறந்த பகுத்தறிவுவாதி, தேர்ந்த சட்ட நிபுணர், ஆராய்ச்சித் திலகம், சாதிக்கொடுமையைச் சாடிய தலைவன், தீண்டாமையைக் கடுமையான குற்றமாக்கி, அந்தக் குற்றவாளிகளுக்குச் சிறைத் தண்டனை வழங்க வழிவகுத்த சீலர்-கல்விக் கரைகண்ட கண்ணியர்-அரசியலில் புயலாக நுழைந்து மின்னலாக மின்னி - எரிமலையாய் இயங்கிய ஏந்தல்-உழைப்பால் உயர்ந்த உத்தமர் -உணர்ச்சியின் ஊற்று -நம்பிக்கைச் சிகரம். பாபாசாகேப் அவர்களின் வாழ்வும் தொண்டும் நமக்கெல்லாம் காலம் காலமாக வழிகாட்டும் என்று கூறி, 1956 டிசம்பர் 6இல் மறைந்த அண்ணல் அம்பேத்கார் அவர்களுக்கு அவரது கனவை நனவாக்கும் புரட்சித்தலைவர், பொன்மனத் தார் அரசின் சார்பிலும் அஞ்சலி செலுத்துகிறேன்.

**(டாக்டர் அம்பேத்கார் பற்றி மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சர் திரு அ. அருணாசலம் அவர்கள் தொலைக்காட்சியில் 6.12.87 அன்று ஆற்றிய உரை)**

# ஜவஹர் நினைவு

நாமக்கல் கவிஞர்

வெ. இராமலிங்கம் பிள்ளை



நேருவை நினைத்தவுடன்
நேர்மைக்குணம் என்னும்
மேருவை நிகர்த்தஒளி
மின்னிவரும் முன்னால்
பாரிலுள்ள யாவரும்நம்
பந்துஜன மென்றே
கோரும்ஒரு மெய்யுணர்வின்
கொள்கைவரும் அன்றோ?

ஜவஹரை நினைத்தவுடன்
ஜாதிநிற பேதம்
அவனியில் அழிந்தொழிய
ஆர்வம்நம தாகும்
நவநவ உணர்ச்சிகளின்
நன்னெறியை ஊட்டும்
நல்லதுணை வல்லனென
நம்மறிவு காட்டும்.

தீமையை எதிர்க்கும்ஒரு
தீரனுளன் என்றும்
வாய்மையை வளர்க்குமொரு
வள்ளலிவன் என்றும்
தூய்மைதவ றாதமுறை
சொல்வளவன் என்றும்
சீமைதொறும் வாழ்த்துஜவ
ஹர்அரிய சீலன்.

சொந்தமுள தன்னுடைய
சொத்துசுக மெல்லாம்
வந்தநில மக்கள்சுக
வாழ்வுபெற வென்றே
தந்தைதர மைந்தனிவன்
தானமெனத் தந்தான்
எந்தமொழி எந்தக்கதை
ஈடுசொல உண்டு?

தன்னல மறுப்பினுயிர்
தன்மை யிதுவென
இன்னல்களை இன்பமென
ஏற்கஒளி மின்னும்
பொன்னில்மணி வைக்கஉயிர்
பெற்றசிலை போலும்
என்னசொலிப் போற்றிடுவோம்
எம்ஜவஹர் லாலை!

ஏழையின் மனக்குறைகள்
இன்னவெனக் காட்டிக்
கோழைகளைக் கண்டுகொதி
கொண்டதுயர் கூட்டி
ஊழ்வினையை வெல்லுமொரு
ஓவியமும் ஆகும்
வாழிஜவ ஹர்மகிபன்
வாழிநெடுங் காலம்!

# மறையா ஒலி

கவியரசு கண்ணதாசன்



எண்ணத்தே எரியும் தீபம்
இறப்பிலாத் தருமம் என்னும்
கிண்ணத்தே வைத்த செந்தேன்
கீழ்வட மேற்கு தெற்கு
மண்ணெலாம் வணங்கும் தெய்வம்
மனிதருள் கதிரோன்! எங்கள்
கண்ணிலே நிறைந்து நின்று
காற்றிலே கலந்த நேரு!

நினைஅவன் பிறப்பை நெஞ்சே
நினைஅவன் வளர்ப்பை நெஞ்சே
நினைஅவன் சிறப்பை நெஞ்சே
நினைஅவன் இறப்பை நெஞ்சே
தனைஅவன் கருதி னானா?
தாயகம் கருதி னானா?
தனைஅவன் கருதா தாலே
தாய்அவன் வடிவ மானாள்!

தாழ்ந்தவர் உயர்ந்தோ ரென்னும்
தரமிலா வாழ்வைச் சாய்த்து
வாழ்பவர் இனத்தைக் காண
வாழ்ந்தவன் மறைந்தான்! ஆனால்
ஆழ்ந்ததோர் கருத்தைச் சொன்ன
அவன்குரல் ஒலியி னாலே
வீழ்ந்தவர் எழுந்து நின்றார்
வேந்தனை வாழ்த்து கின்றார்!



# சொல்லின் செல்வர் சத்தியமூர்த்தியும் இளைஞர் சமுதாயமும்

**தேவ. நடராஜன்**
**(அரசு நிதி சார் செயலர்)**

அந்த அற்புதம் 1918ஆம் ஆண்டு நிகழ்ந்தது. நிகழ்ந்த இடம் காஞ்சபுரம். மாநிலக் காங்கிரஸ் மாநாட்டில் நாட்டின் பெருந்தலைவர்கள் எல்லாம் வந்திருந்து பேசினார்கள். கவிக்குயில் சரோஜினி தலைமை தாங்க, உலகப்புகழ் பெற்ற பிரம்மஞான சங்கத்தின் தலைவி அன்னிபெசன்ட் அம்மையார், அரசியல் மேதை சர். சி. பி. இராமசாமி, கல்வியாளர் டாக்டர் அருண்டேல், பொருளாதார மேதை வாடியா, மகாகனம் சீனிவாச சாஸ்திரியார் முதலானோர் பேசினார்கள். ஆனால் இந்தப் புகழ்பெற்ற பேச்சாளர்களில் ஒருவர் கூட பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக மாண்டேகு சீர்திருத்தத்தை எதிர்த்து ஒருவார்த்தை கூடப் பேசவில்லை. கடைசியாக சத்தியமூர்த்தியைப்பேச அழைத்தார்கள்.

வீரர் சத்தியமூர்த்தி சிலிர்த்து எழுந்தார். கோடை இடியெனப் பிரிட்டிஷாரின் கொடுமைகளை எடுத்து உரைத்து, மாண்டேகு சீர்திருத்தத்தை வன்மையாகவும் தெளிவாகவும் தனது சட்டஞான உதவியால் ஆதாரத்தோடும் கண்டித்தார். சத்தியமூர்த்தி கூட்டத்தைப் பார்த்துக் கேட்டார்; ''காலமெல்லாம் நாம் பிரிட்டிஷாருக்கு அடிமைகளாகவே தான் வாழவேண்டுமா? உலகப்போரில் பிரிட்டிஷார் வெற்றி பெற்று, இந்தியரை மட்டுமல்லாமல், மேலும் பல நாட்டினரையும் அடிமைகளாகச் செய்வதற்கு, நாம் நமது மக்களைப் பிரிட்டிஷாருக்கு உதவியாக, உலகப் போரில் மடிய வைக்கத்தான் வேண்டுமா? இது என்ன நியாயம்? வாழும் சரஸ்வதியாக விளங்கும் அன்னிபெசன்ட் அம்மையாரே! பிரிட்டிஷ் கொடுங்கோல் ஆட்சியினருக்கு ஆதரவாக இந்த அக்கிரமங்களை ஆதரிக்கலாமா? உண்மையில் அன்னிபெசன்ட் அம்மையாருக்கு இந்திய மக்களின் நலத்தில் ஆர்வம் இருந்தால், பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக இந்திய நாட்டின் விடுதலைக்கு அல்லவா அவர் பாடுபடவேண்டும்?'' என்றெல்லாம் உணர்ச்சி பொங்க சத்தியமூர்த்தி உரையாற்றினார்.

''சத்தியம் எனும் சமயத்திற்கு மேல் உயர்ந்த சமயம் வேறு எதுவும் இல்லை'' என்ற அடிப்படைக் கொள்கையைப் போற்றும் பிரம்மஞான சங்கத்தின் உலகப் புகழ் பெற்ற தலைவி அன்னிபெசன்ட் அம்மையார், சொல்லின் செல்வர் சத்தியமூர்த்தியின் சொற்பொழிவில் உள்ள உண்மைப் பொருளை உணர்ந்தார். இது அவரது மனமாற்றத்திற்கு வித்திட்டது. அவரது மனத்தில் ஒரு பெரிய திருப்பத்தையே அது உண்டாக்கியது. அந்த நிமிடம் முதல் அன்னிபெசன்ட் அம்மையார், இந்திய மக்களுக்கு வெறும் சமூகநலத் தொண்டு மட்டும் செய்வதால் பயனில்லை. அவர்களை அடிமைகளாக வைத்து இருக்கும் பிரிட்டிஷ் ஆட்சியின் போக்கினைப் பெரிதும் மாற்றி, இந்திய மக்களின் விடுதலைக்காகவும் நாம் முனைந்து பணியாற்ற வேண்டும் என்ற உறுதியை மேற்கொண்டார். இவ்வாறு அன்னிபெசன்ட் அம்மையாரின் மனமாற்றத்திற்குக் காரணமாக இருந்தது சத்தியமூர்த்தியின் வெறும் சொல்வன்மை மட்டும் அல்ல; அது அவரது பேச்சிலும் செயலிலும் மூச்சிலும் பூரணமாகக் கலந்து நின்ற சத்தியம்தான்.

சத்தியம் தவறாத வாழ்க்கையைத் தனது வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து காட்டிய சத்தியமூர்த்தியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இளைஞர் சமுதாயம் வீறுகொண்டு எழுந்தது. பெருந்தலைவர் காமராஜர், சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் போன்ற தலைவர்களை இந்திய நாட்டிற்குச் சத்தியமூர்த்தியின் சத்தியக் கோட்பாடும் வாழ்க்கையும் தந்தன. மேதகு இந்தியக் குடியரசுத் தலைவராக விளங்கும் திரு ஆர். வெங்கட்ராமன் போன்ற அன்றைய இளந்தலைவர்களையும் நாட்டுப்பணிக்கு ஈர்த்தது. அவர்களையும் சுதந்திரத் தியாகிகளாகச் சுடர்விட்டு ஒளிர செய்தன.

பாரத நாடு 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் தேதி சுதந்திரம் பெற்றபோது, சத்தியமூர்த்தியின் சீடர் காமராஜர் செய்த முதல் பணி, சத்தியமூர்த்தியின் ''சுந்தரா'' என்ற அவர் வீட்டில், இந்திய நாட்டின் சுதந்திரக் கொடியை முதலில் ஏற்றியதுதான்.

சத்தியமூர்த்தியின் தியாகம் சாதாரணமானதல்ல. சத்தியமூர்த்தி தனக்கு வரவேண்டிய முதல்வர் பதவி இராஜாஜிக்குப் போவது தெரிந்தும், அதனைப் பொறுத்துக்கொண்டு, கட்சிக் கட்டுப்பாட்டை மீறாமல், கட்சிப் பணிகளில் ஒத்துழைத்தார். தனது சீடரான காமராஜரையே தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக்கியதோடு, கட்சியின் செயலாளராகவும் பணிபுரிந்தார். என்னே சத்தியமூர்த்தியின் தியாகப் பண்புகள்!

பெருந்தலைவர் காமராஜர் தமிழ்நாடு முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, தன் அரசியல் குருவான சத்தியமூர்த்தியின் வீட்டிற்கு, முதலில் சென்று, அவரது திருவுருவப் படத்திற்கு மாலை இட்டு, அஞ்

சலி செலுத்திய பின்னரேதான், முதல் அமைச்சராகப் பதவி ஏற்கச்சென்றார். குருவும் சீடரு மாகச்செயல்வீரர் சத்தியமூர்த்தி யும், பெரும் தலைவர் காமராஜ ரும் வாழ்ந்து காட்டிய நெறி முறைகள், எல்லாக் காலத்து இளைஞர் சமுதாயத்திற்கும் பெரும் படிப்பினையாகும்.

'தாய்மொழி போற்றுதல் வேண்டும்' என்று சத்தியமூர்த்தி இளைஞருக்கு உணர்த்தியது, இன் றைய இளைஞர் சமுதாயம் நன்கு நினைவுபடுத்திக் கொள்ள வேண்டிய ஒன்றாகும். இன்றும் நமக்கு ஆங்கில மோகம் அறவே போகவில்லை அல்லவா? நாவலர் சத்தியமூர்த்தி ஆங்கிலேயரும் புகழும் வகையில் ஆங்கிலத்தில் பேசும் பெரும் ஆற்றல் பெற்ற வர்தான். அவர் அப்படிப் பேசி யது பிரிட்டிஷாருக்குத் தனது கருத்துக்களைத் தெளிவுற எடுத் துச் சொல்லத்தான். ஆனால் ஆங்கிலம் பேசத் தேவையில்லாக் காலங்களில், அவர் தாய்மொழி யாம் தமிழில்தான் பேசினார்.

1908ஆம் ஆண்டு செங்கல் பட்டு மாவட்டம், மதுராந்தகத் தில் நடந்த கூட்டுறவு மாநாட் டில் அவர் ஆற்றிய தமிழ்ச்சொற் பொழிவு குறிப்பிடத்தக்கது. "தாய் மொழி போற்றுங்கள்! தமிழ்மொழி வளரச்செய்யுங்கள்' என சத்தியமூர்த்தி அனைவருக் கும் அறிவுறுத்தி வந்தார். தடை செய்யப்பட்ட தேசிய மகாகவி பாரதியின் பாடலை முதலில் அன்றே சட்டசபையில் தைரிய மாகப் பாடிய தமிழ்ப்பெருந் தகை சத்தியமூர்த்திதான். மனத்திட்பமும், சஞ்சலம் அற்ற சிந்தனை ஓட்டமும், தெளிவான மனநிலையும் சத்தியமூர்த்தியின் பெறற்கரிய செல்வங்களாகும்.

1939இல் சென்னை மேயரான தும் பிரிட்டிஷ் ஆட்சியாளர் களுடன் பேசி, 1940-இல் பூண்டி நீர்த் தேக்கத் திட்டத்திற்கு அன்றைய ஆளுநர் சர் ஆர்தர் ஹோப்பைக் கொண்டு அடிக்கல் நாட்டச் செய்தார். அன்று முதல் தான் தூய்மையான குடிநீர் சென்னை நகர மக்களுக்குக் கிடைக்கத் துவங்கியது. 1944இல் செயல்படத் தொடங்கிய அந்த நீர்த்தேக்கத்திற்கு 1948இல் சத் தியமூர்த்தியின் நினைவாக "சத் தியமூர்த்தி சாகரம்" என்று பெயரிடப்பட்டது.

அதே போல, இன்று உலகெங் கும் பேசப்படும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புபற்றி, 1938இல் சென்னை நகர மேயராக இருந்த போது, சத்தியமூர்த்தி சென்னை நகரம் தூய்மையாகவும், அழகாக வும் பராமரிக்கப்பட்டு, வெகு விரைவில் பெருநகரமாக வளர் தல் வேண்டும் என்று சிந்தித்துப் பல முன்னோடியான செயல் திட் டங்களை வகுத்துத் தந்தார். ஓராண்டுக்காலமே சென்னை மேயராக விளங்கி, 1940-இல் பதவி விலகத் துணிந்த போது, சென்னை நகரப் பெருமக்களுக்கு சத்தியமூர்த்தி மூன்று வேண்டு கோள்களை விடுத்தார்.

முதல் வேண்டுகோள்:

சென்னை நகரைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள், சுகா தாரம் மிக்க நகரமாக, அழகும் பொலிவும் மிகுந்த பெருநகர மாக விளங்கச் செய்யுங்கள்; நக ராட்சிப் பணியாளர்களுக்கு இதற்கான எல்லா ஒத்துழைப் பையும் தாருங்கள்'' என்பது தான்.

அவரது இரண்டாவது வேண்டு கோள்:

சென்னை நகரப் பெருமக் களே! நீங்கள் மாநகராட்சிக்குச் செலுத்த வேண்டிய வரிப்பணங் களை நீங்களேமுன்வந்து, குறித்த காலத்தில் செலுத்தி விடுங்கள்'' என்பதாகும்.

மூன்றாவது வேண்டுகோள்:

"சென்னை மாநகராட்சி உங்க ளுக்கு வழங்கும் குடிநீரை வீணாக்காது சிக்கனமாகப் பயன் படுத்துங்கள்'' என்பதாகும்.

இவ்வாறு உண்மையின் உருவ மாக, முத்தமிழ் போற்றிய வித்த கராக, தியாகச் செம்மலாக, பாரத நாட்டின் பெருந்தலைவ ராக விளங்கியவர் தீரர் சத்திய மூர்த்தி. சொல்லின் செல்வர், செயற்கரிய செய்த தீரர், சுதந் திர வீரர் சத்தியமூர்த்தியின் நல்ல குணநலங்களை நமது இளைஞர் சமுதாயம் என்றும் நினைவில் கொண்டு, போற்றிப் பயன்பெறுதல்தான் நாம் இன்று அவருக்குச் செய்யக்கூடிய உண்மை அஞ்சலியாகும்.

## புதுப்பொலிவில் சுற்றுலா மையங்கள் மாநாடு

"மத்திய அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் கண்காணிப்பில் உள்ள கோயில்கள் மற்றும் புராதனச் சின்னங்களின் வரலாற்றுப் பழமை மாறாதபடி புதுப்பிக்கப்பட்டுத் தேவையான விளக்குகள் பொருத்தப்பட்டு, சுற்றுப்புறத்தை அழகுபடுத்திப் பாதுகாக்க வேண்டும். புகழ்பெற்ற பழைய கட்டடங்கள், கோபுரங்கள், சிலைகள், சிற்பங்கள் ஆகி யவை மழையாலும், வெயிலினாலும், இயற் கையின் சீற்றத்தாலும் அழிந்து போவதைத் தடுக்க வேண்டும்.

பெரும்பாலான புராதன முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் சுற்றுலாச் சிறப்பு பெற்ற இடங்களாகவும் திகழ்கின்றன. ரஷ்ய நாட்டில் கிரம்ளின் மாளிகை, ஜார் அரண்மனை, மசூதிகள், மாதா கோயில்கள் பழமை மாறா மல் புதுப்பிக்கப்பட்டு, ஒளி விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டு, சுற்றுலாப் பயணி களைப் பெருமளவில் ஈர்க்கின்றன.

உலகத்திலே இரண்டாவதாகச் சிறப்புப் பெற்ற சென்னை மெரினாக் கடற்கரையிலும், வரலாற்றுப் புகழ்பெற்ற மாமல்லபுரம் கடற் கரையிலும் வெண்மை-தங்க நிற மணல் இன்று கறுப்பாக மாறி வருவதைக் காண்கி றோம். கடலில் எண்ணெய்க் கப்பல்கள் சுத்த மாக்கப்பட்டு, அக்கப்பலிலுள்ள கழிவு எண் ணெய் கடற்கரைக்கு வந்து சேர்ந்து, மண லின் நிறத்தைக் கறுப்பாக மாற்றி விடுகிறது. கோவாக் கடற்கரையும் மாசுபடுவதாகப் புகார்கள் கூறப்பட்டுள்ளன. சென்னை மெரினாக் கடற்கரை, மாமல்லபுரம் கடற் கரை, கோவாக் கடற்கரை ஆகியவற்றின் அழகு கெடாமல் மாசுபடுவதை உடனடி யாகத் தடுக்க மைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று மாண்புமிகு தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் மாநாட்டில் கேட்டுக் கொண்டார்கள்.

# பகுத்தறிவுத் தந்தை



மகாத்மா என்றால் அண்ணல் காந்தியடிகள் என்று எவருமே புரிந்து கொள்வதைப்போலவே, பெரியார் என்றால் பகுத்தறிவுத் தந்தை பெரியார் ஈ.வெ. இராமசாமி என்று எவருமே புரிந்து கொள்வர். அந்த அளவிற்குத் தூய தொண்டால் தமிழ்மக்கள் நெஞ்சில் நிறைந்திருக்கும் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவர் தந்தை பெரியார்.

தொண்ணூற்றைந்து ஆண்டுகள் வாழ்ந்தார் என்றாலும், அவரது ஒவ்வொரு சொல்லும் செயலும் நாட்டிற்காகவே என்று, எண்ணிப் பணியாற்றினார். ஏழைக்குத் தொண்டு செய்வதே பிறவியின் பயன் என்று கருதி வாழ்ந்தார். தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தம் பேச்சாலும், எழுத்தாலும் தன்மான உணர்ச்சியை ஊட்டித் தலைநிமிர்ந்து நடக்கச் செய்தார்.

தமிழ்நாடு காங்கிரசின் செயலாளராகவும், தலைவராகவும் பொறுப்பேற்று, தமிழ்நாடு முழுவதும் சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்தார். விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டுப் பலமுறை சிறை சென்றார். காந்தியடிகளின் முப்பெரும் கோட்பாடுகளான கதராடை அணிதல், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு ஆகியவற்றை முழுமூச்சுடன் ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார்.

மனிதர்களுக்கு இடையே வேறுபாடுகளைக் கண்டபோது எரிமலையென வெடித்தார். ''நமது மூட நம்பிக்கையும், முட்டாள்தனமும் நம்மைவிட்டு விலகி, சுயமரியாதை அடைந்த பிறகுதான், நாம் ஆட்சிபுரிவதற்கு உரியவர்கள் ஆவோம்'' என்று வாதிட்டார்.

அறியாமையாலும், குருட்டு நம்பிக்கைகளாலும், மூடப்பழக்க வழக்கங்களாலும், பலவித இன்னல்களுக்குள்ளாகி, இந்த இன்னல்களுக்கெல்லாம் தங்கள் தலைவிதிதான் காரணம் என்று, விதி என்ற ஒன்றை உருவாக்கி, அதன்மீது பாரத்தைப் போட்டுவிட்டு, தன் நிலை உணராது, காலத்தைக் கடத்திவந்த நம் இந்திய நாட்டின் பெரும் பிரிவு மக்களை விழிப்படையச் செய்தார்.

உயர்வு தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்துவரும் சாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும் என்பதற்காகவே கிராமம்கிராமமாகச் சென்று, மேடைகளில் முழங்கினார்; ஏடுகளில் எழுதினார்; களம்பல கண்டார்; சிறைவாசம் ஏற்றார்.

தீமைக்குத் தலைகுனியாமல், எதிர்ப்புக்கும், ஏளனத்துக்கும், மிரட்டலுக்கும், அடக்குமுறைக்கும் அஞ்சாமல், சமூகவாழ்விலும், பொருளாதாரத்திலும் மக்கள் யாவரும் சமத்துவமாய் வாழவேண்டும் என்பதற்காகவே அல்லும் பகலும் அயராது உழைத்தார்.

தமது தொண்ணூற்று ஐந்தாம் வயதில் வாழ்ந்த தொண்ணூற்று எட்டு நாட்களில் முப்பத்தைந்து நாட்கள் சூறாவளிச்சுற்றுப் பயணம் செய்திருக்கிறார். கூனிக்குறுகி, மண்டியிட்டு, மானமிழந்து, பிரிந்து, பாழாகிவிட்ட மக்களுக்கு உணர்ச்சி, மானம், தெளிவு ஏற்பட அவர்பட்ட பாடு, 60 ஆண்டுகளுக்கு மேலாக இறுதி மூச்சு உள்ளவரை அவர் உழைத்த உழைப்பு-உலக வரலாற்றிலேயே மிக உயர்ந்த இடத்தை அவருக்குப் பெற்றுத்தந்துள்ளன.

எனவேதான், பெரியாருடைய பெரும் பணியை, **'ஒரு தனி மனிதனின் வரலாறு என மட்டுமின்றி, ஒரு சகாப்தம் - ஒரு காலக்கட்டம் - ஒரு திருப்பம்'** என்று பேரறிஞர் அண்ணா போற்றினார், **''என் வாழ்நாளில் ஒரே ஒரு தலைவரைத்தான் கண்டேன். அவரைத்தான் என் தலைவராகக் கொண்டேன். அவர்தான் பெரியார்**, என்று பெருமிதமும் அடைந்தார்.

**- வ. இராசமனோகரன்**

# நேருவின் வாழ்க்கை ஏட்டில் சில காட்சிகள்



தந்தை மோதிலால் நேரு, தாய் சொரூபராணி ஆகியோருடன் குழந்தைப் பருவத்தில் நேரு

அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றிய தந்தையுடன் நேரு (1912)





அண்ணல் காந்தியடிகள், மௌலானா அபுல் கலாம் ஆசாத் ஆகியோருடன்

கவியரசர் ரவீந்திரநாத் தாகூருடன் நேரு (1936)





1947–ஆம் ஆண்டு ஆகஸ்டு 14-ஆம் நாள் இரவு 12 மணி அடித்தவுடன், இந்தியா சுதந் திரம் பெற்றது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதம மந்திரியாக 1947, ஆகஸ்டு 15 அன்று பதவி ஏற்றார் நேரு.

முன்னாள் குடியரசுத் தலைவர் இராஜேந்திர பிரசாத், மௌலானா அபுல்கலாம் ஆசாத் ஆகியோருடன் நேரு.





சர்தார் வல்லபபாய் பட்டேலுடன் நேரு

டெல்லி செங்கோட்டையின் கொத்தளத்தில் நின்று சுதந்திர நாள் விழா உரையாற்றுகிறார்.





தமிழ்நாட்டிற்கு வருகை தந்தபோது (1959)



'பாரத ரத்னா' விருது பெறுகிறார் நேரு (1955)



இந்தியா சுதந்திரம் அடைந்தபோது இங்கிலாந்தின் பிரதமராக இருந்த அட்லியுடன் நேரு (1947)



அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த கென்னடியுடன் நேரு (இடையில் நிற்பவர் லிண்டன் பி. ஜான்சன்)



கூட்டுச் சேராக் கொள்கையுடைய ஐம்பெரும் நாடுகளின் தலைவர்கள் நேரு, நுக்குருமா, நாசர், சுகர்னோ, டிட்டோ



# மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 14-1-1982-இல் நாட்டுக்கு அறிவித்த இருபது அம்சத் திட்டம்

1. பாசன வசதியை அதிகரித்தல், மழையை நம்பியிருக்கும் விவசாயத்திற்கான பொருட்கள் கிடைத்தலை அதிகரித்தல், இந்நிலங்களுக்கான தொழில் நுட்பத்தை வளர்த்துப் பரப்பல்.

2. பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்க விசேட முயற்சி மேற்கொள்ளல்.

3. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி மற்றும் தேசிய கிராம வேலைவாய்ப்புத் திட்டங்களை வலுப்படுத்துதல், விரிவாக்குதல்.

4. விளை நில உச்சவரம்பை அமலாக்கல், உபரி நில விநியோகத்தைப் பூர்த்தி செய்தல் மற்றும் நிர்வாக - சட்ட இடையூறுகளை அகற்றி நிலப்பட்டாக்களைத் தொகுக்கும் பணியைப் பூர்த்தி செய்தல்.

5. விவசாயத் தொழிலாளரின் குறைந்தபட்ச ஊதியத்தை மறுபரிசீலனை செய்து பயன் தரும் வகையில் அமலாக்கல்.

6. பிணைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்.

7. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் வளர்ச்சிக்கான திட்டங்களை விரைவுபடுத்துதல்.

8. பிரச்சனைக் கிராமங்கள் அனைத்துக்கும் குடிநீர் வழங்கல்.

9. வீடற்ற கிராமக் குடும்பங்களுக்கு வீட்டுக்கான மனை வழங்கி, வீடு கட்டுவதில் அவர்களுக்கு உதவுவதற்கான திட்டங்களை விரிவாக்குதல்.

10. சேரிகளின் சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்துதல், எளியோருக்கு வீடு கட்டும் திட்டங்களை அமலாக்கல் மற்றும் நில விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்தல்.

11. மின்சார உற்பத்தியை உயர்ந்தபட்சமாக்குதல், மின்சார அமைப்புகளின் இயக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் கிராமங்கள் அனைத்துக்கும் மின்சார வசதி அளித்தல்.

12. காடு வளர்ப்பு, சமுதாய - பண்ணை மர வளர்ப்பு, சாண எரிவாயு போன்ற மாற்று எரிபொருள் மூலங்களை வளர்த்தல்.

13. குடும்ப நலத் திட்டத்தை, தொண்டு அடிப்படையில், ஒரு மக்கள் இயக்கமாகப் பரப்புதல்.

14. அடிப்படைச் சுகாதார வசதிகளைக் கணிசமாக அதிகப்படுத்துதல், தொழு நோய், காசம், பார்வை இழத்தல் போன்றவற்றைக் கட்டுப்படுத்துதல்.

15. பெண்கள், குழந்தைகள், கருவுற்ற பெண்கள், தாய்ப்பாலூட்டும் பெண்கள், குழந்தைகள் முதலியோருக்கான சத்துணவு, மற்றும் நல்வாழ்வுத் திட்டங்களை விரைவுபடுத்தல், முக்கியமாகப் பழங்குடியினத்தவர், மலை மற்றும் பிற்பட்ட பகுதிகளில் இத்திட்டங்களை விரைவுபடுத்துதல்.

16. 6-லிருந்து 14 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கிடையே-முக்கியமாக-பெண் குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வியைப் பரப்பல்; அதே சமயத்தில் மாணவ மாணவியர்களையும், சேவை நிறுவனங்களையும் வயது வந்தோரிடையே கல்வி அறிவின்மையை அகற்றும் திட்டங்களில் ஈடுபடுத்துதல்.

17. அதிகப்படியான நியாய விலைக் கடைகள் மூலமாக பொது விநியோக முறையை விரிவுபடுத்துதல், தொலைதூரப் பகுதிகளில் நடமாடும் கடைகளை ஏற்படுத்துதல், தொழிற்சாலைத் தொழிலாளர்கள் மற்றும் விடுதியில் உள்ள மாணவர்களுக்கு வசதியாக அப்பகுதிகளில் கடைகள் நிறுவுதல்; மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களும், குறிப்பேடுகளும் கிடைக்கச் செய்ய முன்னுரிமை அடிப்படையில் ஏற்பாடு செய்தல், வலுவானதொரு நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தை வளர்த்தல்.

18. திட்டங்கள் உரிய நேரத்தில் பூர்த்தி அடைவதை உறுதி செய்வதற்காக முதலீட்டு நடவடிக்கைகளைத் தாராளப்படுத்துதல், தொழில்துறைக் கொள்கைகளை எளிதாக்குதல், கைவினைப் பொருட்கள், கைத்தறி, சிறிய மற்றும் கிராமத் தொழில்கள் வளர்ந்து, தொழில் நுட்பத்தை நவீனப்படுத்திக் கொள்வதற்கு, அவற்றுக்கு எல்லா வசதிகளையும் அளித்தல்.

19. கள்ளக் கடத்தல்காரர்கள், பதுக்கல்காரர்கள், வரிகொடாது ஏய்ப்பவர்கள் ஆகியோருக்கு எதிராகத் தொடர்ந்து கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளல்; கறுப்புப் பணத்தை ஒழித்தல்.

20. திறன் உபயோகிப்பு, உள் வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளல் ஆகியவற்றின் மூலமாக அரசு அமைப்புகளின் இயக்கத்தை மேம்படுத்துதல்.



உரிய மேம்படுத்தப்பட்ட விதைகள் விநியோகிக்கப்படும்.

வறட்சியால் பாதிக்கப்படும் பகுதிகள் மற்றும் வறட்சி நிவாரண நடவடிக்கைகளில் உரிய மாற்றங்கள் மூலமாக வறட்சி அதிகம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப்படும்.

**3. பாசன நீரை முறைப்படுத்தல்**

நீர் பிடிப்புப் பகுதிகளை மேம்படுத்தி வடிநிலப் பிரதேசங்கள் டெல்டாப்பகுதிகளில் வடிகால் வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும்.

முக்கியப் பகுதிகளில் பாசன நிர்வாகம் மேம்படுத்தப்படும்.

தண்ணீர் தேங்குதல், உப்புத்தன்மை ஏற்படுதல், தண்ணீரை வீணாக்குதல் ஆகியவை தடுக்கப்படும்.

மேற்பரப்புத் தண்ணீர், நிலத்தடி நீர் உபயோகம் ஒருங்கிணைக்கப்படும்.

# பிரதமர் ராஜீவ்காந்தி அறிவித்த புதிய 20 அம்சத் திட்டம்-1986

**1. கிராமப்புற வறுமையை நீக்குதல்**

ஏழ்மையை அகற்றுவதற்கான திட்டங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் எல்லா ஏழை மக்களுக்கும் போய்ச் சேரும்படி பார்த்துக்கொள்ளப்படும்.

ஊதிய வேலைவாய்ப்புத் திட்டங்கள் வட்டார மேம்பாடு மனிதவள வளர்ச்சித் திட்டங்களோடு இணைக்கப்படும். பள்ளிக் கட்டிடங்கள், சாலைகள், ஏரிகள், எரிபொருள், கால்நடைத் தீவனம் போன்ற தேசிய சமுதாய வசதிகளுக்கு வகை செய்யப்படும்.

உற்பத்தித் திறன், உற்பத்தி ஆகியவற்றை மேம்படுத்த, கிராம வேலை வாய்ப்பை விரிவுபடுத்த, பல்வேறு கிராம மேம்பாட்டுத் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்படும்.

கைத்தறி, கைவேலை, கிராம மற்றும் சிறு தொழில்களுக்கு ஊக்கம் அளிக்கப்படும். சுய வேலை வாய்ப்புக்கான திறன் மேம்படுத்தப்படும்.

ஊராட்சிகள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்குப் புத்துயிர் அளிக்கப்படும்.

**2. மானாவாரி விவசாயப் பாதுகாப்பு**

நிலத்தில் ஈரப்பசையைப் பாதுகாப்பதற்கான தொழில் நுட்பம் மேம்படுத்தப்படும். நிலம், நீர் வசதிகள் இன்னும் நல்ல முறையில் நிர்வகிக்கப்படும்.

**4. விளைச்சலைப் பெருக்குதல்**

கிழக்கு வட்டாரத்திலும், உற்பத்தித் திறன் குறைவாக உள்ள மற்ற பகுதிகளிலும் அரிசி உற்பத்தியில் புரட்சிகரமான மாற்றங்கள் செய்யப்படும்.

சமையல் எண்ணெய்யில் தன்னிறைவு எட்டப்படும். பருப்பு வகைகள் இன்னும் அதிகமாக உற்பத்தி செய்யப்படும்.

பழம், கறிகாய் சாகுபடி தீவிரப்படுத்தப்படும். விவசாயப் பண்டங்கள் தொடர்பாக நவீன சேமிப்பு வசதி, பக்குவப்படுத்தும் வசதி, மற்றும் விற்பனை வசதி ஆகியவை அதிகரிக்கப்படும்.

கால்நடை வளர்ச்சிக்கும் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்யும் விவசாயிகளின் உற்பத்தித் திறனை அதிகரித்துக் கொள்வதற்கும் உதவி வழங்கப்படும்.

மீன் பண்ணை மற்றும் மீன் பிடிப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

**5. நிலச் சீர்திருத்தங்களை அமல் செய்தல்**

நில ஆவணங்கள் நிறைவு செய்யப்படும்.

விவசாய நில உச்சவரம்பு நிர்ணயிக்கும் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டு விடும்.

உபரி நிலம், நிலமற்றவர்களுக்கு விநியோகிக்கப்படும்.

## 6. கிராமப்புறத் தொழிலாளர்களுக்குச் சிறப்புத் திட்டங்கள்

விவசாய சிறப்புத் தொழில்துறைகளில் ஒழுங்குபடுத்தப்படாத தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் அமலாக்கப்படும்.

பிணைத் தொழிலாளர் முறையை அகற்றும் சட்டங்கள் பூரணமாக நிறைவேற்றப்படும்.

பிணைத் தொழிலாளர்களின் மறுவாழ்வுக்கான திட்டங்களில் தொண்டு நிறுவனங்கள் ஈடுபடுத்தப்படும்.



## 7. சுத்தமான குடிநீர் வழங்குதல்

எல்லாக் கிராமங்களுக்கும் பாதுகாப்பான தண்ணீர் வழங்கப்படும்.

இது போன்ற தண்ணீர் வழங்கு மூலாதாரங்களை நல்ல முறையில் பராமரிப்பதற்கு உள்ளூர் மக்களுக்கு உதவி வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குத் தண்ணீர் விநியோகம் தொடர்பாகத் தனிக் கவனம் செலுத்தப்படும்.

## 8. அனைவருக்கும் சுகாதார வசதி

ஆரம்பச் சுகாதாரப் பாதுகாப்பின் தரம் மேம்படுத்தப்படும்.

தொழுநோய், காசநோய், மலேரியா, பார்வை இழப்பு மற்றும் பெரும் நோய்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடப்படும்.

கிராமப்பகுதிகளில் குறிப்பாக பெண்களுக்கு, கழிப்பறை, குளியலறை போன்ற வசதிகளுக்கு வகை செய்யப்படும்.

ஊனமுற்றோர்களின் மறுவாழ்வுக்கான திட்டங்களில் தனிக்கவனம் செலுத்தப்படும்.

## 9. குடும்பத்திற்கு இரண்டே குழந்தைகள்

இரண்டு குழந்தை நெறியை, மக்கள் தாங்களாகவே ஏற்றுக் கொள்வதற்கு வகை செய்யப்படும்.

பெற்றோர்களிடையே பொறுப்பு உணர்ச்சி வளர்க்கப்படும்.

குழந்தை மரணவிகிதம் குறைக்கப்படும்.

மகப்பேறு, குழந்தைப் பாதுகாப்பு வசதி விரிவுபடுத்தப்படும்.

## 10. கல்வித் திட்டத்தை விரிவுபடுத்துதல்

ஆரம்பக் கல்வி எல்லாருக்கும் கிடைக்கும்படி செய்யப்படும். இதில் பெண் கல்வியில் தனிக்கவனம் செலுத்தப்படும்.

எல்லா மட்டங்களிலும் கல்வியின் தரம் மேம்படுத்தப்படும்.

முறைசாராக் கல்வி மற்றும் எழுத்தறிவுப் திட்டங்கள் மேம்படுத்தப்படும். திறமையை வளர்ப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

மாணவர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் முதியோர் கல்வி திட்டத்திற்கு ஊக்கம் அளிக்கப்படும்.

தேசிய ஒருமைப்பாடு, சமூகப்பண்புகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு, நமது பாரம்பரியத்தின் பெருமையை உணரும்படி செய்யப்படும்.

## 11. தாழ்த்தப்பட்டோருக்கு நியாயம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான அரசியல் ரீதியான வசதிகள், சட்டங்கள் பின்பற்றப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலம் அவர்களுக்குக் கிடைக்கும்படி செய்யப்படும்.

நில ஒதுக்கீட்டுத் திட்டத்திற்கு வலுவூட்டப்படும்.

கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கான தனிப் பயிற்சி வகுப்புகளுக்கு வகை செய்யப்படும்.

சிறப்புத் திட்டங்களுக்கு இன்னும் நல்ல முறையில் போதிய நிதி வசதிக்கு ஏற்பாடு செய்யப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகத்தின் மற்ற பிரிவினருடன் பூரணமாக இணைந்து வாழ்வதற்குத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

சொந்த இடத்திலிருந்து குடிபெயர்ந்துள்ள பழங்குடியினர் மறுவாழ்வுக்கு வகை செய்யப்படும்.

## 12. பெண்களுக்குச் சம உரிமை

பெண்களின் நிலை உயர்த்தப்படும்.

பெண்களுக்குரிய பிரச்சனை சம்பந்தமாக இன்னும் அதிக விழிப்பு உணர்ச்சி ஏற்படுத்தப்படும்.

பெண்களின் உரிமைகளைப்பற்றி மக்கள் தெரிந்துகொள்வதற்கு ஆவன செய்யப்படும்.

பெண்களின் பயிற்சி, வேலைவாய்ப்புக்கென தேசியத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

சமூக, பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளிலும், நாட்டை நிர்வகிக்கும் பணிகளிலும், பெண்களும் சம பங்கு பெறுவதற்கு வகை செய்யப்படும்.

வரதட்சிணைக்கு எதிராக மக்களிடையே விழிப்பு உணர்ச்சியை ஏற்படுத்திவரதட்சிணை ஒழிப்புச் சட்டம் பயன் உள்ள முறையில் நிறைவேற்றப்படும்.

## 13. இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள்

விளையாட்டுகளிலும், கலாச்சார நடவடிக்கைகளிலும், திரச் செயல்களிலும், இளைஞர்களுக்கு இன்னும் அதிக வாய்ப்பு அளிக்கப்படும்.

உடல் வலிமை பேணிப் பாதுகாக்கப்படும்.

கங்கை நதியைத் தூய்மைப்படுத்துவது, சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பது, மக்களுக்குப் பெரும் அளவில் கல்வி வசதி அளிப்பது போன்ற தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் இளைஞர்கள் பெரும் அளவில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

எல்லாத் துறைகளிலும் சிறப்பு வாய்ந்த இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுடைய திறன் மேம்படுத்தப்படும்.

தேசிய ஒருமைப்பாடு, கலாச்சாரப் பண்பாடுகள், மதச் சார்பின்மை, அறிவியல் உணர்வு ஆகியவற்றின் வளர்ச்சிப் பணிகளில் இளைஞர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

நேரு யுவ கேந்திரங்களின் கூட்டமைப்பு விரிவுபடுத்தப்படும்.

தேசிய சேவைத் திட்டம், தேசிய மாணவர் படை ஆகியவை வலுப்படுத்தப்படும்.

கிராமப்புற இளைஞர்களின் நலனுக்காகப் பாடுபடும் தொண்டு நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிக்கப்படும்.

## 14. வீட்டுவசதி

கிராமப்புற ஏழை மக்களுக்கு வீட்டு மனைகள் கிடைக்கும்படி செய்யப்படும்.

குடியிருப்பு கட்டுமானப்பணிகள் விரிவுபடுத்தப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான குடியிருப்பு கட்டுமானப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

குறைந்த செலவில் கட்டுமானப் பொருட்கள் உருவாக்கப்படும்.

## 15. குடிசைப் பகுதிகளைச் சீர் செய்தல்

குடிசைப்பகுதிகள் வளர்ச்சி கட்டுப்படுத்தப்படும்.

ஏற்கனவே உள்ள குடிசைப்பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

நகர்ப் பகுதிகளில் திட்டமிட்ட குடியிருப்பு கட்டுமானப் பணிகளுக்கு ஊக்கம் அளிக்கப்படும்.

## 16. வனப் பாதுகாப்புக்குப் புதிய திட்டம்

மக்களின் முழு ஈடுபாட்டுடன் இன்னும் அதிகமான மரங்களும் காடுகளும் வளர்க்கப்படும்.

வனப் பொருட்கள் சம்பந்தமாக, பழங்குடி மக்களுக்கும், உள்ளூர் மக்களுக்கும் உள்ள பரம்பரை உரிமைகள் பாதுகாக்கப்படும்.

தரிசு நிலங்கள் பயனுள்ள காரியங்களுக்காகச் சீர் செய்யப்படும்.

மலை, பாலைவனம் மற்றும் கரையோரப் பகுதிகளில் உரிய தாவரங்கள் வளர்க்கப்படும்.

## 17. சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு

சுற்றுப்புறச் சூழல் குறைபாடுகளினால் ஏற்படக்கூடிய அபாயத்தை மக்கள் உணரும்படி செய்யப்படும்.

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக்கு மக்களின் ஆதரவு திரட்டப்படும்.

இடைவிடா அபிவிருத்திக்குச் சமச்சீரான தட்ப வெப்ப நிலையைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்படும்.

பல்வேறு திட்டங்களுக்கு நிலத்தைத் தெரிந்தெடுப்பதில் உரிய கவனம் செலுத்தப்படும்.

## 18. உபயோகிப்பாளர் நலனைக் காத்தல்

அவசிய உபயோகிப்பாளர் பண்டங்கள் ஏழை மக்களுக்கு எளிதாகக் கிடைக்கும்படி செய்யப்படும்.

உபயோகிப்பாளர் பாதுகாப்பு இயக்கம் ஒன்று உருவாக்கப்படும்.

உதவித்தொகைகள் அத்தியாவசியமானவர்களுக்குப் போய்ச் சேர்வதற்கு ஏற்ப, விநியோக முறை திருத்தி அமைக்கப்படும்.

பொது விநியோக முறை வலுப்படுத்தப்படும்.

## 19. கிராமங்களுக்கு மின் வசதி

கிராமங்களில் பயன்தரக்கூடிய தானியங்கிகளுக்கு மின்சக்தி வசதி விரிவுபடுத்தப்படும்.

மாற்று எரிபொருள் குறிப்பாக, சாண எரிவாயுக்கு வகை செய்யப்படும்.

கிராமப்புற எரிபொருள் உற்பத்திக்காக இணைப்பான வட்டாரத் திட்டங்களுக்கு ஊக்கம் அளிக்கப்படும்.

## 20. பயனுள்ள நிர்வாகம்

நடைமுறை எளிதாக்கப்படும்.
அதிகாரம் பரவலாக்கப்படும்.

பொறுப்புகள் வலியுறுத்தப்படும்.

வட்டார மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை கண்காணிப்பு முறைகள் உருவாக்கப்படும்.

பொதுமக்களின் குறைகள் உடனுக்குடன் பரிவுடன் கவனிக்கப்படும்.

# சிதம்பரனார் மாவட்டம்

சிதம்பரனார் மாவட்டம் 20.10.86 அன்று முதல் செயல்பட்டு வருகிறது. இம்மாவட்டம் இரண்டு கோட்டங்களையும், 7 தாலுக்காக்களையும், 12 ஊராட்சி ஒன்றியங்களையும் கொண்டுள்ளது. சிதம்பரனார் மாவட்டத்தின் மக்கள்தொகை 13,50,851 ஆகும். இம்மாவட்டத்தின் பரப்பளவு 4,635 சதுர கிலோமீட்டர்.

இம்மாவட்டத்தின் மக்களின் தலையாய தொழில் வேளாண்மையாகும். இம்மாவட்டத்தில் ஸ்பிக் உரத்தொழிற்சாலை, துறைமுகம், ஆல்காலி கெமிக்கல்ஸ், அனல்மின்நிலையம், கனநீர் தொழிற்சாலை மற்றும் இரண்டு நூற்பு ஆலைகள், ஆறுமுகனேரியில் தாரங்கதாரா கெமிக்கல் தொழிற்சாலை, கோவில்பட்டியில் லட்சுமி மில், வாயல் மில் தொழிற்சாலைகள் இயங்குகின்றன.

தமிழகத்தில் உற்பத்தியாகும் 15 இலட்சம் டன் உப்பில் தூத்துக்குடிப் பகுதியில் மட்டும் 13 லட்சம் டன் உப்பு உற்பத்தியாகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இம்மாவட்டத்தில் 7,000 குடும்பங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளன.

சிதம்பரனார் மாவட்டத்தில் 1986-87ஆம் ஆண்டு இருபது அம்சத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட பணிகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

1. இம்மாவட்டத்தில் பாசன வசதியைப் பெருக்குவதற்காகக் கொடுக்கப்பட்ட குறியீடான 220 எக்டேரில், 405 எக்டேர் பரப்பில் பாசன வசதி செய்து 188% சாதனை செய்யப்பட்டுள்ளது.

2(அ) இம்மாவட்டத்தில் பயறு வகைகள் உற்பத்திக்கு வழங்கப்பட்ட குறியீடான 8,100 மெட்ரிக் டன்னில், 8,002 மெட்ரிக் டன் உற்பத்தி இதுவரை செய்யப்பட்டுள்ளது.

2(ஆ) எண்ணெய் வித்துக்கள் உற்பத்திசெய்ய கொடுக்கப்பட்ட குறியீடான 31,600 மெட்ரிக் டன்னில், காலநிலை சரியில்லாததால் 21,000 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

3.(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

பொருளாதார நிலையில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களை மேம்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட இவ்வரிய திட்டத்தின் கீழ், கடந்த நிதியாண்டில் திருத்தியமைக்கப்பட்ட குறியீட்டின்படி 7,784 குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ 146.79 இலட்சம் மானியமாக வழங்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மார்ச் 1987 வரையில் 8,075 நபர்களுக்கு ரூ. 118.75 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதில் கால்நடைப்பராமரிப்புத்திட்டத்தின்கீழ் ரூ.44.80 இலட்சம் மானியத்தில் 2,294 குடும்பங்களும், விவசாயத்திட்டத்தில் ரூ. 12.95 இலட்சம் மானியத்தில் 766 குடும்பங்களும், மீன் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.5 இலட்சம் மானியத்தில் 250 குடும்பங்களும், மீதியுள்ள குடும்பங்கள் தொழில் வணிகச்சேவைத் திட்டத்தின் கீழும் பயனடைந்துள்ளன. இத்திட்டத்தில் 4,038 ஆதிதிராவிடக் குடும்பங்கள் 2693 பெண்கள் தலைவராக உள்ள குடும்பங்களும் பயனடைந்துள்ளன. நடப்பு நிதியாண்டில் (1986-87) அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டிற்கும் அதிகமாகவே குடும்பங்கள் பயனடையும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

**இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்புத் திட்டம்**

இத்திட்டத்தில் வேலையில்லா இளைஞர்கள் சுயவேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ளும் வகையில் மோட்டார் ரீவைண்டிங், ஆட்டோமொபைல்ஸ், பனைநார்ப் பொருட்கள் உற்பத்தி, பட்டுப்பூச்சி வளர்த்தல், மீன்வலை நெய்தல், ரேடியோ பழுது பார்த்தல், வாழை நாரிலிருந்து அலங்காரப்பொருட்கள் உற்பத்தி, வீடுகளில் வயரிங் செய்தல் ஆகிய பணிகளுக்காக உதவித்தொகையுடன் கூடிய பயிற்சிகள் அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் இந்த நிதியாண்டில் 7.85 இலட்சம் ரூபாய் செலவில் 420 பேருக்குப் பயிற்சிஅளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் மார்ச் 1987 முடிய ரூ.2.56 இலட்சம் செலவில் 350 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு சுயமாய் தொழில்கள் செய்யுமளவுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

3) வேளாண்பெருக்குத்திட்டம்

இத்திட்டத்தில் சிறுவிவசாயிகள், மிகச் சிறுவிவசாயிகள் தங்கள் நிலங்களைப் பாசனத்திற்குத் தகுந்தவாறு சீர்படுத்திக்கொள்ளவும், இருக்கிற கிணறுகளை ஆழப்படுத்தவும், புதிய கிணறுகளை வெட்டவும், ஆயில் என்ஜின்கள் வாங்கவும், பம்புசெட்டுகள் வாங்கவும் மானியத்துடன் கூடிய கடனுதவிகள் வழங்கப்பட்டுள்



ளன. சிறுபாசனத் திட்டத்திற்கு ரூ. 20.73 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இதில் 1987 மார்ச் வரையில் 1,033 விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ. 14.20 இலட்சம் மானியமாகவும் நிலச்சீர்திருத்தத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ.9.12 இலட்சத்தில் 1,169 விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ. 8.87 இலட்சம் மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளன. இதில் 546 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

**தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் கிராமப்புற ஏழைகளுக்கு வேலை வாய்ப்பளிப்பதன் மூலம் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச இல்லங்கள் கட்டிக்கொடுத்தல், கிராமப்புறச் சுகாதாரக் கழிப்பிடங்கள் அமைத்தல், கிராமங்களில் புதிய சாலைகள் அமைத்தல், பழுதடைந்த சாலைகளைப் பழுது பார்த்தல், காடுகள் ஏற்படுத்துதல் போன்ற பணிகளுக்காக சிதம்பரனார் மாவட்டத்திற்கு ரூ. 131.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் இம்மாவட்டத்தில் 621 ஆதிதிராவிட இல்லங்கள் கட்ட வேண்டும் என்ற குறியீட்டில் ரூ. 55.89 இலட்சம் செலவில் 621 இல்லங்கள் கட்டிமுடிக்கப்பட்டுவிட்டன.

கிராமப்புறச் சுகாதாரக் கழிப்பிடத் திட்டத்தின்கீழ் 134 கிராமப்புறக் கழிப்பிடங்கள் கட்டப்படவேண்டும் என்ற குறியீட்டில் மார்ச் 1987 வரை ரூ.1.60 இலட்சம் செலவில் 134 கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு அரசின் குறியீடு நிறைவு செய்யப்பட்டது. மேலும் இத்திட்டத்தில் 242 ஆழ்குழாய்க் கிணறுகளும், 47 சமூகக்கூடங்களும், 48 கிராமப்புறச் சாலைகளும் மற்றும் கழிவுநீர்க்கால்வாய், சமையல் அறை, சேமிப்புக் கிடங்கு, பள்ளிக் கட்டடங்கள் அமைத்தல் போன்ற சமூக நல முன்னேற்றப் பணிகள் நடைபெற்றுள்ளன.

காடு வளர்ப்புக்கென ரூ.20.40 இலட்சம் செலவில் 49 இலட்சம் கன்றுகள் வளர்த்து நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் மார்ச் 1987 முடிய ரூ.20.41 இலட்சம் செலவில் 25 இலட்சம் கன்றுகள் நடப்பட்டுளளன. இத்திட்டத்தில் ஆதி திராவிடர்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட செலவீட்டுத் தொகையாகிய ரூ. 54.46 இலட்சத்தில் மார்ச் 1987 முடிய ரூ. 54.48 இலட்சம் செலவு செய்யப்பட்டு 1.96 இலட்சம் மனித நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட மனித நாள் குறியீடாகிய 6.14 இலட்சத்தில் மார்ச் 1987 முடிய 4.28 இலட்சம் ஆண் மனித நாட்களும், 2.10 இலட்சம் பெண் மனித நாட்களும் உருவாக்கப்பட்டு இலக்கையும் மிஞ்சி சாதனை அடையப்பட்டுள்ளது

**ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டம்**

கிராமப்புறங்களில் விவசாயத் தொழிலை மட்டுமே நம்பியிருக்கின்ற நிலமில்லா ஏழை விவசாயக் கூலிகளுக்கு விவசாயத்தொழில் கிடைக்காத இடைப்பட்ட காலங்களில் வேலை வாய்ப்பளித்திடும் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்களுக்கு 728 இலவச இல்லங்கள் கட்டிக்கொடுக்கப்பட வேண்டும் என்ற குறியீட்டின்படி ரூ.79.32 இலட்சம் செலவுசெய்யப்பட்டு 5.17 இலட்சம் மனிதநாட்களும், கிராமப்புறச் சுகாதாரக் கழிப்பிடங்கள் கட்டும் திட்டத்தில் 238 என்ற குறியீட்டின்படி மார்ச் 1987 முடிய ரூ.3.58 இலட்சம் செலவு செய்யப்பட்டு 0.20 இலட்சம் மனிதநாட்களும் உருவாக்கப்பட்டுள்ளன. சமூகக்காடு வளர்ப்புத்திட்டத்தில் ரூ.32.74 இலட்சம் செலவில் 39 இலட்சம் கன்றுகள் நடப்பட்டு, 2.67 இலட்சம் மனிதநாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

4) இம்மாவட்டத்தில் உபரி நிலங்களை ஒதுக்குவதில் வழங்கப்பட்ட மொத்தம் 350 ஏக்கர் குறியீட்டிற்கு 357.33 ஏக்கர் நிலம் ஏழை மக்களுக்கு உபரிநிலமாக வழங்கி குறியீட்டில் 102 சதவீதம் எய்தப்பட்டுள்ளது.

7. (அ) 2,216 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு உதவி செய்யக் குறியீடு வழங்கப்பட்டது. ஆனால் மொத்தம் 4,553 குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன.

8. இம்மாவட்டத்தில் குடிநீர்ப் பிரச்சினையுள்ள 37 கிராமங்களுக்குக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க குறியீடு வழங்கியதில் குறியீட்டை மிஞ்சி மொத்தம் 85 கிராமங்களில் குடிநீர்ப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டது.

9. (அ) இம்மாவட்டத்தில் 1986-87ஆம் ஆண்டில் 5,800 நபர்களுக்கு வீட்டுமனை வழங்கப்பட வேண்டுமென்று இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 6,392 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

ஆ) வீடு கட்டுவதற்காக உதவி செய்ய இருபது அம்சத் திட்டத்தில் வழங்கப்பட்ட குறியீடான 1,380இல் 1,464 வீடுகள் கட்டிக் கொள்ளப்பட்டுள்ளன.

10. குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு குடிசைமாற்று வாரியம் மூலமாக 1,300 நபர்கள் பயனடையவேண்டும் என்று குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால் இதற்கு மீறிய சாதனையாக 1,464 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

## தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் சாதனை

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழ
கத்தில் 1987 அக்டோபர் வரை 2,431.33
எக்டேர் நிலத்தில் தேயிலை பயிரிடப்பட்
டுள்ளது. இத்துடன் வனத் துறையில் கொளப்
பள்ளிக் கோட்டத்தில் பயிரிடப்பட்ட தேயி
லைத் தோட்டங்கள் 347 எக்டேர் பரப்பும்
இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுப் பரா
மரிக்கப்படுகிறது. இந்தக் கழகத்தில் மொத்
தம் கட்டப்பட வேண்டிய 2,753 தொழி
லாளர் குடியிருப்புகளில் 1987 அக்டோபர்
வரை 2,532 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.
மீதமுள்ள வீடுகளைக் கட்டி முடிக்க நட
வடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
இந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் மட்டும்
25,54,329 கி.கி. கொழுந்து தேயிலை அறு
வடை செய்யப்பட்டுள்ளது.

10(அ) பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள நலிவுற்றோருக்கான வீட்டு வசதி செய்து கொடுப்பதில் 5 நபர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

11) விவசாய மோட்டாருக்கு 1500 மின் இணைப்பு வழங்கக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில் 1,578 மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

12) பெரும் பகுதி இம்மாவட்டம் விவசாயத்தையே தலையாய தொழிலாகக் கொண்டுள்ளது. இம்மாவட்டத்தில் 1986-87-ஆம் ஆண்டு இருபது அம்சத் திட்டத்தின் கீழ் 28,57,000 மரக்கன்றுகள் நடக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டது. இலக்கு மீறிய சாதனையாக 49,32,900 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

12(அ) சுரிமவாயுக் கலம் அமைக்கும் திட்டத்தில் இம்மாவட்டத்தில் 600 குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டதில், 601 கலங்கள் நிறுவப்பட்டுள்ளன.

13(அ) குடும்பநலத் திட்டத்தில் 16,122 நபர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்வதென இலக்கு நிர்ணயம் செய்ததில் மொத்தம் 10,754 நபர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

13(ஆ) குடும்பநலத் திட்டத்தில் பெண்களுக்கான கருத்தடை வளையம் பொருத்துவதில் 5,680 இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டதில், 22,513 தாய்மார்களுக்குக் கருத்தடை வளையம் பொருத்தப்பட்டு, இலக்கு மீறிய சாதனை அடையப்பட்டது.

13(இ) மொத்தம் 3,692 நபர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் தடுப்பு உறைகள் உபயோகிக்கக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால் 5,940 நபர்கள் பயன்பெறச் செய்து 161% சதவீதம் எய்தப்பட்டது.

13(உ) மாத்திரை உட்கொள்வதன் மூலம் குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்த 2,158 நபர்கள் எனக் குறியீடு நிர்ணயம் செய்ததில், மொத்தம் 2,637 நபர்கள் இத்திட்டத்தினால் பயன் அடைந்துள்ளனர்.

14(அ) இம்மாவட்டத்தில் மொத்தம் 1986-87இல், 6 ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு 6 ஆரம்பச் சுகாதார நிலையங்களும் அமைக்கப்பட்டு குறியீடு எய்தப்பட்டுள்ளது.

## தமிழக வனத்துறைத் திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு இந்தியப் பிரதமர் பாராட்டு

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் வனத்துறை அமைச்சர்களின் 22-வது மாநாட்டை 7.12.87 அன்று புதுடில்லியில் துவக்கி வைத்து உரையாற்றுகையில், தமிழ்நாட்டு அரசின், வனத்துறையின் பணிகளை இருமுறை பாராட்டினார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் அமைந்துள்ள தமிழக அரசு, தமிழகத்தில் வன வளங்களையும், வனச் செல்வங்களையும் திறமையாகப் பாதுகாப்பதையும், சீரிய முறையில் திட்டமிட்டு வளர்ப்பதையும் மாண்புமிகு பிரதமர் அவர்கள் பெரிதும் பாராட்டினார்கள். இப்பணியைச் செவ்வனே தொடர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள்.

தமிழக வனத்துறைப் பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி. வி. சுவாமிநாதன் அவர்கள் தனது உரையில், இந்தியாவிலேயே முதன் முறையாகத் தமிழகத்தில் 9 கோடி மரக்கன்றுகளைப் பள்ளி மாணவ, மாணவியர்களைக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் நடும் மாபெரும் திட்டத்தை விவரித்தார்கள்.

இந்தியா சுதந்திரம் அடைந்து 40-வது ஆண்டான இவ்வாண்டில், தமிழகத்தில் 20 இடங்களில், ரூ.1 கோடி மொத்தச் செலவில் வனத்தோட்டங்கள் அமைக்கப்படுவதையும், புதிய நீர் நிர்வாக வனத்திட்டத்தையும் (Water Harvest) மலைவாழ் மக்களின் நலனுக்கான வனத்துறைத் திட்டங்களையும் எடுத்துரைத்தார்கள். "தமிழகத்தில் உள்ள வன வளங்கள் அழிவதை முன்னிலும் தடுத்து நிறுத்த, இந்தியாவிலேயே முதல் முறையாக நீலகிரி மலைப் பகுதியில் பணிபுரியும் வனத்துறை அலுவலர்களுக்குக் கம்பியில்லாத் தொலைபேசுத் தொடர்புக் கருவிகள் (Walkie Talkie) வழங்கப்பட்டுள்ளன" என்றும், "மாநிலத்தில் இதர பகுதிகளுக்கும் விரைவில் இக்கருவிகள் வழங்கப்படவுள்ளன" என்றும் தெரிவித்தார்கள்; "இதனால் விரைந்து செயல்பட்டு வனக் குற்றங்கள் புரிபவர்களைத் தடுத்துப் பிடிக்க ஏதுவாகும்" என்றும், "மேலும் வனக்குற்றம் புரிபவர்களைக் குண்டர்கள் சட்டத்தின்கீழ் கைது செய்து காவலில் வைக்க சட்டத் திருத்தங்கள் தமிழகத்தில் செய்யப்பட்டுள்ளன" என்றும் தெரிவித்தார்கள்.

14.(பி) இம்மாவட்டத்தில் 1 துணைச் சுகாதார நிலையம் இந்த ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளது.

15) ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதில் 100% சாதனை புரியப்பட்டுள்ளது.

16) இந்த நிதியாண்டில் மொத்தம் 8,993 குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு, இதில் 8,500 குழந்தைகள் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

16(அ) வயது முதிர்ந்தவர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்காக இம்மாவட்டத்திற்கு மொத்தம் 27,660 பேருக்குக் கல்வி வழங்கக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டதில், 27,660 முதியவர்கள் முதியோர் கல்வியில் சேர்க்கப்பட்டு குறியீடு நிறைவேற்றப்பட்டுள்ளது.

18. இம்மாவட்டத்தில் இருபது அம்சத் திட்டத்தில் 1986-87க்கு மொத்தம் 100 சிறுதொழில்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டதில், மொத்தம் 203 சிறு தொழில்கள் ஏற்படுத்தப்பட்டு 203 சதவீதம் சாதனை செய்யப்பட்டுள்ளது.

முக்கியமாக ஏழைகளின் துயர் துடைக்கும் திட்டங்களில் இம்மாவட்டம் தனிக் கவனம் செலுத்திவருகிறது.



கொடி நாளான 7.12.87 அன்று மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் கொடி நாள் நிதி வழங்கினார்.

# படமும் செய்தியும்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 7.12.87 அன்று ரூ. 10,000 வழங்கி கொடி நாள் நிதி வசூலைத் துவக்கி வைத்தார்.





மகாகவி பாரதியார் அவர்களின் 106-வது பிறந்தநாளான 11.12.87 அன்று சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள மகாகவி பாரதியார் திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு அமைச்சர் பெரு மக்கள் மாலை அணிவித்தார்கள்.



மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 110-வது பிறந்த நாளான 10.12.87 அன்று சென்னை பாரிமுனையில் அமைந்துள்ள மூதறிஞர் இராஜாஜி திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்தார்கள்.

# தென்னார்க்காடு மாவட்டம்

தென்னார்க்காடு மாவட்டத்தில் இருபது அம்சத்திட்டத்தின் அனைத்து அம்சங்களிலும் 1986-87ஆம் ஆண்டு 100 சதவீதத்தை விஞ்சிய சாதனைகள் செய்யப்பட்டுள்ளன. அதிலும் வீடுகள் கட்டுவதற்கு உதவி செய்யும் திட்டத்தில் 290.55 சதவீதமும், கிராமங்களில் மின்சாரம் வழங்குதலில் 200 சதவீதமும், தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் 190.61 சதவீதமும் பணிகள் செய்யப்பட்டு சாதனைகள் எய்தப்பட்டுள்ளன.

**அம்சம் : 1**

பாசன வசதியை அதிகரிக்கும் திட்டத்தின் கீழ் 4900 எக்டேருக்குப் பாசன வசதி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 137.18 சதவீதம்சாதனை அடையப்பட்டுள்ளது.

**அம்சம் : 2**

பயறு வகைகள் 45 டன் உற்பத்திக்குப் பதிலாக 54.78 டன்களும், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் 294.9 டன்னுக்குப் பதிலாக, 327.95 டன்களும் உற்பத்தி செய்யப்பட்டு, முறையே 121.74 மற்றும் 111.20 சதவீதம் சாதனைகள் அடையப்பட்டுள்ளன.

**அம்சம் : 3**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களின் வறுமை நீங்கிட வழி செய்யும் நோக்குடன் 8,331 நபர்களுக்கு இரண்டாவது கறவைமாடு கடனும், புதிதாக 8,635 நபர்களுக்குக் கறவை மாடு கடனும் வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், முறையே 9,597 மற்றும் 11,851 நபர்களுக்குக்கடன்கள் வழங்கப்பட்டு, 115.19 மற்றும் 137.24 சதவீதம் சாதனைகள் செய்யப்பட்டுள்ளன

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 3,162 மனித சக்தி நாட்கள் தோற்றுவிக்கப்பட வேண்டிய இலக்கில் 3,716 மனித சக்தி நாட்கள் தோற்றுவிக்கப்பட்டு 117.52 சதவீதம் சாதனை அடையப்பட்டுள்ளது. ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின் கீழ், 2,496.4 மனித சக்தி நாட்கள் தோற்றுவிக்கப்பட வேண்டிய இலக்கில், 2,954 மனித சக்தி நாட்கள் தோற்றுவிக்கப்பட்டு, அதன் மூலம் 118.33 சதவீதமும் அடையப்பட்டுள்ளது

**அம்சம் : 4**

உபரி நிலத்தைக் கையகப்படுத்தி 50 ஏக்கர் நிலப்பட்டா வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 51.21 ஏக்கர் பட்டா வழங்கப்பட்டு 102.42 சதவீத சாதனை அடையப்பட்டுள்ளது.

**அம்சம் : 7**

தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உதவிகள் செய்வதில், 7,960 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு உதவிகள் செய்திடத் திட்டமிடப்பட்டு, 15,173 குடும்பங்களுக்கு உதவிகள் செய்ததன் மூலம், 190.61 சதவீதமும், 1595 பழங்குடியினர் குடும்பங்களுக்கு உதவிகள் செய்திடத் திட்டமிடப்பட்டு, 1968 குடும்பங்களுக்கு உதவிகள் செய்ததன் மூலம், 122.38 சதவீதமும் சாதனைகள் அடையப்பட்டுள்ளன.

**அம்சம் : 8**

இருபது அம்சத் திட்டத்தின் கீழ் 130 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கிட திட்டமிடப்பட்டு 130 கிராமங்களுக்கும் குடிநீர் நிரந்தரமாகக் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டு 100 சதவீத சாதனை அடையப்பட்டுள்ளது.

**அம்சம் : 9**

10,000 ஏழைகளுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட வேண்டியதில், 17,474 நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கியதன் மூலம், 174.74 சதவீதமும், 4,000 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டு, 11,638 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித் தரப்பட்டதன் மூலம், 290.95 சதவீதமும் சாதனைகள் அடையப்பட்டுள்ளன.

**அம்சம் : 10**

குடிசைப்பகுதிகளை மேம்படுத்தும் பணியில் 1,100 பணிகளுக்குப் பதிலாக 1,193 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 108.45சதவீதமும், பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பிரிவினருக்கு 100 நபர்களுக்கு உதவிகள் செய்யப்பட்டு 100 சதவீதமும் சாதனை அடையப்பட்டுள்ளது.



**அம்சம் : 11**

8 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட வேண்டிய இலக்கில் 16 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு, 200 சதவீத சாதனையும், 4,817 நீர் இறைக்கும் எந்திரங்களுக்கு மின் இணைப்பு வழங்கிட வேண்டிய இலக்கில், 4,340 மின் இணைப்பு வழங்கப்பட்டு 90.09 சதவீத சாதனையும் அடையப்பட்டுள்ளன.

**அம்சம் : 12**

8,332 மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 12,498 மரக்கன்றுகள் நடப்பட்டு, 150 சதவீத சாதனை அடையப்பட்டுள்ளது. 1,087 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன.




**அம்சம் : 13**

34,585 நபர்கள் குடும்ப நல அறுவைச் சிகிச்சையாலும், 46,785 நபர்கள் கருத்தடைச் சாதனங்களாலும், பயனடைந்துள்ளனர்.

**அம்சம் : 14**

4 சுகாதாரக்கிளைநிலையங்கள் தொடங்கப்பட இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 6 நிலையங்கள் தொடங்கப்பட்டு 150 சதவீதம் சாதனை அடையப்பட்டுள்ளது.

**அம்சம் : 16**

6 முதல் 14 வயதுடைய சிறார்கள் 20,289 பேர்களுக்குக் கல்வி வசதியும், 1,13,851 முதியோர்களுக்குக் கல்வி வசதியும் வழங்கப்பட்டு, முறையே 106.22 மற்றும் 162.87 சதவீதம் சாதனைகள் அடையப்பட்டுள்ளன.

**அம்சம் : 18**

300 சிறுதொழில்கள் தொடங்கப்பட இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 385 சிறு தொழில்கள் தொடங்கப்பட்டதன் மூலம் 128.33 சதவீத சாதனை அடையப்பட்டுள்ளது.

---

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகில் கருக்கட்டான் பட்டியில் கூட்டுறவின் மூலம் மிகச் சிறந்த கோழிப்பண்ணை அமைக்கப்பட்டு நிர்வாகிக்கப்பட்டு வருகிறது. 1984-85- ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் கூட்டுறவு முறையில் அமைக்கப்பட்டுள்ள இக் கோழிப்பண்ணையில் 50 நபர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். வங்கியின் மூலம் ரூ. 3,25,000 - கடனாகப் பெற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கோழிப் பண்ணையின் மூலம் பயன் பெறும் 50 நபர்களில் 34 நபர்கள் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். 5,000 கோழிகளை வைத்து இப்பண்ணையில் பராமரிக்கப்படுகிறது. கோழிப்பண்ணை கட்டடம் கட்ட ரூ. 1,53,000- செலவிடப்பட்டுள்ளது. ரூ. 35,000 தளவாடச் சாமான்கள் வாங்கவும் செலவிடப்பட்டுள்ளது. பண்ணை ஆரம்பித்த முதல் ஓராண்டில் மட்டும் ரூ. 86,000 இலாபம் கிடைத்துள்ளது. 86-87 ஆம் ஆண்டில் இப்பண்ணைக்கு முட்டை மற்றும் கோழி விற்பனை மூலம் 2,78,500- இலாபம் கிடைக்குமென உத்தேச மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இக்கூட்டுறவுக் கோழிப்பண்ணையின் தலைவராக திரு சுப்புராஜ் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார். இரண்டு மருத்துவர்கள் இப்பண்ணையைப் பராமரிப்பதற்கென நியமிக்கப்பட்டு அவர்களின் மேற்பார்வையில் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. சராசரியாக நாள் தோறும் 4,000 முட்டைகள் கிடைக்கின்றன. கோழி வளர்ப்பு பற்றி, தொடர்ந்து இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. வாரம் 20 நபர்கள் பயிற்சி பெறுகின்றனர். இப்பயிற்சியின் மூலம் மேலும் பலர் கோழிப் பண்ணை ஏற்படுத்த வாய்ப்புக் கிடைக்கிறது.



**20 அம்சத் திட்டச் சாதனைகள்**

# செங்கல்பட்டு மாவட்டம்

புதிய 20 அம்சத்திட்டம் செங்கல்பட்டு மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1986-87 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு சாதனைகள் அடையப்பட்டுள்ளன.

**அம்சம் - 1, கிராமப்புற வறுமையை நீக்குதல்**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உழவு மாடுகள் வாங்க, வண்டி மாடுகள் வாங்க, ஆடுகள் வளர்க்க, கோழிப்பண்ணை அமைக்க, மீன் பிடி வலைகள் வாங்க, கட்டு மரங்கள் வாங்க இதுவரை 9,390 குடும்பங்களுக்குக் கடன் உதவி அளிக்கப்பட்டுள்ளது. இதனால் இவர்கள் சுயேச்சையாகத் தொழில் தொடங்கி வருமானத்தைப் பெருக்க வழி ஏற்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 22.60 இலட்சம் மனித சக்தி உழைப்பு நாட்கள் உற்பத்தி செய்ய ஆண்டுக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில், இதுவரை 8.30 இலட்சம் மனித உழைப்புச்சக்தி நாட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இதனால் கிராம மக்கள் சாலைகள் அமைத்தல், சிறுபாலங்கள் கட்டுவது, அரிசனங்களுக்குத் தொகுப்பு வீடு கட்டுவது, சத்துணவுக் கூடக் கட்டடங்கள் மற்றும் சமுதாயக்கூடங்கள் கட்டுவது ஆகியவற்றின் மூலம் தொழிலில் ஈடுபட்டு வருமானம் பெற வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

[illegible] நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல் மற்றும் சமூகக் காடுகள் வளர்ப்பதன் மூலம் 24.118 இலட்சம் மனிதச்சக்தி நாட்கள் உற்பத்தி செய்யக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில், 10.464 இலட்சம் மனிதசக்தி நாட்கள் இத்திட்டத்தின் கீழ் இதுவரை உற்பத்தி செய்யப்பட்டு, கிராம மக்கள் வருமானம் பெற வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

சிறு புதிய தொழிற்கூடங்கள் தொடங்க இம்மாவட்டத்திற்கு 560 என்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில், இதுவரை 577 சிறு புதிய தொழிற்கூடங்கள் தொடங்கப்பட்டதன் மூலம், சுய வேலை வாய்ப்பு மட்டும் அல்லாமல், வேலையற்றவர்களுக்கு வேலை வாய்ப்பும் அளிக்கப்பட்டுள்ளது.

**அம்சம் - 4, விளைச்சலைப் பெருக்குதல்**

7.60 இலட்சம் மெ.டன் நெல் உற்பத்தி செய்ய இம்மாவட்டத்திற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், கடுமையான வறட்சி இருந்த போதிலும் 2.099 இலட்சம் மெ. டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

1.428 இலட்சம் மெ. டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்ய ஆண்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், கடுமையான வறட்சி இருந்தபோதிலும், 0.537 இலட்சம் மெ. டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

0.156 இலட்சம் மெ. டன் பருப்பு வகைகள் உற்பத்தி செய்ய நிர்ணயிக்கப்பட்ட பணிக் குறியீட்டில், 0.155 இலட்சம் மெ.டன் பருப்பு வகைகள் பெருவாரியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**அம்சம் - 5, நிலச்சீர்திருத்தங்களை அமல்செய்தல்**

உபரி நிலங்கள் 70 ஏக்கர் நிலத்தினைக் கையகப்படுத்தி நிலமற்றோருக்கு வழங்க நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டில் இதுவரை 23.97 ஏக்கர் நிலம் கையகப்படுத்தி நிலமற்றோருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் நிலமற்றோர் நிலம் பெற வழிவகை செய்யப்பட்டது. உபரி நிலங்கள் கொண்டவர்களின் எண்ணிக்கையும் குறைந்தது. இதில் 21 நபர்களில் 11 ஆதிதிராவிடர் பிரிவினரும் பயன்பெற்றவர்களில் அடங்குவர்.



**அம்சம் - 7, சுத்தமான குடிநீர் வழங்குதல்**

சுத்தமான குடிநீர் 150 கிராமங்களுக்குக் கிடைக்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில், இதுவரை 99 கிராமங்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. 45,043 நபர்கள் இத்திட்டத்தால் பயன் பெற்றுள்ளனர். இதில் 20,800 ஆதிதிராவிட மக்களும் அடங்குவர்.

**அம்சம் - 8, அனைவருக்கும் மருத்துவ வசதி**

குழந்தைகளுக்கு முடக்கு வாதம், தொண்டை அடைப்பான் மற்றும் காசநோய்த் தடுப்பு ஊசிகள் போட 0.729 இலட்சம் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், இதுவரை 0.228 இலட்சம் முடக்குவாத நோய்த் தடுப்பு ஊசிகள், 0.315 இலட்சம் தொண்டை அடைப்பான் நோய்த் தடுப்பு ஊசிகள், மற்றும் 0.124 இலட்சம் காசநோய்த் தடுப்பு ஊசிகள் குழந்தைகளுக்குப் போடப்பட்டுள்ளன.

**அம்சம் - 9, குடும்பத்திற்கு இரண்டு குழந்தைகள்**

39,000 குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்ய இம்மாவட்டத்திற்கு ஆண்டுக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில், இதுவரை 11,484 குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

**அம்சம் - 10, கல்வித் திட்டத்தை விரிவுபடுத்துதல்**

16,700 சிறுவர், சிறுமியர்கள் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட ஆண்டுக் குறியீட்டில், 33,467 சிறுவர் சிறுமியர் பள்ளியில்

சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் 3,569 பெண்களும், 14,347 ஆதி திராவிடர்களும் அடங்குவர். 1.10 இலட்சம் முதியவர்களுக்குக் கல்வி கற்பிக்க நிர்ணயிக்கப்பட்ட ஆண்டுக் குறியீட்டில் இதுவரை 40,585 நபர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறச் செய்யப்பட்டுள்ளனர். இதில் 33,728 பெண்களும், 26,558 தாழ்த்தப்பட்டோரும், 158 மலை வாழ் வகுப்பினரும், அடங்குவர்.

**அம்சம் - 11, தாழ்த்தப்பட்டோருக்கு நியாயம்**

6,553 தாழ்த்தப்பட்ட வகுப்பினர் குடும்பங்கள் பயன்பெற நிர்ணயிக்கப்பட்ட ஆண்டுக் குறியீட்டில் 6,839 தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் பயன் அடைய வகை செய்யப்பட்டது.

**அம்சம் - 14, வீட்டுவசதி**

வீடு இல்லா 4,800 நபர்களுக்கு வீட்டுமனை வழங்க நிர்ணயிக்கப்பட்ட ஆண்டுக் குறியீட்டில், இதுவரை 11,978 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

8,984 நலிவுற்ற குடும்பங்களுக்கு வீடு கட்டித் தர நிர்ணயிக்கப்பட்ட ஆண்டுக் குறியீட்டில், இதுவரை 7,634 வீடுகள் கட்டப்பட்டு நலிவுற்ற பிரிவினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

203 வீடுகள் குறைந்த வருமானப் பிரிவினர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க நிர்ணயிக்கப்பட்ட ஆண்டுக் குறியீட்டில் இதுவரை 298 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன.

**அம்சம் - 15, குடிசைப் பகுதிகளைச் சீர்செய்தல்**

5,928 குடிசை வாழ்மக்கள் அடிப்படை, வசதிகளால் பயன்பெற வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட ஆண்டுக் குறியீட்டில், இதுவரை 3,445 நபர்கள் பயன்பெறச் செய்யப்பட்டுள்ளனர்.

## 1988-ஆம் ஆண்டின் அரசு பொது விடுமுறை நாட்கள்

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | வெள்ளி | ஆங்கிலப் புத்தாண்டு நாள் |
| ,, | 15 | வெள்ளி | பொங்கல் பண்டிகை |
| ,, | 16 | சனி | திருவள்ளுவர் திருநாள் |
| ,, | 17 | ஞாயிறு | உழவர் திருநாள் |
| ,, | 26 | செவ்வாய் | குடியரசு நாள் |
| மார்ச் | 18 | வெள்ளி | தெலுங்குப் புத்தாண்டு நாள் |
| ஏப்ரல் | 1 | வெள்ளி | நல்ல வெள்ளிக்கிழமை |
| ,, | 13 | புதன் | தமிழ்ப் புத்தாண்டு நாள் |
| மே | 1 | ஞாயிறு | மே நாள் |
| ,, | 18 | புதன் | ரம்சான் |
| ஜூலை | 25 | திங்கள் | பக்ரீத் |
| ஆகஸ்ட் | 15 | திங்கள் | விடுதலை நாள் |
| ,, | 24 | புதன் | மொகரம் |
| செப்டம்பர் | 15 | வியாழன் | விநாயகர் சதுர்த்தி |
| அக்டோபர் | 2 | ஞாயிறு | காந்தியடிகள் பிறந்த நாள் |
| ,, | 19 | புதன் | ஆயுத பூஜை |
| ,, | 20 | வியாழன் | ஆயுத பூஜை |
| ,, | 24 | திங்கள் | மீலத் நபி |
| நவம்பர் | 8 | செவ்வாய் | தீபாவளி |
| டிசம்பர் | 25 | ஞாயிறு | கிறிஸ்துமஸ் |

*திருவள்ளுவர் திருநாள் சனிக்கிழமையன்றும், உழவர் திருநாள், மேநாள், காந்தி பிறந்த நாள், கிறிஸ்துமஸ் நாள் ஆகியவை ஞாயிற்றுக் கிழமைகளிலும் வருகின்றன என்றாலும், வசதி கருதி அவையும் விடுமுறை நாள் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளன.*

**அம்சம் - 16, வனப் பாதுகாப்புக்குப் புதிய திட்டம்**

93.66 இலட்சம் மரக்கன்றுகள் நட இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், இதுவரை 37.493 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

**அம்சம் - 19 கிராமங்களுக்கு மின் வசதி**

கிராமங்களுக்கு எரிசக்தித் திட்டத்தின் கீழ் 2,800 விவசாயப் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க நிர்ணயிக்கப்பட்ட ஆண்டுக் குறியீட்டில், இதுவரை 16,045 விவசாயப் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

9,000 புகையில்லா அடுப்புகள் அமைக்க நிர்ணயிக்கப்பட்ட ஆண்டுக் குறியீட்டில் இதுவரை 3,647 புகையில்லா அடுப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

1,200 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்க நிர்ணயிக்கப்பட்ட ஆண்டுக் குறியீட்டில், இதுவரை 302 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### தமிழக ஊராட்சிக்கு மத்திய அரசு விருது

இந்தியாவிலேயே, சமூகக் காடுகளைச்சிறப்
பாகப் பராமரிக்கும் ஊராட்சிக்கு மத்திய அரசு
"இந்திரா பிரியதர்சினி விருக்ஷ வர்தா விருது"
ஆண்டு தோறும் வழங்கி வருகிறது. இந்த ஆண்
டுக்கான, சிறந்த ஊராட்சியாக செங்கல்பட்டு
மாவட்டம், ஸ்ரீ பெரும்புதூர் ஊராட்சி ஒன்றி
யத்தைச் சேர்ந்த, பண்ருட்டி ஊராட்சி தேர்ந்
தெடுக்கப்பட்டுள்ளது.

# கோவை மாவட்டம்

**1986-87 ஆம்** ஆண்டில் மாநில அளவில் 20 அம்சத் திட்டத்தைச் செயல்படுத்தியதில் கோவை மாவட்டம், குறியீட்டிற்கும் அதிகமாகச் சாதனையை எய்தி மாநில அளவில் முதலிடம் பெற்றுள்ளது.



**பாசன வசதி (அம்சம் 1)**

பாசன வசதியைப் பெருக்கும் திட்டத்தில் கீழ் 114 எக்டேருக்குப் பாசன வசதி செய்யப்பட வேண்டும் என்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில், 547 எக்டேர்களுக்குப் பாசன வசதி செய்யபட்டு 124% சாதனை அடையப் பட்டுள்ளது.

**பயறு உற்பத்தி (அம்சம் 2)**

பயறு வகைகள் உற்பத்திப் பெருக்கத் திட்டத்தின் கீழ் 36,000 மெ.டன் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பது இலக்கு. 36,400 மெ.டன் பயறு வகைகள் உற்பத்தி செய்யப்பட்டு 101%சாதனை அடையப்பட்டுள்ளது.

**எண்ணெய் வித்துக்கள்**

எண்ணெய் வித்துக்கள் 1,22,200 மெ.டன் உற்பத்தி செய்யப்பட்டு, 102% சாதனை எய்தப்பட்டுள்ளது.

**கிராம வளர்ச்சி (அம்சம் 3)**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் கீழ் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களுக்கு உதவி செய்யும் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் கீழ் ஏற்கெனவே பயன் அடைந்தவர்களுக்கு 2-ஆம் முறையாக 7,992 நபர்களுக்கு உதவி செய்யப்பட வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில்,8,080 குடும்பங்களுக்கு உதவிகள் செய்யப்பட்டுள்ளன. புதிதாக 5,332 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்ற குறியீட்டின்படி 5,735 நபர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு 108% சாதனை எய்தப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1,425.51 ஆயிரம் மனித வேலை நாட்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பது இலக்காகும். இதில் 15,87,000 மனித சக்தி நாட்கள் உற்பத்தி செய்யப்பட்டு 111% சாதனை எய்தப்பட்டுள்ளது.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின் கீழ் 8;42,700 மனித சக்தி நாட்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. 10,48,000 மனித சக்தி நாட்கள் உற்பத்தி செய்யப்பட்டு 124% சாதனை எய்தப்பட்டது.

**நில உச்ச வரம்பு (அம்சம் 4)**

380 ஏக்கர் உபரி நிலம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று

20 அம்சத் திட்டம் வெற்றி பெற...

**ந**மது பொருளாதாரம் முன்னேறுகிறது. நமது மக்களின் சுமையைக் குறைக்கக் கூடிய இம்முன்னேற்றத்தைத் தொடர்ந்து பராமரிப்பது நம் கையிலிருக்கிறது. 20 அம்சத் திட்டம், உங்கள் ஒவ்வொருவருக்குமல்லாது, சேவை செய்து, போற்றி, வலுக்கூட்ட வேண்டிய நமது நாட்டுக்கும் உரியது. இத்திட்டத்தை வெற்றி படையச் செய்வதில் உங்கள் மனமார்ந்த ஒத்துழைப்பைக் கோருகிறேன்.

(மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் 14-1-1982 அன்று ஆற்றிய உரையிலிருந்து.)

இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 382 ஏக்கர் உபரி நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டு 101% சாதனை எய்தப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வளர்ச்சி (அம்சம் 7)**

இத்திட்டத்தின் கீழ் 5,475 நபர்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 7,882 நபர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு 144% சாதனை அடையப்பட்டுள்ளது.

**கிராமங்களுக்குக் குடிநீர் (அம்சம் 8)**

குடிநீர்ப் பிரச்சினை உள்ள 100 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்யப்பட வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில் 100% சாதனை எய்தப்பட்டுள்ளது.

**வீடற்ற கிராமக் குடும்பங்களுக்கு உதவி (அம்சம் 9)**

இத்திட்டத்தின் கீழ் 6,000 வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட வேண்டும் என்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. 7,185 வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டு 120% சாதனை எய்தப்பட்டுள்ளது.

500 வீடுகள் கட்ட உதவி வழங்கப்பட வேண்டும் என்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில், 2,406 வீடுகள் கட்ட உதவி வழங்கப்பட்டு 481% சாதனை எய்தப்பட்டுள்ளது.

**சேரிகள் மேம்பாடு (அம்சம் 10)**

4303 குடிசை வாழ் மக்களுக்கு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டில், 15,390 நபர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டு 358% சாதனை எய்தப்பட்டுள்ளது.

நலிவடைந்தோர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கும் திட்டத்தின் கீழ் 148 நலிவடைந்தோர்க்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. அதில் 1,532 நபர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட்டுச் சாதனை எய்தப்பட்டுள்ளது.

**மின்சார வசதி (அம்சம் 11)**

நீரேற்றிகளுக்கு மின்விசை வழங்கும் திட்டத்தின் கீழ் 2,126 நீரேற்றிகளுக்கு மின்விசை வழங்கப்படவேண்டும் என்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. 2,227 நீரேற்றிகளுக்கு மின்விசை வழங்கி 105% சாதனை எய்தப்பட்டுள்ளது.

**காடு வளர்ப்பு-மரவுளர்ப்பு (அம்சம் 12)**

இத்திட்டத்தின்கீழ் 23,77,000 மரக்கன்றுகள் நடப்பட வேண்டும் என்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. 62,36,000 மரக்கன்றுகள் நடப்பட்டு 262% சாதனை எய்தப்பட்டுள்ளது.

**குடும்பநலம் (அம்சம் 13)**

38,223 நபர்களுக்குக் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்யப்பட வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 38,623 நபர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு சாதனை அடையப்பட்டுள்ளது.

**அடிப்படைச் சுகாதார வசதி (அம்சம் 14)**

13 ஆதார நல நிலையங்கள் துவக்கப்பட வேண்டும் என்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. 13 ஆதார நல நிலையங்களும் துவக்கப்பட்டு, 100% சாதனை அடையப்பட்டுள்ளது.

**அடிப்படைக் கல்வியைப் பரப்புதல் (அம்சம் 16)**

இத்திட்டத்தின் கீழ் 10,800 குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க வேண்டும் என்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. 20,633 குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்து, 191% சாதனை எய்தப்பட்டுள்ளது.

## செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் மாநில மாநாடு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையில் பணியாற்றும் செய்தி - மக்கள்தொடர்பு அலுவலர்களின் மாநில மாநாடு திருச்சிராப்பள்ளியில் 1987 டிசம்பர் 3, 4 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

செய்தி, சுற்றுலாத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு ஏ. பி. முத்துசாமி, இ.ஆ.ப., அவர்கள், செய்தி - மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் செய்தி - மக்கள் தொடர்புத்துறையின் பல்வேறு பிரிவுகளின் அனைத்து அலுவலர்கள் ஆகியோரும், மத்திய அரசு தொலைக்காட்சி, வானொலி, இசை மற்றும் நாடகப் பிரிவு, களவிளம்பரத்துறை, பத்திரிகைத் தகவல் தொடர்புத்துறை ஆகியவற்றைச் சார்ந்த அலுவலர்களும் இந்த இரண்டு நாள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

செய்தித் துறையின் பணி இன்னும் அதிக அளவில் மக்களுக்குப் பயன்படும் வகையில் அமைவதற்கான வழிவகைகள் மாநாட்டில் ஆராயப்பட்டன.

## நேர்மையாளர் நேரு

உண்மையின் ஜீவன் நேருவிடம் இருக்கிறது. வாலிபத் தலைமுறை அவரையே எதிர்பார்க்கின்றது. நேரு மிகச்சிறந்த நேர்மையாளர். இந்தியாவின் இதயத்தை அவர் கைப்பற்றி விட்டார். பொய்யும், பித்தலாட்டமும் நிறைந்த அரசியலில் ஒளிவு, மறைவு இல்லாமல் பேசும் உண்மைத்தலைவர் இவர். விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு - மகிழ்ச்சிக்கு - அறிகுறியாக சுதந்திரப் பாரதத்தின் இனிய இலட்சியமாக நேரு விளங்குகிறார்.

—கவியரசர் தாகூர்

# நேருவின் பொன்மொழிகள்

★ வரலாறு என்பது ஒரு நாட்டின் சரித்திரமல்ல. மக்கள் சமுதாயம் முழுமைக்குமான பொது நிகழ்ச்சியாக இன்றைய வரலாறு மாறியிருக்கிறது. ஏன் எனில் இன்றைய உலகம் ஒரு பொது நியதிக்கு உட்பட்டே இயங்குகிறது.

★ நாம் சுதந்திரம் பெற்றதோடு ஒரு யாத்திரை முடிந்துவிட்டது. ஆனால் இன்னொரு யாத்திரை தொடங்கிவிட்டது. வறுமையை ஒழிப்பதற்காகவும், நல்வாழ்வுக்குகந்த சமூக, பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்காகவும் துவங்கியுள்ள யாத்திரை இது.

★ உங்களுடைய செயல்களை எல்லாம் மதிப்பிடுவதற்கான உரைகல் இதுவே. மக்களை ஒன்று சேர்க்கின்ற காரியங்கள் எல்லாம் நல்லவை. மக்களைப் பிரித்து வைக்கும் காரியங்கள் எல்லாம் கெட்டவை.

★ ஒருவன் எதை அளிக்கிறானோ அதையே பெறுகிறான் என்பதை நான் உணர்கிறேன். ஒருவன் அன்பை அளித்தால், அந்த அன்பு பல மடங்காகத் திரும்பி வருகிறது. பகைமைக்குப் பதில் பகைமையே திரும்பி வருகிறது.

★ இன்றைய குழந்தைகளே நாளைய இந்தியாவை அமைப்பவர்கள் என்பதை எப்பொழுதும் நான் உணருகிறேன். குழந்தைகளை வளர்க்கும் முறையைப் பொறுத்தே ஒரு நாட்டின் எதிர்காலம் உருவாகிறது.

★ சமாதானமும், சகிப்புத் தன்மையுமே நமது இலட்சியங்கள். நம்மோடு ஒத்துப்போக முடியாதவர்களையும் அனுசரித்துக் கொண்டு போக நாம் விரும்புகிறோம். அதுதான் நம்முடைய மகத்தான போதனை. இது நமக்கு மட்டுமல்ல. உலகிலுள்ள மற்றவர்களுக்கும் தான்.

★ எத்தனையோ போராட்டம், தியாகம் இவற்றிற்குப் பிறகு நாம் அருமையாகப் பெற்ற சுதந்திரத்தைப் போற்றி மகிழும் இந்த வேளையில், உலக நாடுகளிடையே இந்தியா உயர்ந்து விளங்குவதற்காகவும், உலக மக்களின்நல்வாழ்வுக்காக உழைப்பதற்காகவும், நான் என்னைப் பெருமையோடு அர்ப்பணித்துக் கொள்கிறேன்.

★ சுதந்திரமும், சமாதானமும் ஒன்றையொன்று பிரிக்க முடியாதவை. எங்கே சுதந்திரம் தட்டிப்பறிக்கப்படுகிறதோ, அங்கே சமாதானத்துக்கு நிச்சயமாக ஆபத்து ஏற்படுகிறது.

★ மனித குல முன்னேற்றத்துக்காக மனிதன் உழைக்கிற இடமே உயர்ந்த கோயிலாகும். ஆயிரக்கணக்கிலே மக்கள் அன்றாடம் உழைத்து இரத்தமும் வியர்வையும் சிந்தி, ஏன், உயிரையும் கொடுத்து உருவாக்கியிருக்கும் தொழிற்கூடங்கள், அணைக்கட்டுகளை விடத் தொழுகைக்குரிய கோயில்கள் வேறெங்கே இருக்க முடியும்!

★ மனித இனம் பல தோல்விகளைக் கண்டிருக்கிறது என்றாலும், வரலாற்றில் அது பெற்ற வெற்றிகளும் சாதனைகளும் மகத்தானவை. அரசியல் சுதந்திரம் மட்டும் உண்மையான சுதந்திரம் ஆகி விடுவதில்லை. பொருளாதாரச் சுதந்திரமும், ஆன்மீக விடுதலையும் அவனுக்கு அவசியம் வேண்டும். அப்போது தான் மனிதன் முழுவளர்ச்சி பெறுகிறான். பிறவி எடுத்த பயனை அடைகிறான். உலகில் அமைதியும் ஒழுங்கும் நிலவ வேண்டுமானால், உலக நாடுகள் எல்லாம் விடுதலை பெற்றுத் தன்னாட்சி செலுத்த வேண்டும்.

★ என்னுடைய ஆசைகளில் எல்லாம் மிகப் பெரிய ஆசை என்னுடைய திறமை, சக்தி முழுவதையும் இந்த நாட்டின் நல்வாழ்வுக்காகச் செலவிட்டுவிட வேண்டும் என்பதுதான். என்னுடைய சக்தி எல்லாம் உபயோகமாகி, சக்கையாக நான் தூக்கியெறியப்படுகிற வரை இந்த நாட்டுக்கு உழைக்க வேண்டும் என்பதுதான் எனக்குள்ள ஒரே ஆசை! நீங்கள் என்னைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்பதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. என்னுடைய உழைப்பு இந்த நாட்டின் உயர்ந்த குறிக்கோளுக்கு உதவுமானால், அதுவே எனக்குப் போதும்.



# அமெரிக்கா செல்லும் மாணவி அழகாம்பிகை



**பே**ரறிஞர் அண்ணா அவர்களின் திருப்பெயரைத் தாங்கியுள்ள அண்ணா மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம் பகுதியில் கல்வி பயின்று வருபவர் செல்வி ப. அழகாம்பிகை. ஏர் இந்தியா நிறுவனம் நடத்திய பேச்சுப்போட்டியில் இவர் முதல் பரிசு பெற்றுள்ளார்.

முதல் பரிசு பெற்றவர், சென்னையிலிருந்து அமெரிக்காவுக்கு விமானத்தில் சென்று வரவும், ஆர்லாண்டில் நான்கு நாட்கள் ஓட்டல் வசதியுடன் தங்கவும், டிஸ்னிலேண்டு, எப்கோட் சென்டர் ஆகியவற்றை மூன்று நாட்கள் சுற்றிப் பார்க்கவும் ஏர் இந்தியா வசதி செய்து தருகிறது. மாணவியுடன் தாய் அல்லது தந்தை அல்லது ஆசிரியர் இலவசமாகச் செல்லலாம்.

முதல் பரிசு பெற்ற இவரைப் பாராட்டுவதற்காகவும், அவரது எதிர்கால எண்ணங்கள் மற்றும் அமெரிக்கப் பயண விவரங்களைக் கண்டறிவதற்காகவும் அவரது இல்லம் சென்றோம். 14 வயதுடைய அழகாம்பிகை, ஒட்டன்சத்திரம் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படித்து வருகிறார். இவரது தகப்பனார் திரு பரமசிவம் கன்னிவாடியில் உள்ள பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். இவரது தாய், இவர் பயிலும் பள்ளியிலேயே தமிழ் ஆசிரியையாகப் பணியாற்றி வருகிறார்.

பள்ளியில் நடைபெற்றுவரும் அனைத்துப் போட்டிகளிலும் இவர் பங்கு கொண்டு பரிசு பெற்றுள்ளார். அண்ணா மாவட்டத்தின் சார்பில் நடைபெற்ற விடுதலை நாள் விழாவில் மாவட்ட அளவில் இரண்டாம் பரிசு பெற்றார்.

மேடைப் பேச்சுகளை மிகத் திறமையாகக் கையாளுகின்ற இந்த மாணவியிடம் எதிர்காலத் திட்டம் என்ன, என்று கேட்ட போது, ''எனது இலட்சியம் ஒரு சிறந்த டாக்டராகிச் சேவை செய்ய வேண்டும்என்பதே' என்று தெளிவாகக் கூறினார். அந்த மாணவி மேலும் கூறினார்....

''எனக்கு இலக்கிய நயத்தோடு அனைத்துப் பொருள் பற்றியும் பேசக் கற்றுக்கொடுத்தது எனது தாய், தந்தையரின் தமிழ்ப்பணி.''

''ஏர் இந்தியா நிறுவனம் நடத்திய பேச்சுப் போட்டியில் கலந்து கொண்ட சமயம், நிச்சயம் முதல் பரிசு பெற வேண்டும் என்ற ஆர்வத்தோடு இருந்தேன். முயற்சியில் வெற்றியும் பெற்றேன்.''

''நானும் எனது தந்தையும் அமெரிக்கா செல்ல உள்ளோம். தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்களிடம் முதல் பரிசு பெற்ற மகிழ்ச்சியோடு ஊர் வந்தவுடன், அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மிருத்யுஞ்சய் சாரங்கி அவர்களின் பாராட்டுக் கடிதம் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டேன்.''

''அமெரிக்கா சென்று, என்ன, என்ன பார்க்கப் போகிறீர்கள்?'' என்று கேட்டவுடன், புன்சிரிப்பு தவழ, ''ஒட்டன்சத்திரம் என்றால் என்னால் கூற முடியும். எழுத்தினால் எழுதிப் படித்த அமெரிக்காவைத் தவிர வேறு எதுவும் தெரியாத எனக்கு,என்ன தெரியும்? அமெரிக்கா என்றவுடன் என் கண்ணுக்குத் தெரிவது டாக்டர் பிரீட்மென் தான். தமிழக முதல்வருக்குச் சிகிச்சை அளித்து 5 கோடித் தமிழர்களின் நெஞ்சில் அழியா ஓவியமாகக் குடி கொண்டுள்ள டாக்டர் பிரீட்மெனைப் பார்க்க வேண்டும்; அவருக்கு என் இதய நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்பதே என் ஆசை. டாக்டரைப் பார்க்க முயற்சி செய்வேன், அப்போதுதான் என் ஆசை நிறைவேறும்.''

''தமிழக மக்களின் இதயக் கோயிலாகத் திகழும் புரூக்ளின் மருத்துவமனையை வணங்கி விட்டுத் தான் தமிழகம் திரும்புவேன்'' என்று மனமுவந்து தெரிவித்தார்.

**வி. கோவிந்தபிரசாத்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**அண்ணா மாவட்டம்.**

அன்னை இந்திராவின் திருவுருவம் தாங்கிய அட்டை 1.11.87 இதழை அலங்கரித்தது. மாணவர் பக்கத்தில் வெளியாகும் செய்திகள் மாண்புடையவை.

—அரிமா. பூபாளம்,
ப. முருகேசபாண்டியன்,
கரப்பாடி

* * *

'புதுக்கோட்டை மாவட்டத்தில் கலையழகு மிக்க சுற்றுலாத் தலங்கள் பற்றிய கட்டுரை படித்தேன். அங்குள்ள சுற்றுலாத் தலங்கள் பற்றி விரிவாகத் தெரிந்து கொண்டேன்.

—சொ. முத்தமிழ்வாணன்,
தஞ்சாவூர்—1.

* * *

அன்னை இந்திராகாந்தியின் அட்டைப்படம் அருமை அவர் ஆற்றிய கடைசி உரை, என் நெஞ்சத்தை நெகிழ வைத்தது.

—பெ. கருப்பசாமி
நென்மேனி.

## பார்த்தோம் - படித்தோம்

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்களின், 'தொழிலாளரும் சமுதாயமும்' என்ற உரை பயனுள்ளதாக இருந்தது.

—பூபதி, கடக்கரை.

* * *

அழகுமிகு வண்ணத்தில் அன்னை இந்திராவின் அட்டைப் படம் வெளியிட்ட தமிழரசுக்கு நன்றி.

ஆர். ஜி. துரைராஜு,
டி. வசந்தா,
கீழப்பழுவூர்.

* * *

1.11.87 இதழில், 'நூல்நயம்' பகுதியில், பெரியவர் ராமமூர்த்தியின் நூலான 'தொடரும் இருளில் ஓர் புலரும் உதயம்' நன்கு ஆராயப்பட்டு, மக்களுக்கு மிக நல்லமுறையில் பயன் தரும்படி வெளியிடப்பட்டுள்ளது.

—இரா. ஜெயப்பிரதாதேவி
திண்டுக்கல்.

குறிப்பு:

இந்த நூலின் மதிப்புரையைப் பாராட்டிப் பலர் எழுதியுள்ளனர்.

**வாசகர்களுக்கு**

**1.11.87 *தமிழரசு* இதழில் 16-ஆம் பக்கத்தில் இடம் பெற்றுள்ள 'ரூசோ சொல்லிய Liberty - Equality - Federality'' என்ற தொடரில் Federality என்பதை Fraternity என்று *திருத்திப்* படித்துக்கொள்ள வேண்டுகிறோம்.**

# வளமான வாழ்வுக்கு

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்

## அளிக்கும்

# விஜய்

## உரங்கள்

உங்கள் நிலத்தில் அமோக விளைச்சலைப்பெற
தழை-மணி-சாம்பல் மூன்று சத்துக்களும் தேவை.
மண் பரிசோதனை செய்து, அதன் சிபாரிசுப்படி
விஜய் உரமிட்டு விளைச்சலைப் பெருக்குங்கள்.
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸில் உள்ள நவீன மண்
பரிசோதனை நிலையம் இலவசமாக அளிக்கும்
'துரித மண் பரிசோதனை' சேவையைப் பயன்படுத்திக்
கொள்ளுங்கள். மண் பரிசோதனை செய்ய இயலாவிடில்
பொது சிபாரிசுப்படி உரமிடுங்கள்.



# 17-17-17

# 14-28-14

# டி.ஏ.பி

# யூரியா




கரும்பு
ஏக்கருக்கு/கிலோ

| பகுதி | அடியுரம் | மேலுரம் | |
|---|---|---|---|
| | விஜய் 17-17-17 | விஜய் யூரியா | பொட்டாஷ் |
| தண்ணீர் தட்டுப்பாடு இல்லாத பகுதி | 140 | 190 | 35 |
| தண்ணீர் பற்றாக் குறை பகுதி | 140 | 145 | 35 |
| அல்லது | | | |
| | விஜய் 14-28-14 | விஜய் யூரியா | பொட்டாஷ் |
| தண்ணீர் தட்டுப்பாடு இல்லாத பகுதி | 85 | 215 | 55 |
| தண்ணீர் பற்றாக் குறை பகுதி | 85 | 170 | 55 |
| அல்லது | | | |
| | விஜய் டி.ஏ.பி. | விஜய் யூரியா | பொட்டாஷ் |
| தண்ணீர் தட்டுப்பாடு இல்லாத பகுதி | 50 | 220 | 75 |
| தண்ணீர் பற்றாக் குறை பகுதி | 50 | 175 | 75 |

மேலும் விவரங்களுக்கு: வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001

VIJAY
MADRAS FERTILIZERS

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்**

இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்
மணலி, சென்னை 600068

## சமச்சீர் உரமிட

# விஜய்



MFL-1963-R



# கொடிநாள் விழா!

தாய் நாட்டுக்காகப் பல தியாகங்களை ஏற்றுத் தம் இன்னுயிரை ஈந்த இராணுவ வீரர்களின் பெருமையைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் டிசம்பர் 7 ஆம் நாள் நாடு முழுவதும் கொடி நாள் கொண்டாடப்படுகிறது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 7.12.87 அன்று தலைமைச் செயலகத்தில் ரூ. 10,000 வழங்கி, கொடிநாள் நிதி வசூலைத் துவக்கி வைத்தார்கள்.

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஜி.புஜங்கராவ், இ.ஆ.ப., அவர்களும், முன்னாள் படைவீரர் நல இயக்குநர் திரு லால் ராணா சைலோ, இ.ஆ.ப அவர்களும் முதல்வர் அவர்களிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொண்டனர்.

கொடி நாளைக் கொண்டாடும் விழா 7.12.87 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜி.புஜங்கராவ், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றினார். சென்னைப் படை பயிற்சிப் பள்ளி கமாண்டன்ட் மேஜர் ஜெனரல் என். விசுவநாதன் அவர்கள் தலைமையுரையாற்றினார்.

விழாவில் முன்னாள் படை வீரர் நல இயக்குநர் திரு லால் ராணா சைலோ, இ.ஆ.ப. அவர்களும், சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியத் தலைவரும், முன்னாள் படை வீரர் நல நிதி உறுப்பினருமான திரு.ஜேப்பியார் அவர்களும் உரை ஆற்றினர்.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு முன்னாள் படை வீரர்களுக்கும், அவர்களைச் சார்ந்த குடும்பத்தார்க்கும் தையல் இயந்திரங்களும், திருமண நிதியும், சிறப்பு நிவாரண நிதியும், மூக்குக் கண்ணாடி வாங்க நிதியும், வேட்டி, சேலைகளும் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தமது உரையில்,

''களத்திலே வீழ்ந்த வீரர்களின் குடும்பங்களைக் காக்கவும், உறுப்புகளை இழந்தவர்களுக்கு உதவியாக இருக்கவும், திக்கற்று நிற்கும் அவர்களது குடும்பத்திற்கு ஆதரவு தரவும் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்த ஆண்டுதோறும் கொடி நாள் நிதி திரட்டப்படுகிறது.

''நான்கு சுவர்கள் நன்றாக இருந்தால்தான் உள்ளே இருக்கும் குடும்பம் நன்றாக இருக்க முடியும். அதைப்போல நாட்டைக் காப்பாற்றும் சக்தி சிறப்பாக இருந்தால்தான், நாட்டு மக்கள் நிம்மதியாக வாழமுடியும். படைவீரர்கள் ஆற்றும் பணியை நாம் மதிக்கிறோம், வரவேற்கிறோம் என்று காட்டுவதாக விளங்கும் நாள்தான் டிசம்பர் 7.

நன்கொடைகள் மூலம் அவர்களுக்கு ஆதரவு தந்து வருகிறோம். ஆண்டுக்காண்டு கொடி நாள் வசூல் அதிகமாகி வருகிறது.

இதற்கென மத்திய அரசின் பரிசுக் கோப்பையைப் பெற்றுள்ளோம். இவ்வாண்டு அக் கோப்பை நம்மிடம் தங்கும் அளவுக்கு அதிக நிதியை நாம் திரட்ட வேண்டும்'' என்று கூறினார்.

முன்னாள் படைவீரர்கள் நல உதவி இயக்குநர் லெப்டினன்ட் கர்னல் கே. சி. ராஜ் (ஓய்வு) நன்றி நவின்றார்.

விழாவில், முன்னதாக பாரதி மகளிர் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

1987-ஆம் ஆண்டு கொடி நாள் நிதிவசூல் செய்ய தமிழ் நாட்டிற்கு ரூ. 88 இலட்சம் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டு ரூ. 78.18 இலட்சம் கொடி நாள் வசூல் செய்து இந்தியாவிலேயே தமிழ் நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

இந்தியாவிலேயே மாவட்ட அளவில் ரூ.19,06,804.60 வசூல் செய்து சென்னை மாவட்டம் முதன்மை இடம் பெற்றுள்ளது.

—நமது செய்தியாளர்.

## நேருவின் வாழ்வு

**பாரதத்தின் அரியாசனம் ஜவகர்லாலுக்கே உரியது என்பதில் சந்தேகம் இல்லை. அவருடைய வாழ்வு ராஜ கம்பீரமானது. அவரது உறுதி அசையாதது. அவரது தீரம் பின் வாங்காதது.**

**—கவியரசர் தாகூர்**





# உங்கள் வளர்ச்சிக்கு எங்கள் பாதுகாப்பான திட்டங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான சிறந்த பல சேமிப்புத் திட்டங்களை வகுத்துள்ளது.

இன்றே வருவீர்—உங்கள் வாழ்க்கை வளம்பெற செய்திடுவீர்.

உங்கள் சேமிப்பிற்கு $\frac{1}{4}$% கூடுதல் வட்டி உண்டு.

- சேமிப்புத் திட்டம்
- நிரந்தர வைப்புத் திட்டம்.
- தொடர் வைப்புத் திட்டம்.
- ரொக்க சான்றிதழ்.
- சிறப்பு வைப்பீட்டுத் திட்டம்.

TNSC BANK

தமிழ்நாடு மாநிலத்
தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001.

*TNSC வங்கி--வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*

# மாண்புமிகு முதல்வர் பல்வேறு சமூக சங்கங்களின் பிரதிநிதிகள் சந்திப்பு

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் வன்னியர் சங்கங்களின் பிரதிநிதிகளையும், பல்வேறு சமூக சங்கங்களின் பிரதிநிதிகளையும் தலைமைச் செயலகத்தில் 25.11.87 முதல் 30.11.87 வரை சந்தித்து அவர்களது கோரிக்கைகளைக் கேட்டறிந்த விவரம் சென்ற இதழில் வெளியிடப்பட்டது. தொடர்ந்து 1.12.'87, 2.12.'87 மற்றும் 7.12.'87 ஆகிய நாட்களிலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு சமூக சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களது கோரிக்கைகளைக்கேட்டறிந்தார். சந்தித்த சமூக சங்கங்கள் விவரம் வருமாறு :

## 1-12-'87

1. தமிழ்நாடு சலவையாளர் சங்கம், சென்னை-81.
2. தென்னிந்திய அண்ணா சலவைத் தொழிலாளர் கூட்டமைப்பு, சென்னை30.
3. தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், வில்லிவாக்கம், சென்னை-49.
4. அனைத்திந்திய அண்ணா சலவைத் தொழிலாளர் சங்கம், விருத்தாசலம்.
5. தமிழ்நாடு சவரத் தொழிலாளர் சங்கம், சென்னை-11.
6. தமிழ்நாடு மருத்துவர் மத்திய சங்கம், சேலம்-1.
7. தமிழ்நாடு மருத்துவர் மத்திய சங்கம், திண்டுக்கல்.
8. முடிதிருத்தும் தொழிலாளர் சமூக சங்கம், தஞ்சாவூர்.
9. மருத்துவர் சங்கம், எரியோடு, வேடசந்தூர் வட்டம், அண்ணாமாவட்டம்.
10. கீழவாசல் முனிச்சாலை, காமராஜபுரம் மருத்துவர் சங்கம், மதுரை.
11. துளுவ வேளாளர் சங்கம், சென்னை-14.
12. தமிழ்நாடு வேளாளர் சங்கங்களின் கூட்டமைப்பு, சென்னை10.
13. தருமபுரி மாவட்ட துளுவ வேளாளர் சங்கம், தருமபுரி.
14. தமிழ்நாட்டு துளுவ வேளாளர் சங்கம், மதுரை.
15. அண்ணாநகர் துளுவ வேளாளர் சங்கம், வேலூர்-2.
16. 24 மனைத் தெலுங்கு செட்டியார்கள் தலைமைச் சங்கம், சென்னை-10.
17. கோவில்பட்டி சைவ வேளாளர் சங்கம், கோவில்பட்டி.
18. நெல்லை நாடார் மகமை பரிபாலன சங்கம், சென்னை-8.
19. நாடார் மகாஜன சங்கம், மதுரை.
20. சென்னைவாழ் நாடார் சங்கம், சூளைமேடு, சென்னை-94.
21. கீழ ஈரால் நாடார் உறவின்முறை சங்கம், சென்னை.
22. தமிழ்நாடு விஸ்வகர்மக் கைவினைஞர்கள் சங்கம், கோயம்புத்தூர்.

## 2-12-'87

1. தமிழ்நாடு தேசிய வண்ணார் குல நல்வாழ்வுச் சங்கம், ஆவடி, சென்னை-7.
2. தென்னிந்தியஅண்ணா முடிதிருத்துவோர் சங்கம், சென்னை2.
3. அகில இந்திய விஸ்வகர்ம ஜனநாயக முன்னணி, திருச்சிராப்பள்ளி.
4. அகமுடையார் கல்வி வளர்ச்சிக் கழகம், சென்னை-8.
5. திருச்சி, தஞ்சை ஜில்லா அகமுடையார் கல்வி விருத்திச் சங்கம், திருச்சி.
6. அனைத்திந்திய பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மதச் சிறுபான்மையினர் பேரவை, சென்னை-5.
7. தமிழ்நாடு மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல உரிமைக் கூட்டமைப்பு, சென்னை-44
8. தமிழ்நாடு பாணர் மாநிலச் சங்கம், கள்ளக்குறிச்சி.
9. தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் குலாலர் சங்கம், சென்னை-12.
10. உழைப்பாளர் முன்னேற்றக்கட்சி, தெ. வ. புத்தூர், விருத்தாசலம் வட்டம்.
11. மாநில கார்காத்தார் சங்கம், மயிலாடுதுறை.
12. தமிழ்நாடு கம்ம மகாஜன சங்கம், சென்னை-7.

## 7-12-'87

1. தென்னிந்திய வாணியர் சங்கம், சென்னை-1.
2. நீலகிரி மாவட்டத் தொரையர் முன்னேற்றச் சங்கம், நீலகிரி.
3. கோவை மாவட்ட மேதர் சமூகச் சங்கம், ஆர். எஸ். புரம், கோயம்புத்தூர்.
4. உப்பிலியர் முன்னேற்றச் சங்கம், சிங்காநல்லூர், கோயம்புத்தூர்.
5. தமிழக உப்பிலியர் சங்கம், திருச்சி.
6. அம்பேத்கார் மக்கள் முன்னணி இயக்கம், எஸ். எஸ். புரம், சென்னை-7.
7. படகர் சங்கங்களின் கூட்டமைப்பு, உதகமண்டலம்.
8. பத்மசாலியர் சங்கம், சென்னை.
9. சாத்தாத ஸ்ரீவைஷ்ணவ இளைஞர் முன்னணி, சென்னை.
10. அகில இந்திய தேவாங்கர் (தெலுங்கர்) சமூக நலச் சங்கம், சேலம்.
11. பள்ளிப்பட்டி வெள்ளான் செட்டியார் சங்கம், சேலம்.
12. அகில இந்திய நரிக்குறவர் சங்கம், சென்னை.
13. தமிழ்நாடு தொண்டை மண்டல முதலியார் சங்கம், சென்னை-84.
14. மராட்டா மத்திய சங்கம், தஞ்சாவூர்.
15. தமிழ்நாடு பார்கவகுல பாரிவள்ளல் பட்டதாரிகள் பண்பாட்டுக் கழகம், சென்னை-33.
16. மாநில ரெட்டியார் சங்கம், கடலூர்.
17. க்ஷத்திரியர் ராஜுக்கள் சங்கம், ராஜபாளையம்.
18. கம்மவார் நாயுடு சங்கம்.
19. கம்பளம் நாயுடு சங்கம்.
20. நகரத்தார் ஐக்கிய சங்கம், சென்னை-1.



1-12-87 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பல்வேறு சமூகச் சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களது கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.



2-12-87 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பல்வேறு சமூகச் சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களது கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.



7-12-87 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பல்வேறு சமூகச் சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களது கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.



# தீரர் சத்தியமூர்த்தி

லட்சுமி கிருஷ்ணமூர்த்தி

**தீரர் சத்தியமூர்த்தி அவர்களது மகள் திருமதி லட்சுமி கிருஷ்ண மூர்த்தி அவர்கள் இக்கட்டுரையில் தன் தந்தையை நினைவுகூர்கிறார்.**

"உதவி புரிவது உமது கடன்
உயர் தமிழ்நாட்டு உத்தமர்காள்''

என்று ஆரம்பிக்கும் ச.து.சு. யோகியாரின் பாட்டினை, இசைப் பேரறிஞர் முசிறி சுப்பிரமணிய அய்யர் பாடும் இசைத்தட்டை வைப்போம், கூட்டம் கூடும். உள்ளூர்த் தலைவர்கள் பேசிக் கொணடிருக்கையிலேயே, தலைவர்கள் வநது விடுவார்கள். கணீரென்ற தனக்கே உரித்தான பாணியில் இசைக்குயில் கே.பி. சுந்தராம்மாள், பாரதியாரின் இரண்டொரு தேசிய கீதங்களைப் பாடுவார். கூட்டம் களை கட்டி விடும். தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கட்சியின் தலைவரான சத்தியமூர்த்தியுடன், பசும்பொன் முத்து ராமலிங்கத்தேவர், காமராஜ், கார்களில் வருவார்கள். வீராவேசமாகப் பேசி, தலைவர் சத்தியமூர்த்தி மக்கள் மனத்தில் சுதந்திரக் கனலைக் கொழுந்து விட்டெரியச் செய்வார். இது நடந்தது 1936-37இல்,'' என்று அன்று உடன் பிரயாணம் செய்த சேலம் திரு. ராமசாமி உடையார் சென்ற ஆண்டு என்னிடம் விவரித்தார்.

சட்டசபைக்குள் பிரவேசித்து ஆங்கில ஆட்சியைத் திக்கு முக்காடச் செய்ய வேண்டும், ஏன் அமைச்சரவையையே கைப்பற்றி மக்கள் நலனுக்காக அரசாட்சி செய்ய வேணடும் என்ற கருத்தினை ஓயாமல் கூறி, கட்சி மேலிடத்தின் சம்மதமும் பெற்று, சட்டசபைத் தேர்தலில் கட்சி வேட்பாளர்களில் பெரும்பான்மையினர் வெற்றி அடைய, ஒரு மாத காலம், சூறாவளிச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, இறுதியில் தன் இலட்சியம் நிறைவேறியதையும் என் தகப்பனார் கண்டு களித்தார்.

50,60 ஆண்டுகளுக்கு முன்னர் நாடிருந்த நிலையில், சொந்த தேசத்திலே அடிமை வாழ்வு வாழ்வதைக் கண்டு கொதித்தெழுந்து, இழைக்கப்படும் அநீதிகளைச் சாதாரண மக்களும் புரிந்து கொண்டு, வீராவேசம் கொள்ளும் வகையில் என் தந்தை பேசுவாராம். "உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளுங்கள், அரசாங்கத்திலோ, அல்லது தனியார் நிறுவனத்திலோ, ஒரே உத்தியோகத்திற்குப் போலீஸ் கமிஷனரா, கம்பெனி நிர்வாகியா, அவனுக்குச் சம்பளம் ரூ.2,000. எனக்குச் சம்பளம் ரூ.500. ஏனெனில் அவன் தோல் வெளுப்பாம், என் தோல் கறுப்பாம்'' என்று அவர் முழங்கினால், பலத்த கைத்தட்டல், உடனே உற்சாகம் பொங்கும். இப்படியே அவர் போகாத கிராமங்கள் இல்லை. பேசாத ஊரில்லை என்று தமிழகத்தின் பட்டி, தொட்டிகளில் எல்லாம் தன் வாழ்நாள் முழுவதும் பாரதத் தாயின் அடிமைத் தளையைத் தகர்ப்பதிலேயே என் தந்தை முழு மூச்சுடன் ஈடுபட்டார். மூல நோயினால் பாதிக்கப்பட்டபொழுது, ரத்தம் சொட்டச் சொட்ட, கூட்டங்களில் கலந்து கொள்வார்.

நான்கு தடவை சிறை சென்றதில் உடல் நலிந்து விட்டது. ஆனால் நாவன்மை வலுப்பெற்றது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருப்பவர், தன் பதவிக்காலத்தில் சென்னை மாகாணத்தில் பல கூட்டங்களில் கலந்து கொள்ள வரும்பொழுது, எங்களுடன் தங்குவார். பாபு ராஜேந்திர பிரசாத், சர்தார் வல்லபபாய் பட்டேல், அவர் மகள் மணிபென் பட்டேல், பண்டித ஜவகர்லால் நேரு, சரோஜினி நாயுடு போன்றவர்கள் எல்லாம் வருவார்கள். வீடு எப்பொழுதும் 'ஜே' என்று இருக்கும்.

இத்தனை அரசியல் ஈடுபாட்டிலும் அப்பாவிற்குக் கல்வி மேம்பாடு, மங்கிக் கிடந்த பரதக் கலை, இசைக் கலையைக் கல்லூரிப் பாடமாக வைத்தல், நாடகம் போன்றவைகளிலும் தீவிரமான ஈடுபாடு. சுகுண விலாச சபையில் மனோகரனாக ஆவேசமாக அவர் நடித்தார். "தத்ரூபமாக இருக்கும் பரத நாட்டியத்திற்கு அதற்குரிய கௌரவமான இடத்தினைத் தேடித் தந்ததில் சத்தியமூர்த்திக்குப் பெரும் பங்கு உண்டு" என்று திரு. கிருஷ்ணய்யர் எழுதி உள்ளார்.

அன்றே கச்சேரிகளில் நிறைய தமிழ்ப் பாட்டுக்களைப் பாட வேண்டும் என்று வித்வானைப் பாராட்டிப் பேசும்பொழுது வலியுறுத்துவார். சென்னை கதர் கிராமத் தொழில் கண்காட்சிகளை முதன் முதலாக ஏற்பாடு செய்து, மூன்று முறை நடத்திய பொழுது, இசைக் கச்சேரிகளுக்கும் இடமளித்தார். முசிறியின் கச்சேரி முடிந்து நன்றி உரை ஆற்றும் பொழுது சொன்னார். "முசிறி நன்றாகப் பாடி நம்மையெல்லாம் ஆனந்திக்க வைத்தார். இசைக்குப் பாஷை தேவையில்லை என்பது ஒரு வாதம், ஒப்புக் கொள்கிறேன். இருப்பினும் முசிறி காம்போதியில் திருவடி சரணம் என்று பாடிக் கேட்கும் பொழுது, என் சந்தோஷம் இரட்டிப்பாகிறது. ஏனெனில் சாகித்யமும் எனக்குப் புரிவதால்'' என்று ரசிகர்களின் மனத்திலும் இக் கருத்தை வளரச் செய்வார்.

நல்ல ரசிகன், ருசியான உணவு, மலர்கள், வாசனைச் சந்தனம், தாம்பூலம், நல்ல உடை, எல்லா வற்றையும் அனுபவித்து மகிழ்வ தோடல்லாமல், வெளியே செல் லும் பொழுது, மறையும் சூரி யனை, கலையும் மேகத்தை, நீல மலைத் தொடரை, கொட்டும் அருவியைச் சுட்டிக் காண்பித்து, "என்ன அழகு பார்'' என்று எனக்கும் சொல்லித் தருவார்.

மாடம் மாண்டிஸோரி அம் மையார் இத்தாலியிலிருந்து விஜ யம செய்த பொழுது சென்னை மாநகராட்சி சாரபில் பெரிய வரவேற்பு அளித்து அந்த அம் மையார் கல்விக்கெல்லாம சிறப் பாக ஆற்றி வரும் தொண்டினைப் பாராட்டி வரவேற்புப் பத்திரம் வாசித்து அளித்தார்.

மாநில சட்டசபையிலும், மத் திய சட்டசபையிலும் அவர் நாவன்மை வாதத்திறன், எதி ராளியைக் கேள்விகள் கேட்டு மடக்கும் சாமர்த்தியம் எல்லாம் பிரசித்தி பெற்றவை. ''வக்கீலா கச் சில ஆண்டுகளே பணி புரிந்த போதிலும், 'குன்ஷாரம் வழக்கு' என்று அறியப்படும் வழக்கொன் றில், குற்றவாளியே நான்தான் குற்றம் செய்தேன், என்று கூறி னாலும், அதற்குப் போதிய சாட் சியங்கள் நிரூபிக்க உள்ளனவா என்பதை நீதிபதி விசாரித்து முடிவு செய்யும் பொறுப்பை ஏற்க வேண்டுமென வாதாடி ஒப்புக் கொள்ளச் செய்தது, இன் றும் மேற்கோளாகக் காட்டப்படு கிறது'' என்று ஜஸ்டிஸ் சுவாமிக் கண்ணு, ஒரு கூட்டத்தில் கூறக் கேட்டேன்.

அவர் புகழ் வாய்ந்த வக்கீ லாக விளங்கி, நிறையப் பொருளை ஈட்டிச் சுகவாழ்வு வாழ்ந்திருக்கலாம். ஆனால் அப் பாவின் மனது தேச விடுதலையி லேயே முழுமையாக அர்ப்பணித் துக் கொள்வதில்தான் திருப்தி அடைந்தது. மாவட்ட நீதிபதி நியமனம் வேண்டாம் என்று கூறி விட்டுக் கட்சியின் கொள்கை யினைப் பரப்புவதிலேயே, மகாத்மா காந்தியின் தலைமையை ஏற்றுக் கொண்டார். ஆனால் எவ்வளவு பெரிய தலைவராயி னும் கண்மூடித்தனமாகப் பின் பற்றாமல், சரியா, தவறா என்று சீர்தூக்கிப் பார்த்துத்தான் செயல்படுவார். மாணவர்களைக் கல்லூரியிலிருந்து வெளியே வரும்படி மகாத்மா விடுத்த அறைகூவலைக் கேட்டு, ''இது எவ்வளவு ஏற்புடையது என்று என்னால் ஒப்புக் கொள்ள முடிய வில்லை'' என்று தான் எழுதிய கடிதத்தில் வினா எழுப்புகிறார்.



மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில் பொற்றாமரைக் குளக்கரையில், திரு முனுசாமிப் பிள்ளை, திரு கே. காமராஜ், திரு எஸ். சத்திய மூர்த்தி.

சட்டசபைப் பிரவேசம், மந் திரிசபை அமைத்தல் என்று இரு லட்சியங்களையும் மோதிலால் நேரு, பாலகங்காதரதிலகர், சித் தரஞ்சன்தாஸ் போன்ற தலை வர்களுடன் ஆதரித்து சத்திய மூர்த்திவாதாடியதற்கு எத்தனை பலத்த எதிர்ப்புகள்!

மதுவிலக்கு, விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம், அரிஜன ஆலயப் பிரவேசம் போன்ற சட் டங்கள் தமிழக அரசால் 37-39 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட பொழுது, ''இதற்காகத்தான் பதவி ஏற்க வேண்டும் நம்மவர்'' என்று பொதுக் கூட்டங்களில் பேசினார்.

# தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு தேசிய விருது!

சுரங்கப் பாதுகாப்பை ஊக்கு விக்கும் நோக்கத்தில் இந்திய அரசு ஆண்டுதோறும் தேசிய விருது அளித்து வருகிறது. இதன் படி 1986ஆம் ஆண்டுக்கான விருது வடார்க்காடு மாவட்டம் திருப் பத்தூர் அருகிலுள்ள சேவத் தூரில் தமிழ்நாடு கனிம நிறு வனத்தால் நடத்தப்பட்டு வரும் ''வெர்மிகுலைட்'' சுரங்கத்திற் குக் கிடைத்துள்ளது.

அதற்கான தேசிய விருதை, கனிம நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் டாக்டர் எஸ். சரவணன், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர் 5.12.87 அன்று நடந்த விழாவில் களிடமிருந்து . புதுடில்லியில் பெற்றுக் கொண்டார்.





# உலகம் போற்றும் கணிதமேதை

'ரகமி'

**கணித மேதை ராமானுஜன் நூற்றாண்டு நிறைவு**

ஒரு சாதாரண எளிய குடும்பத்திலே பிறந்து, வறுமையிலேயே உழன்ற ஓர் ஏழை இளைஞன் பிற்காலத்தில் உலகம் போற்றும் 'கணிதமேதை'யாக விளங்கினாரென்றால் அது ஒரு சாதாரண வரலாறு அல்ல! இதனைக்கண்டு அகில உலகமே அதிசயித்தது. அதோடு அந்த இளைஞனின் 'கணிதத் திறமையைப் பாராட்டி மேனாட்டவர்கள் அவருக்குப் பல பட்டங்களை அளித்தனர். இப்படிப் பேரும் புகழும் பெற்ற அந்த இளைஞன் தான் ''கணிதமேதை' ஸ்ரீநிவாச ராமானுஜன்''.

தென்னிந்தியாவிலுள்ள பல புண்ணிய க்ஷேத்திரங்களுள் மிகப் பிரசித்தியானது 'குடந்தை' என கூறப்படும் கும்பகோணமும் ஒன்றாகும். அங்கு ஒரு ஜவுளிக்கடையில் சாதாரண குமாஸ்தாவாக மாதம் 20 ரூபாய் சம்பளத்தில் வேலை பார்த்தவர் ஸ்ரீநிவாசய்யங்கார். சொற்ப வருமானத்தில் சிரமத்தோடு குடும்பத்தை நடத்தினார். இவரது மனைவி கோமளத்தம்மாள். இத்தம்பதிகளுக்கு நீண்ட காலமாகக் குழந்தை பிறக்காததனால், குடும்பத்தினர் நாமக்கல்லிலுள்ள ஸ்ரீநாமகிரித் தாயாரை வேண்டினார். இதன் பயனாக இவர்களுக்கு 1887 டிசம்பர் 22இல் (தமிழில் சர்வஜித்து ஆண்டுமார்கழி 9 ஆம் தேதி) ஓர் ஆண் குழந்தையும் பிறந்தது. பெரியோர்கள் குழந்தைக்கு வைத்த பெயர் ராமானுஜன். ஆனால் தாயார் கூப்பிட்டதோ செல்லமாகச் ''சின்னசாமி'' என்றுதான்.

சுமார் இரண்டு வயதான ராமானுஜத்திற்குப் பெரியம்மையும் கண்டது. இதனால் குழந்தையின் முகத்தில் அம்மை வடுக்களும் தெரிந்தன. ராமானுஜனின் தாய்வழிப் பாட்டனார் ஈரோடு 'முத்தண்ணா' என்பவர் சிறிது காலம் காஞ்சிபுரம் 'கொல்லா' கன்னய்யா செட்டிச் சத்திரத்தில் வேலை பார்த்தார். இதனால் ராமானுஜன் ஆரம்பத்துல் காஞ்சிபுரம் தேரடியிலுள்ள ஒரு திண்ணைப் பள்ளியில் கல்வி கற்கச் சேர்க்கப்பட்டார். பின்னர் குடும்பத்தோடு கும்பகோணம் சென்றவர் அங்கு ''காங்கேயன் பிரைமரி பள்ளி'யில் சேர்ந்து படிப்பை முடித்துத் தனது 11ஆம் வயதில் கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலில் சேர்ந்தார். வகுப்புத் தேர்வுகளில் ராமானுஜன் எல்லாப் பாடங்களைவிடக் கணிதப் பாடத்தில் மட்டும் தீவிர கவனம் செலுத்தி நூற்றுக்கு நூறு மார்க்குகளையே பெற்றுவந்தார். அதோடு எட்டாம் வகுப்பு முடிவதற்குள் பிரபல கணித மேதை ''லோணி''யின் கோணங்கள் நூலையும், ஒன்பதாம் வகுப்பில் ''திரிகோண மெட்ரி''யும் கற்று முடித்தார். 'கார்' என்ற கணித மேதையின் 'தூயகணிதம்' முறைகளை வெகு எளிதில் போட்டுக் காட்டினார்.

ராமானுஜன் ஹைஸ்கூல் படிக்கும் மாணவராக இருந்தாலும் கல்லூரியில் படிக்கும மாணவர்களின் கணிதங்களையும் வெகு எளிதில் போடும் திறமையும் பெற்றார். தனது 16ஆம் வயதில் மெட்ரிகுலேஷனில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று, பின்னர் கும்பகோணம் காலேஜில் 'ஏப்.ஏ' வகுப்பு சேர்ந்தார். அப்போது காலேஜில் மாணவர்களை ஊக்குவிக்க ''ஜூனியர் சுப்பிரமணியம் ஸ்காலர்ஷிப்'' என்ற பெயரில் ஓர் உதவித் தொகையும் அளித்தனர். வறுமையிலுள்ள ராமானுஜன் மிக்க சிரமத்தோடு படித்து அந்த உதவித் தொகையும் பெற்றார். ராமானுஜன் கணிதத்தில் காட்டிய ஆர்வத்தை மற்றப் பாடங்களில் செலுத்தாததால் அந்த ஆண்டு ''எப்.ஏ'' தேர்வில் தேறவில்லை. மிகுந்த வருத்தத்தோடு மீண்டும் ''எப்.ஏ'' தேர்வு எழுதச் சென்னைக்கு வந்து இங்கு பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தார்.

அவரால் பாடப் புத்தகங்களை வாங்கவும் முடியவில்லை. சம்பளம் கட்ட முடியாமல் கஷ்டப்பட்டார். ஆனால் இவரது கணிதத் திறமையைக் கண்ட கல்லூரி முதல்வர் ஜே.ஏ. யாடஸ்துரை ராமானுஜத்துன் மீது விசேஷ அக்கறை எடுத்து, அவருக்கு மறைமுகமாக அரை ஸ்காலர்ஷிப் அளித்து வந்தார். ஆனால் திடீரென்று அவருக்கு உடல் நலன் பாதிக்கவே அந்த ஆண்டும் 'எப்.ஏ' தேர்வு எழுத இயலாமல் போய்விட்டது. அடுத்து மூன்றாம் முறையாக பிரைவேட்டாக 'எப்.ஏ. தேர்வு எழுதினார். இதில் அவர் கணிதத்துல் சதம் மார்க்குகள் பெற்று இதரப் பாடத்தில் குறிப்பாக ஆங்கிலக் கட்டுரையில் குறைவான மார்க்குகள் பெறவே, மூன்றாம் தடவையும் அவர் தேர்ச்சி பெற இயலாமல் போய்விட்டது. மிகுந்த வருத்தம் அடைந்தபோது தாயார் கோமளத்தம்மாளும், கும்பகோணம் கல்லூரிப் பேராசிரியர் பி.வி.சேஷு ஐயரும் ராமானுஜத்திற்குத் தேறுதல் கூறி மேலும் கணிதப் பாடத்தையே ஊக்கமாக ஆராயும்படி கூறினர். ராமானுஜனும் தனது நேரங்களைக் கணிதத்திலேயே கழித்து புதுப்புது முறைகளையெல்லாம் கண்டு அவைகளையெல்லாம் தனது நோட்டுப்புத்தகத்தில் குறித்துக் கொண்டார்.

ராமானுஜத்திற்குத் திருமண வயதும் நெருங்கியது. தாயார் கோமளத்தம்மாள் தன் விருப்பப்படியே தன் மகனுக்கு ராஜேந்திரம் ரங்கசுவாமி ஐயங்காரின் நான்காவது புதல்வியான ஜானகியைத் திருமணம் செய்வித்தார். அப்போது ராமானுஜத்திற்கு வயது 21. மனைவி ஜானகிக்கு வயது 10. திருமணத்திற்குப்பின் ராமானுஜன் வேலைக்காகப் பல இடங்களில் அலைந்தும் எங்கும் ராமானுஜருக்கு ''வேலை காலி இல்லை'' என்றே எதிரொலித்தன! திருக்கோயிலூர் டெபுடி கலெக்டராக இருந்த ராமசாமி ஐயரும் ஒரு கணித மேதை; அவ

ரிடம் சென்ற ராமானுஜன் தனது குடும்ப நிலவரத்தைக் கூறி, தனது கணித நோட்டுப் புத்தகங்களைக் காட்டி, தனக்கு எங்கேயாவது ஒரு வேலைக்குச் சிபாரிசு செய்யும்படி வேண்டினார். ராமானுஜத்தின் கணித நோட்டுப் புத்தகங்களைப் பார்வையிட்ட அவர் வியப்படைந்து, சென்னை அகௌண்ட்ஸ் ஜெனரல் ஆபீசில் மாதம் 20 ரூபாய் சம்பளத்திற்குக் குமாஸ்தா வேலைக்கு ஏற்பாடும் செய்தார்.

ராமானுஜன் வேலையிலிருந்து கொண்டே திருக்கோயிலூர் ராமசாமி ஐயரால் தொடங்கப்பட்ட ''இநதிய கணிதச் சங்க சஞ்சிகை''யில் பல கணித ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டார். தவிர ''பெர்நௌலியன் எண்கள்'' என்ற சிறப்புக் கட்டுரை இந்தியாவிலுள்ளபலகணித விரிவுரையாளர்களை வியப்பில் ஆழ்த்தியது. இச்சமயம் ''சென்னைத் துறைமுக அலுவலகத்தில் வேலை காலியாக இருப்பதை அறிந்த அவர், அந்த உத்தியோகத்திற்கு மனுச் செய்தார். ராமானுஜத்தின் மனு ஏற்கப்பட்டது. மாதம் 30 ரூபாய் சம்பளத்தில அவர் வேலைக்குச் சேர்ந்தார். குடும்பத்திற்கு வருமானம் போதாமலிருக்கவே ராமானுஜன் சில மாணவர்களுக்குக் கணிதப் பாடம் தனிப்பட்ட முறையில் சொல்லித்தந்து அதன் மூலம் சிறுவருவாயும் தேடிக்கொண்டார்.

1912 டிசம்பரில் இங்கிலாந்து தேசத்தைச் சேர்ந்த பிரபல கணிதமேதை ஜி. எச். ஹார்டி, மேனாட்டுக் கணித சஞ்சிகையில் சில சிக்கலான கணிதப் புதிர்களை வெளியிட்டு அவற்றிற்குச் சரியான விடைகளையும் கேட்டிருந்தார். அப் புதிர்களுக்கு ராமானுஜமும் எளிய வழி முறைகளில் சரியான விடைகளை எழுதியும், வேறு சில புதிர்களைஎழுதியும், அத்துடன் தனது ஏழ்மை நிலைமையைப் பற்றிக் கடிதம் எழுதிநேரிடையாகப்பேராசிரியர் ஹார்டியின் பெயருக்கே அனுப்பினார். லண்டனில் ஹார்டி தன் புதிர்களுக்காக உலகின் பல பாகங்களிலிருந்து வந்த அத்தனை விடைகளிலும் சென்னையில் துறைமுக அலுவலகத்தில் சாதாரண குமாஸ்தாவாகப் பணியாற்றும் ராமானுஜன் அனுப்பிய விடையைக் கண்டு வியப்படைந்தார். இப்படிப்பட்ட அபாரக் கணிதத் திறமை அவருக்கு எப்படி ஏற்பட்டது என்றெண்ணினார்.

பின்னர் ஹார்டி, இலண்டனிலுள்ள இதரக் கணித மேதை



ராமானுஜனின் மனைவி ஜானகி

களுடன், ராமானுஜன் அனுப்பிய கணித விடைகளையும், புதிர்களையும் ஆய்வு நடத்தினார். அனைவருமே வியப்படைந்தனர். உடனே பேராசிரியர் ஹார்டி ராமானுஜனை இலண்டனுக்கே வந்து கணித ஆராய்ச்சிகளை நடத்தும்படி விசேஷ அழைப்பும் அனுப்பினார். இதற்கிடையில் சென்னைக்கு வந்திருந்த இந்திய வானிலை ஆராய்ச்சிக் கழகத் தலைவர் ஜில்பர்ட்-டி-வாக்கர், ராமானுஜத்தின் கணித நோட்டுப் புத்தகங்களைப் பார்வையிட்டு வியந்து, அவரை ஒரு கணித ஆராய்ச்சி மாணவராகச் சேர்த்துக் கொள்ளும்படி சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளருக்குச் சிபாரிசும் செய்தார். '' துறைமுக அலுவலகத்தின் தலைவரான சர் பிரான்சிஸ்-ஸ்பிரிங் கணிதத்தில் உலகமே வியக்கக்கூடிய திறமை படைத்த நபர் தனது அலுவலகத்தில் ஒரு சாதாரணக் குமாஸ்தாவாகப் பணியாற்றுவதைக் கண்டு தீவிரமாக யோசித்து, ராமானுஜனை உலகக் கணித அரங்கில் அறிமுகப்படுத்துவதற்குப் பெரிதும் அக்கறை எடுத்துக்கொண்டார்.

ஜில்பர்ட்-டி -வாக்கரின் சிபாரிசுப்படி, சென்னைப் பல்கலைக் கழகமும் ராமானுஜத்திற்கு உதவிகளைச் செய்ததோடு அவரைக் கணித ஆராய்ச்சி மாணவராகவும் சேர்த்துக் கொண்டது. இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஈ.எம்.நெவில் 1914இல் ஜனவரியில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் சொற்பொழிவு நிகழ்த்த வந்தார். அவரிடம் பேராசிரியர் ஹார்டி, சென்னையிலுள்ள ராமானுஜத்தை நேரிடையாகச் சந்திக்கும்படியும் அவரை எப்படியாவது இலண்டனுக்கு வருமாறு தெரிவிக்கும்படியும் சொல்லியனுப்பியிருந்தார். சென்னைக்கு வந்த நெவிலும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் ராமானுஜனைச் சந்தித்து அவருடைய கணித நோட்டுப் புத்தகங்களைப் பார்வையிட்டு வியப்படைந்தார். உடனே அவர் ராமானுஜத்தினிடம், ''நீங்கள் இங்கிலாந்து நாட்டிற்கே வந்து அங்குக் கணித ஆராய்ச்சிகளை நடத்தினால் கணித உலகம் பல வழிகளில் பெருமை அடையும்.'' என்று தெரிவித்ததுடன், பேராசிரியர் ஜி. எச். ஹார்டியின் அழைப்பைத் தெரிவித்து இங்கிலாந்துக்கு வருமாறு அழைத்தார். ஆனால் ராமானுஜமோ, தான் வைதீகக் குடும்பத்தைச் சேர்ந்தவன் ஆதலால் தனது பெற்றோரின் சம்மதத்துடன் தங்கள் குல தெய்வமான நாமக்கல் ஸ்ரீநாமகிரித்தாயாரின் உத்திரவும் கிடைத்தால்தான், இலண்டன் பயணத்தை ஏற்க முடியும்'' என்றார். இதன்படியே நெவிலும் மற்றும் போர்ட் டிரஸ்டு சேர்மன் சர் பிரான்சிஸ் ஸ்பிரிங்கும் இருவருமாக ஒப்புக் கொண்டனர்.

நாமக்கல்லுக்குச் சென்ற ராமானுஜத்திற்கு ஸ்ரீநாமகிரித் தாயாரின் பேரருள் கிடைத்தது. தனது பெற்றோர்களின் சம்மதமும் பெற்ற ராமானுஜனின் இலண்டன் பயணமும் உறுதியாகியது. ராமானுஜன், தான் 25 ஆண்டுகளாக அருமையாக வளர்த்தகுடுமியைக் 'கிராப்'பாக மாற்றிக் கொண்டார். வேஷ்டி ஷர்ட், உருவத்திலிருந்த அவர் பேன்ட், கோட்டு, டை உருவத்திற்கு மாறினார். 1914 மார்ச் 17இல் ராமானுஜன் சென்னைத் துறைமுகத்திலருந்து ''எஸ்.எஸ். நேவேஸா''கப்பல் மூலம் இலண்டனுக்குப் பயணமானார். பல ஆங்கிலேயர்கள் தங்கள் தங்கள் குடும்பத்தோடு வந்து ராமானுஜனை வழியனுப்பினர். கடலில் 27 நாட்கள் பயணம் செய்த அவர் ஏப்ரல் 14ல் இலண்டனை அடைந்தார். அங்கு பேராசிரியர் நெவில் மற்றும் பலகணிதமேதைகள் ராமானுஜத்தை ஆர்வத்துடன் வரவேற்றனர்.

பின்பு பேராசிரியர் ஜி.எச். ஹார்டி, ராமானுஜனை அன்போடு கட்டித்தழுவி, வரவேற்று, பிறகு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்துடன் இணைந்த ''டிரினிடி'' காலேஜில்கணித ஆராய்ச்சி மாணவராகச் சேர்த்தார். ராமானுஜனும் ஆராய்ச்சியில் தனது கணிதத் திறமையை வெளிப்படுத்தினார். ஹார்டியே மேலும் வியப்படைந்தார். உடனே அவர் ராமானுஜத்தின் கணிதத் திறமை இதர நாட்டவர்களும் அறியும் பொருட்டு அவருக்குப் பிரெஞ்சு, லத்தீன், ஜெர்மன் மொழிகளையும் கற்றுத் தந்தார். இதனால் ராமானுஜத்தின் கணித மேதைத் தன்மை வெளிநாடுகளிலும் பிரதிபலித்தது. மேநாட்டினர் இது

வரையில் எவருமே கண்டிராத கணித நுணுக்கங்களை ராமானுஜன் வெளிப்படுத்தியதைக் கண்டு, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளிலுள்ள கணித மேதைகளும், பத்திரிகைகளும், ''ராமானுஜன் ஓர் அற்புத இந்தியக் கணித மேதை'' என்றுபாராட்டினர். இலண்டனில் ஹார்டி, ராமானுஜத்துடன் இணைந்து கண்டுபிடித்த கணக்குப் புதிருக்கு ''ஹார்டி-ராமானுஜன் கண்டுபிடிப்புகள்'' எனப் பெயரிட்டு அதனைப் பிரபலப்படுத்தினார். அதோடு, இலண்டன் கணிதச் சங்கங்களின் முன்னிலையில் ஹார்டி ராமானுஜத்தின் கணிதத் திறமையை விமர்சனமும் செய்தார்.

சென்னை ராஜதானியில் மூன்று முறைகள்''எப்.ஏ.''வகுப்பில் தேறாத ராமானுஜனுககு அவருடைய கணிதத் திறமை ஒன்றையே பெரிதாய் மதித்து அவருக்கு ''பி.ஏ.'' பட்டம் அளித்துக் கௌரவித்தது இலண்டன் நகரம். ஆனால் ராமானுஜத்திற்கு அந்நாட்டு சீதோஷ்ணம் ஒத்துக் கொள்ளவில்லை. தவிர மேலும் அவர் தீவிர சைவம்; சொந்தமாகவே சமைத்துச் சாப்பிட்டு வந்தார். திடீரெனறு அவரது உடல் நிலையும் பாதித்தது. முதலில் ஒரு ஸானிடோரியத்திலும் பின்னர் மாட்லாக் நர்சிங் ஹோமிலும் சேர்ந்து சிகிச்சை பெற்றார். இருப்பினும் அவரைத் தாக்கிய காசநோய் குணமாகும் வழியைக் காணோம். அப்படியிருந்தும் அவர் படுக்கையிலிருந்தவாறே தனது கணித ஆராய்ச்சிகளை நடத்திக் கட்டுரைகளை மேனாட்டுப் பத்திரிகைகளில் வெளியிட்டு வந்தார். ராமானுஜத்தின் கணிதத் திறமையைப்



கணித மேதை ஜி.எச். ஹார்டி

பெரிதும்பாராட்டிய''இலண்டன் ராயல் சொஸைடி''யினர் அவருக்கு ''ஃபெலோ ஆப் ராயல் சொஸைடி'' என்ற பெரும் புலவர் (F.R.S.) கௌரவப் பட்டமும் அளித்தது. 31 வயதில் இம்மாபெரும் விருதைப் பெற்ற முதல் இந்தியரும், தமிழரும் ராமானுஜம்தான்.

ராமானுஜத்தின் கணிதத் திறமைக்கும், அவர் ''பெரும் புலவர்'' பட்டம் பெற்றதற்காகவும், சென்னைப் பல்கலைக் கழகம் அவருக்கு ரூ. 3,750 கௌரவ சன்மானம் அளிப்பதாகத் தெரிவித்தது. இதற்கு நன்றி தெரிவித்த ராமானுஜன் தனக்கு அளிக்கும் உதவித் தொகையில், தனது தாயாருக்கு ரூ. 60 அளிக்கும்படியும், மிகுதித் தொகையை ஏழை மாணவர்களுக்கு உதவும்படியும் தெரிவித்து விட்டார்.

திடீரென ராமானுஜத்திற்கு உடல் மேலும் மோசம் அடைந்தது. உடனே அவர் இந்தியா திரும்ப விரும்பினார். 1919 மார்ச் 13இல் உலகம் போற்றும் ''கணித மாமேதை ராமானுஜன்'' இலண்டனிலுள்ள தனது நண்பர்களிடமெல்லாம் பிரியா விடை பெற்று ''எஸ். எஸ். நகோயா கப்பல் மூலம் புறப்பட்டார். சுமார் 15 நாட்கள் கடல் பயணம் செய்து மார்ச் 17இல் பம்பாய் வந்தடைந்தார். பின்னர் ரயில் மார்க்கமாகச் சென்னை வந்தடைந்தார். சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் புகழ்பெற்ற வழக்கறிஞரும், தேசாபிமானியுமான எஸ்.ஸ்ரீநிவாசய்யங்கார் தலைமையில் ராமானுஜத்திற்கு மகத்தான வரவேற்பும அளிக்கப்பட்டது.

மருத்துவச் சிகிச்சைக்காகச் சில காலம் கொடுமுடி, கோயம்புத்தூர், கும்பகோணம் ஆகிய ஊர்களில் தங்கிய அவர் மீண்டும் சென்னைக்கு வந்து சேத்துப்பட்டு ஹாரிங்டன் சாலையிலுள்ள ''கோமித்ரா'' பங்களாவில் தங்கி சிகிச்சை பெற்று வந்தார். 1920 ஏப்ரல் 26ந் தேதி காலை 10.30க்கு அகாலமரணம் அடைந்தார். அப்போது அவருக்கு வயது 32. மனைவி ஜானகி அம்மாளுக்கு வயது 20. இத்தம்பதிகளுக்குச் சந்ததி ஏதும் ஏற்படவில்லை. தற்போது சுமார் 88 வயதான ஜானகி அம்மாள், சென்னையில் மிகவும் எளிமையுடன் தனது வளர்ப்பு மகன் நாராயணன் குடும்பத்தோடு வாழ்ந்து வருகிறார். நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் 'கணிதமேதை' ராமானுஜத்தின் புகழ், உலகில் கணிதம் உள்ள வரையில் புகழுடன் விளங்கும்.

# நூல் நயம்

## முன்னேறுவது எப்படி?

ஆசிரியர்: டாக்டர் மு.முத்துக் காளத்தி,
விற்பனை உரிமை: பாரி நிலையம்
184, பிராட்வே,
சென்னை-600 108
விலை ரூ. 8 பக்கம்: 80

ஒரு மனிதன், தனது வாழ்க்கைப் பயணத்தில் முன்னேறிச் செல்வதற்கு உரிய வழிமுறைகளை இந்நூல் எடுத்துக் கூறுகிறது. தனது சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்கள், உடன் பழகும் நண்பர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் ஆகியவற்றைத் துணைக் கழைத்து வைத்துக்கொண்டு நூலை உருவாக்கியிருக்கிறார் ஆசிரியர்.

துள்ளி ஓடும் நடை இந்நூலுக்குத் தனிச் சிறப்பு; அள்ளிக் குவித்து வைக்கப்படும் அரிய செய்திகள், அடுத்த சிறப்பு.

எளிதில் கடைப்பிடிக்க முடிந்த போதனைகள் பலவற்றை எடுத்துக்கூறி மனிதனைச் சாதனைக்குரியவனாக்கும் முயற்சியில் நூலாசிரியர் ஈடுபட்டிருக்கிறார். மொத்தத்தில் இந்நூலைப் படிப்பதனால் வேதனை விலகுகிறது. வெளிச்சம் தெரிகிறது.

—எஸ். எஸ். சுந்தரம்

## அண்ணா வழிச் சிறுகதைகள்

தொகுப்பாளர்: ப.புகழேந்தி
வெளியீடு: பூர்ணிமா பதிப்பகம்,
சென்னை-600014
விலை: ரூ.16 பக்கங்கள்:216

பேரறிஞர் அண்ணாவின் கதையில் சீர்திருத்த மணம் கமழும் என்பது உலகறிந்த செய்தி. அவரைப் போன்ற பல எழுத்தாளர்கள் சீர்திருத்தநோக்குடன் கதை எழுதி வருகிறார்கள். அத்தகைய எழுத்தாளர்கள் 15 பேர்களின் சிறுகதைகளையும்-அவற்றிற்கு கிரீடம்போல அண்ணாவின் கதையையும் தொகுத்து 16 சிறுகதைகளுடன் இந்த நூலை உலா வரச் செய்திருக்கிறார் தொகுப்பாளர். பாவேந்தர் பாரதிதாசன் போல் கவிதை எழுதிய கவிஞர்கள் பாரதிதாசன் பரம்பரை என்று வழங்கப்பட்டது போல-அண்ணாவைப்போல் சிறுகதை எழுதும் எழுத்தாளர்கள் அண்ணா வழி எழுத்தாளர்கள் எனக் குறிப்பிடப் பெறுவது பொருத்தமானது. சுவையான கதைகளின் தொகுப்பு இந்நூல், ஒவ்வொரு கதையும் ஒரு நல்முத்து.

—அ. மருதவிநாயகம்

மாணவர் பக்கம்

# அறிவுச்சுடர்

ஒரு சராசரி மனிதனின் உடலிலுள்ள நீரின் சதவீதம் என்ன?
—92 சதவீதம்.

பிளீச்சிங் (Bleaching) தூளின் இரசாயனப் பெயரென்ன?
—கால்சியம் ஆக்ஸிகுளோரைடு.

மலையைக் குடைந்து அமைக்கப்பட்ட மிக நீளமான ரயில் பாதை எங்கிருக்கிறது?
—ஸ்விஸ் நாட்டில், 12 மைல்.

அமெரிக்க தேசியக் கொடியில் எத்தனை நட்சத்திரங்கள் உள்ளன?
—ஐம்பது.

இந்தியாவில் மிகப்பெரிய மிருகக் காட்சிச் சாலை எங்குள்ளது?
—அலிப்பூரில்.

தென்கிழக்கு ஆசியாவில் பெரிய மருத்துவமனை உள்ள ஊர்எது?
—வேலூர்.

சிலந்திக்கு எத்தனைக் கால்கள்?
—எட்டுக் கால்கள்.

இரவில் மரத்தடியில் தூங்குவது சரியில்லை, ஏன்?
—மரங்கள் இரவில் கரியமில வாயுவை வெளிப்படுத்துகின்றன.

இந்தியாவில் அணுசக்தி நிலையங்களை அமைக்க ஏற்பாடு செய்தவர் யார்?
—பாபா.

பேக்கலைட் தயாரிக்கத் தேவையான பொருள் எது?
—பீனால்.

ஆட்டின் வாழ்க்கை எத்தனை ஆண்டு
—17 ஆண்டு.

குதிரையின் வாழ்க்கை எத்தனை ஆண்டு?
—27 ஆண்டு.

நாயின் வாழ்க்கை எத்தனை ஆண்டு?
—17 ஆண்டு.

புவியீர்ப்பு திடீரென்று இல்லாமல் போனால் என்ன நடக்கும்?
—பூமியில் வாழும் உயிரினங்கள் வானத்தில் மிதக்கும்.

நம் நாட்டில் சோப்பு தயாரிக்க எதைப் பயன்படுத்துகிறார்கள்?
—தேங்காய் எண்ணெய்,
கடலை எண்ணெய்
பருத்தி எண்ணெய்,
மாமிசக் கொழுப்பு.

மின் பல்பில் டங்ஸ்டன் இழை பயன்படுவதற்குக் காரணங்கள் யாவை?
—(1) அதிக மின்தடை,
(2) உயர்ந்த உருகு நிலை 3400 டிகிரி செ.

வானொலி ஒலிபரப்பிற்கு எவ்வித அலைகள் பயன்படுகின்றன?
—மின்காந்த அலைகள்.

வெகு தொலைவிற்குச் செல்லக் கூடிய அலைகள் யாவை?
—சிற்றலைகள்.

கண்ணினுள் புகும் கதிர்கள் எங்கு பிம்பத்தை உண்டாக்குகின்றன?
—விழித்திரை.

கண்ணின் இரு குறைபாடுகள் யாவை?
—கிட்டப் பார்வை,
தூரப்பார்வை.



## விளையும் பயிர்:

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், செம்பனூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்புப் பயிலும் மாணவி சி. ராஜேஸ்வரி.

பேச்சுப் போட்டிகளிலும், பட்டிமன்றங்களிலும் கலந்து கொண்டு பரிசுகளும், சான்றிதழ்களும் பெற்றுள்ள இம்மாணவி, மாறுவேடப் போட்டியிலும் பரிசு பெற்றுள்ளார்.




பல்லவன்

ஆல மரமோ விழுதூன்றி
அடி மரத்தைத் தொழுகிறது!
நீல வானோ மழைபொழிந்து
நிலத்தைத் தொட்டு மகிழ்கிறது!

விளைந்த கதிரோ தலைதாழ்த்தி
விளை நிலத்தைத் துதிக்கிறது!
மலர்ந்த பூவோ பூமிக்கு
மாலை விட்டு மதிக்கிறது!

வளர்ந்த வாழை தாய்மண்ணை
வணங்கிக் குலையைக் கொடுக்கிறது!
புலர்ந்த தாமரை செங்கதிர்க்குப்
புனிதச் சிரிப்பைப் படைக்கிறது!

வாழ்விப் போர்க்கு நாய்க்குலமோ
வாலால் நன்றி நவில்கிறது!
பாழும் மனித குலம்ஏனோ
நன்றி மறந்து வாழ்கிறது.

# தந்தை பெரியார் புரட்சி மொழிகள்!



★ மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு.

★ பகுத்தறிவு என்பது மனிதனுக்கு உயிர்நாடி.

★ மூட நம்பிக்கையும் குருட்டுப் பழக்கமும் சமூகத்தின் முதல்பகைகள்.

★ விதியை நம்பி மதியை இழக்காதே.

★ மக்களின் ஒழுக்கத்தையும் மதியையும் கெடுப்பது மது.

★ மனிதப் பண்பை வளர்ப்பதே என் வாழ்நாள் பணி.

★ பிறருக்குத் தொல்லை தராதவாழ்வே ஒழுக்க வாழ்வு.

★ பக்தி இல்லாவிட்டால் இழப்பில்லை. ஒழுக்கம் இல்லாவிட்டால், எல்லாம் பாழ்.

★ தீண்டாமை ஒழிய வேண்டுமானால், சாதி ஒழிய வேண்டும்.

★ கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.

★ பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு அளவுக்கு மீறிய நாணயமும், கட்டுப்பாடும், உறுதியும், தியாக உணர்வும் வேண்டும்.

★ ஒரு நாடு சுபிட்சத்துடன் வாழ வேண்டுமானால், அந்நாட்டு மக்கள் ஒழுக்கமுள்ளவர்களாக இருத்தல் அவசியம்.

★ ஒழுக்கக் குறைவுக்கும் மூட நம்பிக்கைக்கும் எப்படிப்பட்ட கலையும் பயன்பட்டு விடக்கூடாது.

★ வாழ்க்கை அவனவன் வாழ்வதற்கு என்று மட்டும் கருதக்கூடாது. மற்றவர்கள் நலனுக்கும் என்று கருத வேண்டும்.

★ ஒருவன் தன்னிடம் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென எதிர் பார்க்கிறானோ, அப்படி எல்லாரிடமும் தான் நடந்து கொள்வதே ஒழுக்கமாகும்.

★ பிறருக்கு ஒழுக்கத்தைப் பற்றிச் சொல்வதைவிட, தன்னிடத்து அது எவ்வளவு இருக்கிறது என்று ஒவ்வொருவரும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

★ என்னைப் பொறுத்தமட்டில், நான் ஒழுக்கத்துடன் நடந்தால், உண்மையை ஒளிக்காமல் எதையும் நேர்மையுடன் கடைப்பிடித்தால், அதற்குத் தனிசக்தி உண்டு என்பதை நம்புகிறவன்.

★ எனது சீர்திருத்தம் என்பதெல்லாம் பகுத்தறிவைக் கொண்டு, ஆராய்ச்சி செய்து, சரி என்று பட்டபடி நட என்பதேயாகும்.

★ மற்றவர்களிடம் பழகும் விதத்தையும், ஒழுக்கத்தையும் சிறு வயதிலேயே நன்றாக ஒருவன் கற்றுக்கொண்டானானால், அவனே வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான்.

★ உனக்குப்பெருமை வேண்டுமானாலும் உற்சாகம் வேண்டுமானாலும், பிற மனிதனுக்குத் **தொண்டு** செய்வதில் போட்டி போடுவதன் மூலம் தேடிக்கொள்.





ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



# தமிழகத்தில் புதுமையான தொழிற் புரட்சி!

## டிட்கோவின் எதிர்காலத் தொழிற் திட்டங்கள்

- ரூ. 125 கோடி செலவில் கண்ணாடி (ஃப்ளோட் கிளாஸ்) தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 18 கோடி மூலதனத்தில் டெலிபோன் கேபிள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 250 கோடி செலவில் உருவாகும் 210 மெகாவாட் திறனுடைய மின் நிலையம்.
- ரூ.5.5 கோடி செலவில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து ப்ரக்டோஸ் திரவம் உற்பத்தி செய்யும் தொழிற்திட்டம்.
- ரூ. 6 கோடி செலவில் இண்டஸ்ட்ரியல் டைமண்ட் தொழிற்திட்டம்.
- ரூ. 40 கோடி செலவில் உருவாகும் 'பென்சிலின்' மருந்து தயாரிக்கும் தொழிற்திட்டம்.
- ரூ. 25 கோடி மூலதனத்தில் உருவாக்கப் படவிருக்கும் லாம்ப் மற்றும் லாம்ப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 10 கோடி செலவில் பேப்பர் லாமினேடட் எச்.டி.பி.இ. (HDPE) பைகள் தயாரிக்கும் தொழிற் திட்டம்
- ரூ. 12 கோடி மூலதனத்தில் உருவாகும் செராமிக் டைல்ஸ் தொழிற் திட்டம்



ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்
தலைவர்

டிட்கோ

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
735, அண்ணா சாலை, சென்னை-600 002